வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959 Reg. No. : P. 1632 விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu ඊළනාඩු



மாருதி Money Exchange (Pvt) Ltd.
இல.390, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
T.P: 021 221 4433
076 284 4443
இல.285, காலி வீதி, வெள்ளவத்தை, கொழும்பு 06
T.P: 011 236 2086
இவ் அனைத்து சேவைகளையும் இங்கு பெற்றுக் கொள்ளலாம்.
MoneyGram மணிகிறாம் பணப்பரிமாற்றம்
Ria Money Transfer றியா பணப்பரிமாற்றம்
Western Union வெஸ்ரேண் யூனியன் பணப்பரிவர்த்தனை

Email : news@eelanadu.lk மலர் : 04 11.02.2023 சனிக்கிழமை இதழ் : 64 பக்கங்கள் : 16

## இன்று திறக்கப்படுகின்றது யாழ். கலாசார நிலையம்

### ஜனாதிபதி, பிரதமர், இந்திய அமைச்சர் எனப் பல முக்கியஸ்தர்கள் பங்கேற்பர்



யாழ்ப்பாணம், பெப். 11

இந்திய - இலங்கை நட்புறவுக்காக அமைக்கப்பட்ட கலாசார மத்திய நிலையம் இன்று சனிக்கிழமை காலை 9 மணிக்கு திறந்து வைக்கப்படவுள்ளது. அத்துடன், இன்று மாலை நாட்டின் 75ஆவது தேசிய சுதந்திர தினமும் அங்கு கொண்டாடப்படவுள்ளது.

இந்த நிகழ்வில், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, பிரதமர் தினேஷ் குணவர்த்தன, இந்திய இணை மத்திய அமைச்சர் எல். முருகன் , இந்தியாவை ஆளும் பா. ஜ. கவின் 15

## இந்திய துணைத் தூதரகத்தை கிழக்கில் அமைக்க வேண்டும்!

### இந்திய அமைச்சரிடம் ஆறு.திருமுருகன் கோரிக்கை

யாழ்ப்பாணம், பெப். 11

கிழக்கு மாகாணத்தில் இந்தியத் துணைத் தூதரகம் ஒன்றை அமைக்க வேண்டும் எனக் கோரிக்கை முன்வைத்துள்ளார் அகில இலங்கை இந்து மாமன்றத்தின் உப தலைவர் கலாநிதி ஆறு. திருமுருகன். அத்துடன், திருக்கோணேஸ்வரம் ஆலயத்தை இந்திய அரசாங்கம் பொறுப்பேற்று பாதுகாக்க நடவடிக்கை வேண்டும் என்றும் கோரினார். 15

## ஜனாதிபதியின் வருகையை எதிர்த்து இன்று போராட்டம்!

### யாழ். பல்கலை. மாணவர்கள் த. தே. ம. முன்னணி விடுத்தன!

யாழ்ப்பாணம், பெப். 11

யாழ்ப்பாணத்தில் கலாசார நிலையம் கையளிப்பு மற்றும் தேசிய சுதந்திர தின விழா இன்று சனிக்கிழமை நடைபெறவுள்ளது. ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வுக்கு எதிர்ப்பு தெரிவித்து போராட வருமாறு யாழ்ப்பாண பல்கலைக்கழக மாணவர்கள், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி என்பன விடுத்துள்ளன.

தமிழ் மக்களின் பிரச்னைகளுக்கு இது வரை காலமும் தீர்வு வழங்கப் 15

# யாழ். கலாசார நிலையத்தை தமிழரிடமே கையளியுங்கள்!

## பா. ஜ. க.வின் அண்ணாமலையிடம் ஆறு. திருமுருகன் பகிரங்க கோரிக்கை!

யாழ்ப்பாணம், பெப்ரவரி 11

"தமிழர்களின் மண்ணில் தமிழருக்காக இந்திய அரசாங்கத்தால் கட்டிக்கொடுக்கப்பட்ட கலாசார மண்டபத்தைத் தமிழர்களிடம் கையளிக்க வேண்டும். அதற்கு நீங்கள் நடவடிக்கை எடுக்கவேண்டும்", - இவ்வாறு பாரதிய ஜனதா கட்சியின் தமிழ் நாடு தலைவர் கே. அண்ணாமலையிடம் பகிரங்கமாகக் கோரிக்கை விடுத்துள்ளார் ஆறு. திருமுருகன். 15



## இன்றைய போராட்டத்துக்கு நீதிமன்றம் தடை விதிப்பு!

யாழ்ப்பாணம், பெப். 11

யாழ்ப்பாணம் மாநகரில் இன்று சனிக்கிழமை நடைபெறும் சுதந்திர தின விழாவுக்கு எதிர்ப்புத் தெரிவித்து நடத்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ள போராட்டத்துக்கு நீதிமன்றம் தடை உத்தரவு பிறப்பித்துள்ளது.

யாழ்ப்பாணம் தலைமையக பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி முன்வைத்த விண்ணப்பத்துக்கு இந்த தடை உத்தரவு வழங்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் கலாசார நிலையத்தில்இன்று நடைபெறும் சுதந்திர தின விழாவில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க 15

## இலங்கையிலும் நிலநடுக்கம்!

கொழும்பு,பெப். 11

புத்தல, வெள்ளவாய மற்றும் ஹந்தபனகல பிரதேசங்களில் 3.0 ரிச்டர் அளவில் நேற்று சிறிய நிலநடுக்கம் பதிவாகியுள்ளது.

தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவனம் இது தொடர்பான தகவலை வெளியிட்டுள்ளது. இதனால் எந்த ஆபத்தும் இல்லை எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. மக்கள் அச்சமடையத் தேவையில்லை எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## திட்டமிட்டபடி மார்ச் 9 தேர்தல் அனுமதி வழங்கியது நீதிமன்று

கொழும்பு, பெப். 11

உள்ளூராட்சி சபை தேர்தலை திட்டமிட்டபடி நடத்துவதற்கு தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கு உயர்நீதிமன்றம் அனுமதி வழங்கியுள்ளது.

உள்ளூராட்சி மன்றத் தேர்தல் தொடர்பில் உயர்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட மனுக்கள் மீதான விசாரணை நேற்று நடந்தது. இதன்போதே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.


ஓய்வுபெற்ற இராணுவ கேணல் டபிள்யூ. எம். 15

## பருத்தித்துறை முனைக்கு இந்திய அமைச்சரும் வருகை!

வடமராட்சி, பெப். 11

யாழ்ப்பாணம் வந்துள்ள இந்தியாவின் மத்திய இணை அமைச்சர் எல். முருகன் நேற்று வடமராட்சி - பருத்தித்துறை முனையை நேரில் பார்வையிட்டார்.

நேற்று மாலை 5.30 மணியளவில் இந்திய அமைச்சர் தலைமையிலான குழுவினர் 15




## 10 ஆண்டுகளில் வடக்கில் பல்வேறு அபிவிருத்திகள்!

### யாழில் ஜனாதிபதி தெரிவிப்பு

யாழ்ப்பாணம், பெப். 11

வடக்கு மாகாணத்தில் அடுத்து வரும் பத்து ஆண்டுகளுக்குள் விவசாயம், கடற்றொழில், சுற்றுலா துறைகளை மேம்படுத்து வதற்கும், நவீன தொழில்நுட் பத்தை பின்பற்றவும் அரசாங்கம் திடசங்கற்பம் பூண்டுள்ளது. இன்று நாட்டில் நிலவுகின்ற பொருளாதார நிலையில் இருந்து 15



உள்ளூராட்சி சபை தேர்தல் - 2023
தமிழ் தேசிய கூட்டமைப்பு
தமிழின ஆன்மாவின் ஒருமித்த சின்னம்!
ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணி
கட்டணம் செலுத்தப்பட்ட விளம்பரம்

### கலாசார நிலையம் கையளிக்கும் நிகழ்வு:

# யாழ். மாநகர சபையினரை திட்டமிட்டுப் புறக்கணிப்பு!

யாழ்ப்பாணம், பெப். 11

**இந்திய அரசாங்கத்தால் அமைக்கப்பட்ட யாழ்ப்பாணம் கலாசார நிலையம் இன்றைய தினம் யாழ்ப்பாண மக்களுக்கு உவந்தளிக்கப்படவுள்ளது. இந்த நிகழ்வில் யாழ்ப்பாணம் மாநகர சபை திட்டமிட்டுப் புறக்கணிக்கப்படுகிறது என்று குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.**

யாழ்ப்பாணம் கலாசார நிலையம் கையளிக்கப்படும் இன்றைய நிகழ்வில் யாழ். மாநகர முதல்வரே நன்றி உரை வழங்குவதாக இருந்தது. ஆனால், அமைச்சர் ஒருவர் அதனை வடக்கு மாகாண பிரதம செயலருக்கு வழங்கியுள்ளார். யாழ்ப்பாண கலாசார நிலையத்தின் மீதான மத்திய அரசாங்கத்தின் பிடியை உறுதிப்படுத்தும் நோக்கிலேயே அவ்வாறு செய்யப்பட்டிருப்பதாகவும் கூறப்படுகின்றது. அழைப்பிதழில்கூட யாழ். மாநகர சபையைப் பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் எவருடைய பெயரும் சேர்த்துக் கொள்ளப்படவில்லை என்றும் தெரிய வருகின்றது.

இதேவேளை, இன்றைய தினம் நடக்கும் நிகழ்வில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமை வகிக்க பிரதமர் தினேஷ் குணவர்த்தன, இந்தியாவின் தகவல் - ஒலிபரப்பு, மீன்வளம், கால்நடைப் பராமரிப்பு மற்றும் பால்வளத் துறை இணையமைச்சர் கலாநிதி எல். முருகன், இலங்கைக்கான இந்தியத் தூதுவர் கோபால் பாக்லே, இலங்கையின் புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் விதுர விக்கிரமநாயக்க, மீன்பிடித் துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, வடக்கு மாகாண ஆளுநர் ஜீவன் தியாகராஜா மற்றும் யாழ். மாநகர முதல்வர் இம்மானுவல் ஆனல்ட் ஆகியோரின் பங்குபற்றுதலுடன் "யாழ்ப்பாண கலாசார நிலையம்" இந்திய அரசாங்கத்தினால் யாழ்ப்பாண மக்களுக்கு உவந்தளிக்கப்படவுள்ளது. (ஐ - 03)



# இந்திய அமைச்சர் குழு கேதீச்சரத்தில் வழிபாடு

மன்னார், பெப். 11

இலங்கை வந்துள்ள இந்திய மீன்வள இணையமைச்சர் எல். முருகன், பாரதிய ஜனதா கட்சியின் தலைவர் கு. அண்ணாமலை ஆகியோர் நேற்று வரலாற்று பிரசித்தி பெற்ற மன்னார் திருக்கேதீஸ்வரம் ஆலயத்துக்கு சென்று வழிபாடுகளில் ஈடுபட்டனர்.

இவர்களுடன், யாழ்ப்பாணத்துக்கான இந்திய துணைத் தூதுவர் ராகேஷ் நட்ராஜ் ஜெயபாஸ்கர், இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் கட்சியின் செந்தில் தொண்டமான் ஆகியோரும் கலந்துகொண்டனர்.

இவர்கள் விசேட பூஜை வழிபாட்டில் ஈடுபட்டதோடு, இந்திய அரசின் நிதி உதவியுடன் முன் னெடுக்கப்பட்ட ஆலய கட்டுமானப் பணிகளை பார்வையிட்டதோடு, ஆலய நிர்வாகத்தினருடன் கலந்துரையாடினார்.

தொடர்ந்து மன்னாரில் இடம் பெற்ற இலங்கை - இந்தியா நட்புறவு நாடுகளின் தூதரக ஏற்பாட்டில் மன்னார் மாவட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட பெண் தலைமைத்துவ குடும்பங்களுக்கான உலர் உணவுப் பொதிகளை வழங்கும் நிகழ்வில் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

### கரைதுறைபற்று வேட்புமனு விவகாரம்:

# தமிழரசு கட்சியின் மனுவை நிராகரித்தது உயர் நீதிமன்று

கொழும்பு, பெப். 11

கரைதுறைபற்று பிரதேச சபைக்கான இலங்கை தமிழரசு கட்சி சமர்ப்பித்த வேட்பு மனு நிராகரிப்பை இரத்து செய்யுமாறு கோரி தாக்கல் செய்யப்பட்ட எழுத்தாணை மனு உயர் நீதிமன்றத்தால் நேற்று தள்ளுபடி செய்யப்பட்டது.

தேர்தல் ஆணைக்குழு முன்வைத்த பூர்வாங்க ஆட்சேபனைகளை கருத்தில் கொண்டு இந்த மனுவை நிராகரிப்பதாக எஸ். துரைராஜா, ஷிரான் குணரத்ன மற்றும் ஜனக் டி சில்வா ஆகியோர் கொண்ட நீதியரசர்கள் குழு அறிவித்தது.

முல்லைத்தீவு மாவட்ட தேர்தல் நடத்தும் அதிகாரி, தேர்தல் ஆணைக்குழுவின் தலைவர் மற்றும் ஏனைய உறுப்பினர்களை பிரதிவாதிகளாகக் குறிப்பிடும் வகையில் தமிழரசு கட்சியின் பதில் பொதுச் செயலாளர் பத்மநாதன் சத்தியலிங்கம் மற்றும் இருவர் இந்த எழுத்தாணை மனுவை தாக்கல் செய்தனர்.

கரைதுறைப்பற்று பிரதேச சபைக்கு தமிழரசு கட்சி சமர்ப்பித்துள்ள வேட்புமனுக்களை ஏற்குமாறு தேர்தல் அதிகாரிகளுக்கு உத்தரவிடுமாறும் மனுதாரர்கள் தமது மனுவில் கோரியுள்ளனர்.

மனுதாரர்கள் சார்பில் ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன், சிரேஷ்ட சட்டத்தரணி விரான் கொரயா ஆகியோரும், தேர்தல் ஆணைக்குழு சார்பில் சட்டத்தரணி தர்ஷனி கலுபஹன மற்றும் உஷானி அதபத்து ஆகியோருடன் சிரேஷ்ட சட்டத்தரணி தர்ஷன வெரதுவகேயும் முன்னிலையாகினர். (ஐ)

# சுயகற்றல் ஏடு வெளியீட்டு நிகழ்வு

யாழ்ப்பாணம், பெப். 11

பாரி அறகட்டளையின் "பாரி சுயகற்றல் ஏடு வெளியீட்டு நிகழ்வு" நாளை ஞாயிற்றுக்கிழமை பி. ப. 3 மணிக்கு பண்டத்தரிப்பு காலையடி மறுமலர்ச்சி மன்றத்தின் தியாகராஜா மகேந்திரன் குடும்ப ஞாபகார்த்த உள்ளரங்கில் இடம்பெறவுள்ளது.

பாரி அறக்கட்டளையின் தலைவர் ச.நிகேஸ் தலைமையில் நடைபெறவுள்ள இந் நிகழ்வில், பிரதம விருந்தினராக வடக்கு மாகாண மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பளர் கந்தையா ஜெனாட் பிறட்லி கலந்து கொள்வார். (ஐ)

# யாழ். கம்பன் விழா இன்றைய நிகழ்வுகள்!

யாழ்ப்பாணம், பெப். 11

அகில இலங்கை கம்பன் கழகம் நடத்தும் யாழ். கம்பன் விழாவின் இரண்டாம் நாளான இன்று சனிக்கிழமை காலை, மாலை என இரு அரங்குகளாக நிகழ்ச்சிகள் நடைபெறவுள்ளன.

காலை அரங்கு 9.30 மணிக்கு நல்லை ஆதீன கலா மண்டபத்தில் நடைபெறும். இதில், பேராசிரியர் மனோன்மணி சண்முகதாஸ் தலைமை உரையையும், ரிஷி தொண்டு நாதன் சுவாமிகள் தொடக்க உரையையும் ஆற்றுவர்.

தொடர்ந்து, திருக்கேதீச்சரம் தருமை ஆதீன கிளை மடத்தின் ஸ்ரீமத் மௌன மீனாட்சி சுந்தரத் தம்பிரான் தலைமையில் சிந்தனை அரங்கில் "கம்ப சித்தாந்தம்" என்ற பொருளில் "கம்பனில் பதி உண்மை" என்று ஏ. அனுஷாந்தன், "கம்பனில் பசு உண்மை" என்று இ. ஜெயந்திரன், "கம்பனில் பாச உண்மை" என்று கு. பாலசண்முகன் ஆகியோர் விவாதிப்பர். இதைத் தொடர்ந்து கம்பவாரிதி இ. ஜெயராஜ், முனைவர் இரா. மாது ஆகியோர் குறிப்புரைகளை வழங்குவர்.

மாலை அரங்கு 4.30 மணிக்கு நல்லூர் துர்க்கா மணி மண்டபத்தில் நடைபெறும். இந்த நிகழ்வில் பாராளுமன்ற உறுப்பினர் சி. சிறீதரன் தலைமை உரையையும் பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் தொடக்க உரையையும் ஆற்றுவர்.

தொடர்ந்து கம்பவாரிதி இ. ஜெயராஜ் தலைமையில் பட்டிமண்டபம் நடைபெறும். "வள்ளுவர் காட்டும் அமைச்சனாய் கம்பனில் பெரிதும் முதன்மையுறுபவர்" "சுமந்திரனே" என்று இரா. செல்வவடிவேல், பரா. ரதீஸ் ஆகியோரும் "அனுமனே" என்று ஆறு. திருமுருகன், சிறீ பிரசாந்தன் ஆகியோரும், "வீடணனே" என்று இரா. மாது, அ. வாசுதேவா ஆகியோரும் வாதிடுவர். (ஐ)

# இருபது - 20 கிரிக்கெட் போட்டி!

யாழ்ப்பாணம், பெப். 11

நாட்டின் 75ஆவது சுதந்திர தினத்தை ஒட்டி நட்பு இருபது - 20 கிரிக்கெட் போட்டியை வடக்கு மாகாண பிரதம செயலாளர் பணிமனை ஏற்பாடு செய்துள்ளது.

இந்தப் போட்டியில் யாழ்ப்பாணம் 19 வயதுக்கு உட்பட்டோர் அணியும் தம்புள்ளை வயதுக்கு உட்பட்டோர் அணியும் மோதவுள்ளன.

இந்தப் போட்டி நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணிக்கு யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி மைதானத்தில் ஆரம்பமாகவுள்ளது. (ஐ)

# சொற்பொழிவு

யாழ்ப்பாணம், பெப். 11

புத்தூர் மேற்கு கலைமதி ஆலடி முருகன் ஆலய மகா கும்பிஷேக பெருவிழாவை ஒட்டி தொடர் சொற்பொழிவு நடைபெற்று வருகின்றது.

இதில், இன்று சனிக்கிழமை மாலை 6.30 மணிக்கு சமய ஜோதி கதிர்காமன் நிஜலிங்கத்தின் ஒழுங்கமைப்பில் நடைபெறும் நிகழ்வில், சைவப்புலவர் சி. கா. கமலநாதன் "திருமுறையும் வாழ்வும்" என்ற தலைப்பில் சொற்பொழிவு ஆற்றுவார். (ஐ)

# இலங்கைத் தமிழரசுக் கட்சி போலி பிரசாரம் செய்கிறது

### ரெலோ கட்சி குற்றச்சாட்டு

யாழ்ப்பாணம், பெப். 11



தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிலிருந்து பிரிந்து சென்ற இலங்கை தமிழரசு கட்சி போலி பிரசாரத்தில் ஈடுபட்டு வருவதாக ரெலோ அமைப்பின் ஊடகப் பேச்சாளர் கு. சுரேன் தெரி ஸ்ரீவித்துள்ளார்.

நேற்று யாழ்ப்பாணத்தில் நடந்த செய்தியாளர் சந்திப்பில் இதனை தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

தமிழ்த் தேசிய கூட்டமைப்பிலிருந்து தமிழரசு கட்சி பிரிந்து தனித்துப் போட்டியிடு வதாக முடிவெடுத்த பின்னர் தற்போது மக்களிடையே தமிழ் தேசியக் கூட்டமைப்பு கட்சிகள் தான் தமிழரசு கட்சியை வெளியேற்றுவதாக மக்களிடையே பொய்யான கருத்து ளை தெரிவித்து வருகின்றனர்.

தனிக்கட்சி தாங்கள்தான் தமிழ்த் தேசிய கூட்டமைப்பு என்று மக்களிடையே பரப்புரைகளை மேற்கொண்டு வரும் செயல்பாடு மக்களிடையே குழப்பத்தை ஏற்படுத்தும். தமிழ்த் தேசிய கூட்டமைப்பு என்பது ஐந்து கட்சிகள் சேர்ந்த ஒரு கூட்டமைப்புதான். தமிழ் தேசியக் கூட்டமைப்பு தவிர ஒரு தனி கட்சி தமிழ்த் தேசிய கூட்டமைப்பு இல்லை என தெரிவித்திருந்தார்.

எதிர்காலத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பானது தமிழ் தேசியம் சார்ந்த கட்சிகளை உள்வாங்கி ஒரு பலமான இயக்கமாக செயல்படும் - என்றார். (ஐ)

ஈழநாடு
Eelanadu
11.02.2023 சனிக்கிழமை
பிலவ வருடம், தை 28

**“ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்”**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 730 1370

# பி. ஜே. பியின் கவனத்துக்கு!

இந்தியாவை ஆளும் பாரதிய ஜனதா கட்சியின் தமிழ்நாட்டுக்கான தலைவர் அண்ணாமலை மீளவும் யாழ்ப்பாணத்துக்கு வந்திருக்கிறார். அண்மையில், அண்ணாமலை தலைமையிலான தமிழ்நாட்டு பி. ஜே. பி. தலைவர்கள் இந்திய வெளிவிவகார அமைச்சரை சந்தித்து இந்திய - இலங்கை ஒப்பந்தத்தின் அடிப்படையிலான 13ஆவது திருத்தச் சட்டத்தை அமுல்படுத்துவதற்கு இந்திய மத்திய அரசு நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென்று வலியுறுத்தியிருந்தனர்.

அண்மைக்காலமாக 13ஆவது திருத்தச் சட்டம் மீளவும் கொழும்பு அரசியலில் பேசுபொருளாகியிருக்கின்றது. இந்தப் பின்புலத்தில்தான் அண்ணாமலை மேற்படி வேண்டுகோளை விடுத்திருந்தார். ஆனால், தென்னிலங்கையின் சிங்கள - பௌத்த கடும்போக்கு தரப்பினர் 13ஆவது திருத்தச் சட்டத்தை முழுமையாக அமுல்படுத்தக்கூடாது. அதனை தாம் விடப்போவதில்லை என்னும் கோஷங்களுடன் வீதிக்கு வந்திருக்கின்றனர். முக்கியமாக பௌத்த பிக்குகள் 13ஆவது திருத்தச் சட்டத்தின் நகலை எதிர்த்து - எதிர்ப்பை வெளியிட்டிருந்தனர். மாகாண சபை முறைமையினால் ஆளுநராகியிருக்கும் கிழக்கு மாகாண ஆளுநர்கூட 13ஆவது திருத்தச் சட்டத்தை எதிர்த்துப் பேசும் அவலத்தை காண்கின்றோம்.

ஆளும் பி. ஜே. பி. மீளவும் ஆட்சியை தக்கவைப்பதற்கான தீவிர முயற்சிகளில் இறங்கியிருக்கின்றது. இதேவேளை பி. ஜே. பி. ஆட்சியை வீழத்தும் நோக்குடன் காங்கிரஸ் தீவிர பிரசாரங்களில் ஈடுபட்டு வருகின்றது. இவ்வாறானதொரு பின்புலத்தில் தமிழ்நாட்டில் பி. ஜே. பியின் செல்வாக்கை தூக்கி நிறுத்தும் முயற்சிகளில் அண்ணாமலை ஈடுபட்டு வருகின்றார். பி. ஜே. பியின் தமிழ்நாட்டு நடவடிக்கைகளை அண்ணாமலை பொறுப்பேற்றதைத் தொடர்ந்து தமிழ்நாட்டில் பி. ஜே. பியின் செல்வாக்கு அதிகரித்து வருவதாகவும் ஓர் அபிப்பிராயமுண்டு. அண்ணாமலை, குறுகிய காலத்தில் தமிழ்நாட்டில் செல்வாக்குமிக்க தலைவராக வளர்ந்திருக்கின்றார். தமிழ்நாட்டின் அரசியல் எப்போதுமே பி. ஜே. பிக்கு சிம்ம சொப்பனமாகும். பி. ஜே. பியால் இதுவரையில் தமிழ்நாட்டில் வலுவாகக் காலூன்றவே முடியவில்லை. இதற்காக அண்ணாமலை கடுமையாக உழைக்க வேண்டியிருக்கின்றது.

வரலாற்று ரீதியாக, பி. ஜே. பி. எதிர்ப்பு திராவிட கட்சிகளும் மத்திய அரசை விமர்சிக்கும் தமிழ்நாட்டு தமிழ்த் தேசிய குழுக்களுமே ஈழத் தமிழர்களுக்கான ஆதரவாளர்களாக அடையாளப்படுத்தப்பட்டிருக்கின்றனர். இப்போது, முதன்முதலாக ஈழத் தமிழர்களுக்கான ஆதரவு சக்தியாக தமிழ்நாட்டு பி. ஜே. பியும் முன்னரங்குக்கு வந்திருக்கின்றது.

இலங்கையின் பௌத்தத்தோடு இணைந்து பயணிக்கலாம் என்னும் பார்வை இந்துத்துவா சக்திகளிடம் உண்டு. அது சரியான பார்வைதானா? ஏனெனில், இந்திய - இலங்கை ஒப்பந்தத்தின் குழந்தையான 13ஆவது திருத்தச் சட்டத்தை தீயிட்டுக் கொழுத்துவது என்பது அடிப்படையில் இந்திய நலன்களை தீயிட்டுக் கொழுத்துவதுதான். இந்த விடயத்தை தமிழ்நாட்டு பி. ஜே. பியினர் புரிந்துகொள்ள முயற்சிக்க வேண்டும். பிக்குகளைப் பகைத்துக் கொள்ளாமல் விடயங்களை கையாள முடியுமென்பது தென்னிலங்கை அரசியலில் ஒருபோதுமே சாத்தியப்படாது.

13ஆவது திருத்தச் சட்டத்தை அமுல்படுத்துவதில் பி. ஜே. பியின் அணுகுமுறை வெறும் உதட்டு அசைவுடன் முடிந்துவிடக்கூடாது. அதனை அமுல்படுத்தும் விடயத்தில் முன்னேற்றங்களை காண முடியா விட்டால், அது - மோடி அரசாங்கத்தின் இலங்கை தொடர்பான அயலுறவு அணுகுமுறையின் தோல்வியாகவே வரலாற்றில் பதிவாகும்.



# குமாரபுரம் படுகொலை... இன்றுடன் 27 ஆண்டுகள்...!

**பா. விபூஷிதன்**

*திருகோணமலை - மூதூர் - குமாரபுரம் பகுதியில் தமிழ் மக்கள் மீதான படுகொலைகள் இடம்பெற்று இன்றுடன் 27 ஆண்டுகள் ஆகின்றன. இந்தக் கொடூர சம்பவத்தில் 26 அப்பாவிப் பொதுமக்கள் படுகொலை செய்யப்பட்டனர். 24 பேர் பலத்த காயங்களுக்கும் அவயவங்கள் இழப்புக்கும் உள்ளாகினர்.*

*மூதூர் பிரதேச செயலாளர் பிரிவுக்கு உட்பட்ட குமாரபுரம் கிராமத்தில் நுழைந்த இராணுவத்தினர் மற்றும் ஊர்காவல் படையினர் மேற்கொண்ட துப்பாக்கிச்சூடு மற்றும் வாள் வெட்டு சம்பவங்களால் பெண்கள், சிறுவர்கள் உட்பட 26 அப்பாவி பொதுமக்கள் படுகொலை செய்யப்பட்டனர். 15வயதான சிறுமி ஒருவர் பாலியல் வன்புணர்வுக்கு உள்ளாக்கப்பட்டு கொலை செய்யப்பட்டார். இந்தக் கொடூர சம்பவம் 1996 பெப்ரவரி 11ஆம் திகதி மாலை இடம்பெற்றிருந்தது.*

*இந்தப் படுகொலை சம்பவம் தொடர்பாக 1996ஆம் ஆண்டு மூதூர் நீதிவான் நீதிமன்றத்தில் நடைபெற்ற வழக்கு விசாரணையில் தெகிவத்தை இராணுவ முகாமில் சேவையில் இருந்த 8 இராணுவத்தினர் சாட்சியாளர்களால் அடையாளம் காட்டப்பட்டனர். இவர்களுக்கு எதிராகக் குற்றவியல் பத்திரம் தாக்கல் செய்யப்பட்டது. பின்னர் குறித்த வழக்கு திருகோணமலை மேல் நீதிமன்றத்துக்குப் பாரப்படுத்தப்பட்டு வழக்கு விசாரணைகள் நடைபெற்றன.*

*இந்நிலையில், அன்றைய யுத்த சூழ்நிலையை கருத்தில் கொண்டு எதிரிகளின் வேண்டுகோளுக்கு அமைய சட்ட மா அதிபரின் ஆலோசனையின் பேரில் பாதுகாப்பு கருதி இந்த வழக்கு அநுராதபுரம் மேல் நீதிமன்றத்துக்கு மாற்றப்பட்டது.*

*இது தொடர்பான வழக்கு விசாரணை ஜூரிகள் சபை முன்னிலையில் அநுராதபுரம் மேல் நீதிமன்றத்தில் நடைபெற்றன. 20 ஆண்டுகளுக்குப் பின்னர் - கடந்த 2016ஆம் ஆண்டு ஜூலை 27ஆம் திகதி எஞ்சியிருந்த 6 முன்னாள் இராணுவத்தினரும் (பிணையில் இருந்தபோது இருவர் இறந்துவிட்டனர்) அநுராதபுரம் மேல் நீதிமன்றத்தால் விடுதலை செய்யப்பட்டனர். இவர்கள் மீதான அனைத்துக் குற்றச்சாட்டுகளும் தள்ளுபடி செய்யப்பட்டன.*

*இந்தத் தாக்குதல் சம்பவத்தில் சுப்பையா சேதுராசா, அழகுதுரை பரமேஸ்வரி, அருமைத்துரை வள்ளிப்பிள்ளை, கிட்ணன் கோவிந்தன், அருணாசலம் தங்கவேல், செல்லத்துரை பாக்கியராசா, வடிவேல் நடராசா, இராஜேந்திரம் கருணாகரம், சண்முகநாதன் நிதாந்தன், இராமஜெயம் கமலேஸ்வரன், கந்தப்போடி கமலாதேவி, சிவக்கொழுந்து சின்னத்துரை, சிவபாக்கியம் நிசாந்தன், பாக்கியராசா வசந்தினி, அமிர்தலிங்கம் ரஜனிகாந்தி, தங்கவேல் கலாதேவி, ஸ்ரீபன் பத்துமா, சுந்தரலிங்கம் பிரபாகரன், சுந்தரலிங்கம் சுபாஜினி, கனகராசா சுவாதிராசா, சுப்பிரமணியம் பாக்கியம், விநாயகமூர்த்தி சுதாகரன், ஆனந்தன் அன்னம்மா, விஜயகாந் லெட்சுமி, அருமைத்துரை தனலெட்சுமி, ஆகியோர் உட்பட 26பேர் கொல்லப்பட்டனர்.*

*இந்தக் கிராமம் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினராக இருந்த அமரர் அ. தங்கத்துரையால் உருவாக்கப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது.*

## அப்புக்குட்டி அண்ணையின் ‘டவுட்’



ஈழநாடு



பெப்ரவரி - 11 சனிக்கிழமை
சுபகிருது வருடம் - தை 28
நல்ல நேரம் : 07.30 - 09.00
ராகு காலம் : 09.00 - 10.30
திதி : சஷ்டி




**மேடம்**
நிதானமாக செயல்பட்டு நினைத்ததை சாதிப்பீர்கள். எதிர்பார்த்த செய்தி வந்து சேரும். குடும்பத்தில் இருந்த நெருக்கடிகள் நீங்கும். மறைமுகத் தொல்லைகள் விலகும்.

**இடபம்**
எதிர்பார்த்தவற்றில் இழுபறியான நிலை ஏற்படும். யோசிக்காமல் எந்த செயலிலும் ஈடுபடாதீர். குடும்பத்தில் சிறு பிரச்னை வந்து போகும். குழந்தைகள் நலனில் கவனம் செல்லும்.

**மிதுனம்**
தாய் வழி உறவால் நன்மை அதிகரிக்கும். குடும்பத்தினர் தேவைகளை நிறைவேற்றுவீர்கள். மனம் பல வகையிலும் அலைபாயும். உங்கள் செயல்களுக்கு நண்பர்களின் ஆதரவு உண்டாகும்.

**கடகம்**
எதிர்பார்ப்புகள் பூர்த்தியாகும். நீங்கள் மேற்கொள்ளும் முயற்சிகள் லாபமாகும். வெளிவட்டாரத்தில் உங்களின் செல்வாக்கு உயரும். வழக்கு உங்களுக்கு சாதகமாகும்.

**சிம்மம்**
பேச்சில் கவனம் தேவை. உங்கள் கவனக் குறைவால் சில இழப்புகளை சந்திப்பீர்கள். குடும்பத்தில் உங்கள் செல்வாக்கு உயரும். உறவினர் உதவியால் தள்ளிப்போன செயல்கள் முடியும்.

**கன்னி**
எதிர்பார்த்தவற்றில் சாதகமான நிலை உருவாகும். குடும்பத்தில் சிறு சல சலப்புகள் உண்டாகும். பொன் பொருள் சேர்க்கை உண்டாகும். திருமண வயதினருக்கு வரன் தேடி வரும்.

**துலாம்**
அலைச்சல் அதிகரிக்கும். எதிர்பாராத செலவுகளால் நெருக்கடிக்கு ஆளாவீர்கள். வீடு, வாகன வகைகளில் செலவுகள் ஏற்படும். எதிர்பார்த்த வரவில் தடையுண்டாகும்.

**விருட்சிகம்**
உங்கள் தனித்திறனால் செல்வாக்கு உயரும். வேலைகளில் இருந்த தடைகள் விலகும். நீங்கள் மேற்கொள்ளும் முயற்சிகள் வெற்றியாகும். திடீர் பண வரவால் சங்கடங்கள் விலகும

**தனுசு**
வியாபாரத்தை விரிவு செய்யும் முயற்சியில் வெற்றி பெறுவீர்கள். நீண்ட நாள் எண்ணம் நிறைவேறும். தொழிலை மாற்றம் செய்யும் முயற்சியில் இறங்குவீர்கள். உங்கள் எண்ணம் நிறைவேறும்.

**மகரம்**
முயற்சிகளில் தாமதம் உண்டானாலும் முடிவு உங்களுக்கு சாதகமாகும். தெய்வ அருளால் முயற்சிகள் பலிதமாகும். நீங்கள் எதிர்பார்த்த ஒன்றை அடைவீர்கள்.

**கும்பம்**
செயலில் தடுமாற்றம் உண்டாகும். பகைவர்களால் சில சங்கடங்கள் ஏற்படும். முயற்சியில் எதிர்பார்த்த பலனை அடைய முடியாமல் போகும். மனம் குழப்பமடையும்.

**மீனம்**
உங்கள் எண்ணம் நிறைவேறும். நண்பர்கள் உதவியுடன் ஒரு செயலை முடிப்பீர்கள். மனதை வாட்டிக் கொண்டிருந்த ஒரு பிரச்னைக்கு இன்று தீர்வு காண்பீர்கள்.

# கருணாநிதி நினைவிடத்தில் அருங்காட்சியகத்துக்கு அனுமதி!

சென்னை, பெப். 11

கருணாநிதி நினைவிடத்தில் 80 இலட்சம் இந்திய ரூபாய் அருங்காட்சியகம் அமைக்க தமிழ்நாடு கடலோர ஒழுங்கு முறை மண்டல ஆணையம் அனுமதி அளித்துள்ளது.

தி. மு. க. முன்னாள் தலைவரும், தமிழக முன்னாள் முதல்வருமான கருணாநிதிக்கு மெரினாவில் நினைவிடம் அமைக்கப்படும் என்று தமிழக முதல்வர் மு. க. ஸ்டாலின் தமிழக சட்டப் பேரவையில் விதி எண் 110-ன் கீழ் அறிவித்தார். இதன்படி காமராஜர் சாலையில் உள்ள அண்ணா நினைவிட வளாகத்தில் 2.21 ஏக்கர் பரப்பளவில் 39 கோடி ரூபாய் மதிப்பீட்டில் நினைவிடம் அமைக்கப்பட்டு வருகிறது.

இதில் கலை, இலக்கியம், அரசியல் ஆகிய துறைகளில் முத்திரைப் பதித்ததன் அடையாளமாக உதயசூரியன் போன்று 3 வளைவுகள் அமைக்கப்படுகிறது. குறிப்பாக, கருணாநிதி நினைவிடத்தில், திறந்தவெளி காட்சி அரங்கம், அருங் காட்சியகம் அமைக்கப்படுகிறது.

இந்த அருங்காட்சியகம் ரூ.80 இலட்சத்தில் அமைக்கப்படவுள்ளது. கருணாநிதி நினைவிடத்துக்கு உள்ளே 8 பரப்பு நிலத்தில் 1978 ச.மீ பரப்பளவில் இந்த அருங்காட்சியகம் அமைய உள்ளது. பாதி அளவு கட்டுமானம் தரைக்கு கீழ் இருக்கும் வகையில் இது அமைக்கப்படவுள்ளது. இதற்கு தமிழ்நாடு கடலோர ஒழுங்குமுறை மண்டல ஆணையம் இப்போது அனுமதி அளித்துள்ளது.

# கலைஞருக்கு நினைவு சின்னம் தரையிலேயே அமைக்கலாம்!

## எடப்பாடி பழனிசாமி தெரிவிப்பு

சென்னை, பெப். 11

பேனா நினைவுச் சின்னத்தை தரையில் வைக்கலாம் என்று எதிர்க்கட்சி தலைவர் எடப்பாடி பழனிசாமி தெரிவித்தார்.

நெல்லையில் செய்தியாளர்களிடம் பேசிய எதிர்க்கட்சி தலைவர் எடப்பாடி பழனிசாமி, ”தி. மு. க. ஆட்சி 21 மாத காலத்தை நிறைவு செய்துள்ளது. இந்த 21 மாத காலத்தில் ஈரோடு கிழக்கு தொகுதியில் ஒரு வேலைகூட செய்யவில்லை. அ. தி. மு. க. ஆட்சிக் காலத்தில் நிறைய பணிகள் இந்த தொகுதியில் செய்யப்பட்டது.

மழையால் டெல்டா மாவட்டத்தில் விவசாயிகள் அடிக்கடி பாதிக்கப்படுகின்றனர். விவசாயிகளுக்கு அதிக இழப்பீட்டு தொகை பெற்று தந்த அரசு அதிமுக அரசு. எதிர்க்கட்சியாக இருக்கும் போது விவசாயிகளுக்கு ரூ. 30 ஆயிரம் இழப்பீடு வழங்க வேண்டும் என்று மு.க.ஸ்டாலின் கூறினார். தற்போது ரூ. 20 ஆயிரம் தான் கொடுத்துள்ளார். தமிழகத்தில் சட்டம் ஒழுங்கு சீர் குலைந்துள்ளது

21 மாத கால ஆட்சியில் மக்களுக்கு எதுவும் செய்யவில்லை. தந்தைக்கு நினைவிடமும், நூலகமும் கட்டியது மட்டுமே முதல்வர் செய்த பணி. தற்போது பேனா சின்னம் வைக்க முயற்சி செய்து கொண்டு உள்ளனர். கடலில் பேனா வைக்கிறார்கள். எழுதாத பேனாவை எங்கு வைத்தாலும் ஒன்றுதான். தரையில் வைக்கலாம். இதற்கு மிகுந்த எதிர்ப்பு உள்ளது. நினைவிடத்திற்கு உள்ளே தரையில் பேனா வைக்கலாம்.” இவ்வாறு அவர் கூறினார்.

# புலி சின்னத்துடன் தமிழகத்தில் முதன்முறையாக கல்வெட்டு மீட்பு

சென்னை, பெப். 11

தமிழகத்தில் முதன்முறையாக புலி சின்னத்துடன் கூடிய சோழர் கல்வெட்டு ஒசூரில் கண்டறியப்பட்டுள்ளது.

கிருஷ்ணகிரி மாவட்டத்தின் ஒசூர் சந்திர சூடேஸ்வரர் கோயிலில் நடத்திய ஆய்விலேயே இந்தக் கல்வெட்டு கண்டறியப்பட்டது.

சேர, சோழ, பாண்டியர்கள் முறையே வில், புலி, மீன் ஆகியவற்றை தங்களின் அரசு சின்னங்களாகக் கொண்டிருந்தனர். மன்னர்கள் வெளியிடும் காசுகள், செப்பு பட்டயங்களில் மட்டுமே அவர்களது சின்னங்கள் காணப்படும். கல்வெட்டுகளில் அரசு முத்திரைகளை காண்பது அரிதாகும்.

வில் சின்னமானது விடுகாதழகிய பெருமானின் குந்துக்கோட்டை, ராயக்கோட்டை போன்ற கல்வெட்டுகளிலும், மீன் சின்னமானது பாண்டியன் பெயரில் அமைந்த தெரு பெயர்



கொண்ட திருவண்ணாமலை போன்ற சில இடங்களிலும் புலி சின்னமானது பெண்ணேஸ்வர மடக் கல்வெட்டிலும் மட்டுமே இதுவரை கண்டறியப்பட்டுள்ளன.

இந்த நிலையிலேயே சந்திரசூடேஸ்வரர் கோயிலின் தெற்கு நுழைவாயிலில் புலி சின்னம் கண்டறியப்பட்டுள்ளது.

இது முதலாம் குலோத்துங்க சோழனின் (பொது ஆண்டு 1070-1120) கல்வெட்டாகும்.

# கலைஞர் கருணாநிதியின் பேனா தமிழர் தலைவிதியை மாற்றியது!

## முதலமைச்சர் ஸ்டாலின்

சென்னை, பெப். 11

கருணாநிதியின் பேனா, தமிழர்களின் தலையெழுத்தை மாற்றியது, என, சென்னையில் நடந்த நிகழ்வு ஒன்றில் முதல்வர் ஸ்டாலின் பேசினார்.

மேலும், எப்போதெல்லாம் கருணாநிதியின் பேனா குனிந்துள்ளதோ அப்போதெல்லாம் தமிழன் தலைநிமிர்ந்துள்ளான். ஐந்து முறை முதல்வராக இருந்து, வள்ளுவர் கோட்டம், பூம்பாறை உருவாக்கி கொடுத்தது, குடிசைகளை மாற்றி அடுக்குமாடி குடியிருப்பு உருவாக்கியது, இலட்சணக்கான பட்டதாரிகளை உருவாக்கியது, தமிழ் சமுதாயத்தின் தலையெழுத்தை மாற்றியது, டைட்டல் பார்க் உருவாக்கியது என, பல சாதனைகளை கருணாநிதியின் பேனா செய்துள்ளது.

2021இல் அறிவிக்கப்பட்டு, பிரதமர் மோடி, அடிக்கல் நாட்டியும், மதுரை எய்ம்ஸ்



வரவில்லை. உதயநிதியும், ஒற்றை செங்கல்லை எடுத்து கொண்டு சட்டசபை தேர்தலில் வாக்கு கேட்டார். அதன் பின்பாவது, ஒரு வெட்கம் வந்திருக்க வேண்டாமா?, அடுத்த தேர்தலிலும், உதயநிதி அதையே செய்வாரோ என்ற, பயம் பிரதமருக்கு வந்திருக்க வேண்டாமா? - என்றார். (ஐ)

# ஜனாதிபதி வெளியிட்ட கருத்து பிழையானது!

## ஹர்ஷ டி சில்வா சுட்டிக்காட்டு

கொழும்பு, பெப். 11

உழைக்கும்போது செலுத்தும் வரி அறவீடு மூலம் 100 பில்லியன் ரூபாவை சேகரிக்க முடியாது என ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் ஹர்ஷ டி சில்வா தெரிவித்தார்.


உழைக்கும்போது செலுத்தும் வரி மூலம் 100 பில்லியன் ரூபா வருமானம் ஈட்ட முடியும் என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பாராளுமன்றில் கூறியது ஏற்றுக் கொள்ளக் கூடியதல்ல எனவும் அவர் குறிப்பிட்டார்.

அவர் கூறிய இந்தவிடயத்தை ஜனாதிபதி ரணில் விளக்க வேண்டுமென சவால் விடுப்பதாகவும் தெரிவித்தார்.

கொழும்பில் எதிர்க்கட்சித் தலைவர் காரியாலயத்தில் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் வைத்து அவர் இதனை கூறினார்.

உழைக்கும்போது செலுத்தும் வரி விதிக்கும் தொகையை இரண்டு இலட்சம் ரூபாவாக உயர்த்தினால் 63 பில்லியன் ரூபா வருமானத்தை இழக்க நேரிடும் என ஜனாதிபதி வெளியிட்ட கருத்தும் பிழையானது எனவும் இதனையும் அவர் தெளிவுபடுத்த வேண்டுமெனவும் ஹர்ஷ டி சில்வா கோரினார். (அ)

# தேர்தல் செலவுக்கு பணம் தாருங்கள்!



## மக்களிடம் கோருகிறார் விக்னேஸ்வரன்

யாழ்ப்பாணம், பெப். 11

**நடைபெறவிருக்கும் உள்ளூராட்சிச் சபைகளுக்கான தேர்தலில் போட்டியிடும் தமிழ்த் தேசிய சிந்தனையும், ஆற்றலும், தூயகரங்களும் கொண்ட இளையோர்களைக் கொண்ட தனது வேட்பாளர்களை வெற்றி பெறச் செய்யும் தனது முயற்சிக்கு முழுமையான ஆதரவை வழங்குமாறு தமிழ் மக்கள் கூட்டணியின் செயலாளர் நாயகமும் யாழ்.மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான நீதியரசர் க.வி.விக்னேஸ்வரன் தமிழ் மக்களிடம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.**

மிகுந்த நிதி நெருக்கடியின் மத்தியில் அநாவசியமான செலவுகளைத் தவிர்த்து எதிர்வரும் தேர்தலை முற்றுமுழுதாக மக்களை நம்பி எதிர்கொள்வதாக தெரிவித்துள்ள அவர், சில அவசியமான செலவுகளை செய்வதற்கான நிதி உதவிகளை முடிந்தளவு செய்து தவுமாறு நிலத்திலும் புலத்திலும் உள்ள மக்களிடம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

காலம் காலமாக தமிழ் அரசியலில் ஆதிக்கம் செலுத்தி வரும் கட்சிகள் தமிழ் மக்களின் அரசியல், சமூக, பொருளாதார அபிலாஷைகளை வென்றெடுப்பதில் தோல்வியைத் தழுவியுள்ளதாகவும் அதனால் தமிழ் மக்களுக்கான அரசியலை முன்னெடுத்துச் செல்வதற்கு இளையோர்களைத் தயார்ப்படுத்தி அவர்களின் கைகளில் அரசியலை ஒப்படைக்கும் தருணம் வந்துவிட்டதாகவுந் தெரிவித்துள்ள விக்னேஸ்வரன், அதன் காரணமாகவே நூற்றுக்கணக்கான இளையோர்களை எதிர்வரும் உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தலில் களம் இறக்கியுள்ளதாகக் குறிப்பிட்டுள்ளார்.

எதிர்வரும் தேர்தலில் இளையோர்களை வெற்றி பெறச் செய்து தமிழ் அரசியலில் ஒரு பெரும் திருப்புமுனையை ஏற்படுத்துவதற்கு தமிழ் மக்கள் தமது முழுமையான ஆதரவை அளிக்கவேண்டும் என்றும், தமது பிரசார நடவடிக்கைகளுக்கு உதவும் வகையில் இயன்றளவு நிதி உதவிகளை அவர்களுக்கு வழங்குமாறும் அவர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

தமிழ் மக்கள் கூட்டணியின் மான் சின்னத்தில் முதன் முறையாக இம்முறை தேர்தலில் களம் இறங்குவதாலும் நாட்டின் பொருளாதார நெருக்கடி காரணமாக தேர்தல் பிரசாரச் செலவுகள் மிகவும் அதிகமாக இருப்பதால் புலம்பெயர் நாடுகளிலும் உள்நாட்டிலும் வாழும் நண்பர்கள், தனது மாணவர்கள், உறவினர்கள் மற்றும் ஆதரவாளர்கள் தம்மால் இயன்றளவுக்கு நிதி உதவி செய்ய வேண்டும் எனவும் அவர் கோரியுள்ளார்.

உதவிகளை வழங்குவதற்காக வங்கிக் கணக்கு இலக்கம் ஒன்றையும் அவர் அறிவித்துள்ளார்.(அ)

# சிறுநீரக மோசடி குறித்து மேலுமொரு தரகர் கைது

கொழும்பு, பெப். 11

பொரளை தனியார் வைத்தியசாலையொன்றில் சிறுநீரகங்களைப் பெற்றுக் கொள்வதாக மக்களை ஏமாற்றி மோசடியில் ஈடுபட்ட நபர் ஒருவர் கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் வைத்து கொழும்பு குற்றத்தடுப்பு பிரிவினரால் கைது செய்யப்பட்டார்.

கொழும்பு 12 பகுதியைச் சேர்ந்த (வயது-32) ஒருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

குறித்த சந்தேக நபர் வெளிநாடு செல்வதற்கு தடை விதிக்கப்பட்டிருந்த நிலையில் நேற்று முன் தினம் டுபாய் செல்வதற்காக விமான நிலையத்துக்கு வந்தபோதே கைது செய்யப்பட்டார்.

குறித்த சந்தேக நபர் வைத்தியசாலையில் பணி புரிபவர் போன்று வேடமணிந்து இந்த மோசடியை மேற்கொண்டுள்ளதாக பொலிஸார் குறிப்பிட்டனர். (அ)

# கார் விபத்தில் பெண் மரணம்!

## நான்கு பேர் படுகாயம்

கொழும்பு, பெப். 11

ரத்தோட்ட ரிவஸ்டன் கோனாமட பகுதியில் 200 அடி பள்ளத்தில் கார் ஒன்று விழுந்து விபத்துக்குள்ளானதில் பொலிஸ் சார்ஜன்ட் ஒருவரின் மனைவி உயிரிழந்துள்ளதுடன் மேலும் நால்வர் காயமடைந்துள்ளனர் என பொலிஸார் தெரிவித்தனர்.

மாத்தளை உக்குவெல குர்லவெல பகுதியைச் சேர்ந்த 33 வயதுடைய ஒரு பிள்ளையின் தாயான திலாருக்ஷி விக்ரமசிங்க என்ற பொலிஸ் சார்ஜன்டின் மனைவியே இந்த விபத்தில் உயிரிழந்துள்ளார்.


மாத்தளை தலைமையக பொலிஸில் கடமையாற்றும் பொலிஸ் சார்ஜன்ட் ஒருவர் தனது குடும்பத்துடன் ரிவஸ்டன் நகருக்கு காரில் சென்றுகொண்டிருந்தபோது இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

இவ்விபத்தில் பொலிஸ் உத்தியோகத்தர் மற்றும் அவரது 11,8 வயதுடைய இரு மகள்கள், பொலிஸ் அதிகாரியின் தாய் மற்றும் ஆகியோரும் காயமடைந்து மாத்தளை பொது வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருவதாக பொலிஸார் தெரிவித்தனர். (அ)

# மீண்டும் திறக்கப்படுகின்றது காசியப்பனின் அரண்மனை

கொழும்பு, பெப். 11

சிகிரியாவில் காசியப்ப மன்னன் வாழ்ந்த "குளிர் மாளிகை" மார்ச் மாதம் முதல் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளின் பார்வைக்காக திறக்கப்படும் என மத்திய கலாச்சார நிதியத்தின் பணிப்பாளர் நாயகம் பேராசிரியர் காமினி ரணசிங்க தெரிவித்துள்ளார்.



வரட்சியான காலங்களில் இந்த குளிர் அரண்மனையை காசியப்ப மன்னன் பயன்படுத்தியதாக வரலாறு கூறப்படுகின்றது.

அரண்மனையை சுற்றியுள்ள வடிகால் காரணமாக அதை அணுக முடியாதுள்ளதுடன், கால்வாயின் குறுக்கே பாலம் அமைக்கப்பட்டு சுற்றுலாப் பயணிகள் குளிர் மாளிகையை பார்வையிடுவதற்கு வாய்ப்பளிக்கப்படும் என பணிப்பாளர் நாயகம் தெரிவித்துள்ளார்.

இலங்கையின் மத்திய பகுதியில் கண்டி நகருக்கு 72 கிலோ மீற்றர் வடகிழக்கே மாத்தளை மாவட்டத்தில் சிகிரியா குன்று அமைந்துள்ளது.

கி.பி 5 ஆம் நூற்றாண்டில் காசியப்பன் எனும் மன்னன் (கி.பி 473-491) இக்குன்றின் மீது மிகப்பெரிய அரண்மனையை கட்டி இதனை தன் தலைநகராகக் கொண்டான். கி.மு காலத்தில் இருந்தே இக்குன்று முக்கியத்துவம் பெற்று விளங்குகின்றது.

செங்குத்தான இக்குன் றின் மீது ஏற படிக்கட்டுக்களை அமைத்து அதற்கு சிங்க உருவ அமைப்பில் ஒரு நூழைவாயிலும் அமைக்கப்பட்டுள்ளது. (அ)

# தினேஷ் ஷாப்டர் மரண காரணங்களை ஏற்றுக்கொள்ள குடும்பத்தினர் மறுப்பு

கொழும்பு, பெப். 11

ஜனசக்தி இன்சூரன்ஸ் குழுமத்தின் பணிப்பாளர் தினேஷ் ஷாப்டரின் மரணத்திற்குக் காரணம் என முரண்பாடான காரணங்கள் மருத்துவ அறிக்கைகளில் குறிப்பிடப்பட்டுள்ளதாகவும், அதனை ஏற்றுக்கொள்ள முடியாதெனவும் உயிரிழந்தவரின் குடும்ப உறுப்பினர்கள் சார்பில் நீதிமன்றில் ஆஜராகியிருந்த ஜனாதிபதி சட்டத்தரணி அனுஜ பிரேமரத்ன கொழும்பு மேலதிக நீதவான் திருமதி ராஜீந்திர ஜயசூரிய முன்னிலையில் தெரிவித்தார்.

மரணத்துக்கு ஒரு நாள் கழித்து, டிசெம்பர் 16 ஆம் திகதி, சட்ட வைத்திய அதிகாரி ருஹல் ஹக், சுருக்கமான பிரேத பரிசோதனை அறிக்கையை சமர்ப்பித்த போது, கழுத்தை நெரித்ததால் மரணம் நிகழ்ந்ததாக தெரிவிக்கப்பட்டிருந்ததாக ஜனாதிபதி சட்டத்தரணி அனுஜா பிரேமரத்ன நீதிமன்றத்தில் தெரிவித்தார்.

அதன்பின், மரணத்திற்கான முழு பிரேத பரிசோதனை அறிக்கையை சமர்ப்பித்த சட்ட வைத்திய அதிகாரி ருஹல் ஹக், கழுத்து நெரித்ததால் மூச்சுத்திணறல் ஏற்பட்டு மரணம் நிகழ்ந்தது என முன்னர் தெரிவித்திருந்தமைக்கு மாறாக, சயனைட் விஷம் கலந்ததாக மரணத்திற்கான காரணம் மாற்றப்பட்டுள்ளது எனத் தெரிவித்தார்.

இந்த பிரேத பரிசோதனை அறிக்கையை வழங்கும் சட்ட வைத்திய அதிகாரி ருஹல் ஹக்கிற்கு வேறு ஒரு காரணத்தினால் கடந்த டிசெம்பர் 22 ஆம் திகதி முதல் 08 மாத காலத்திற்கு மருத்துவப் பயிற்சியில் ஈடுபடுவதற்கு மருத்துவ சபை தடை விதித்துள்ளதாகவும் ஜனாதிபதி சட்டத்தரணி நீதிமன்றத்துக்கு அறிவித்தார்.

இச்சம்பவம் தொடர்பான நீதவான் பிரேத பரிசோதனை சாட்சிய விசாரணை நேற்று முன் தினம் நீதிமன்றில் மீண்டும் கூடிய போது உயிரிழந்தவரின் உறவினர்களின் சார்பில் ஜனாதிபதியின் சட்டத்தரணி இந்த உண்மைகளை முன்வைத்தார். (அ)

# புதிய தேசிய பாதுகாப்பு சட்டத்தை விரைவாகத் தயாரிக்க பணிப்புரை

கொழும்பு, பெப். 11

பயங்கரவாதத் தடைச் சட்டத்திற்கு பதிலாக அரசாங்கம் கொண்டு வர உத்தேசித்துள்ள புதிய தேசிய பாதுகாப்பு சட்ட மூலத்தை விரைவாக தயாரிக்குமாறு பணிப்புரை விடுக்கப்பட்டுள்ளது.

நீதி, சிறைச்சாலைகள் அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ, அதிகாரிகளுக்கு இந்த உத்தரவை வழங்கியுள்ளார்.


இதன் பின்னர் அது அமைச்சரவையின் ஒப்புதலுக்காக சமர்ப்பிக்கப்படவுள்ளதாக தெரியவருகிறது.

தற்போதுள்ள பயங்கரவாத தடைச் சட்டத்துக்கு பதிலாக தயாரிக்கப்பட்ட புதிய தேசிய பாதுகாப்பு சட்டமூலத்தில் உள்ளடக்கப்படவுள்ள விடயங்கள் மற்றும் அதில் மேற்கொள்ளப்பட வேண்டிய மாற்றங்கள் தொடர்பான விசேட கலந்துரையாடல் நேற்று முன்தினம் இடம்பெற்றுள்ளது.

தற்போது நடைமுறையில் உள்ள பயங்கரவாதத் தடைச் சட்டம் நிகழ்காலத்துக்கு ஏற்றவாறு புதுப்பிக்கப்பட வேண்டும் என்பதால், உள்ளூர் மற்றும் சர்வதேச சமூகங்களின் கோரிக்கைகளை கருத்தில் கொண்டு அரசாங்கம் தேசிய பாதுகாப்பு சட்டமூலத்தை தயாரிக்க நடவடிக்கை எடுத்துள்ளதாக அமைச்சு தெரிவித்துள்ளது. (அ)

# மாகாணங்களுக்கு காணி, பொலிஸ் அதிகாரங்கள் வழங்க இடமளியோம்!

## அத்துரலிய தேரரும் கூறுகின்றார்



கொழும்பு, பெப். 11

**ஜனாதிபதி வேட்பாளராகி வெற்றிபெறுவதை இலக்காகக் கொண்டே வடக்கு, கிழக்கில் காணி, பொலிஸ் அதிகாரங்கள் தொடர்பில் ஜனாதிபதி கருத்துக்களை கூறுகின்றார். ஆனால் எந்த வகையிலும் அவ்வாறான அதிகாரங்களை மாகாணங்களுக்கு வழங்குவதற்கு தாம் இடமளிக்கமாட்டோம் என அத்துரலிய ரத்ன தேரர் எம். பி. கூறினார்.**

பாராளுமன்றில் நேற்று முன்தினம் உரையாற்றியபோதே அவர் இதனைத் தெரிவித்தார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஜனநாயகம் தொடர்பில் பல்வேறு விடயங்களை கதைக்கின்றார். நீங்கள் கண்ணாடிக்கு முன்னால் நின்று பாருங்கள் என்று கேட்கின்றேன். ஜனாதிபதி தேர்தலை இலக்காக கொண்டு ரணில் விக்கிரமசிங்க தந்திரங்களை செய்கின்றார். பொதுஜன பெரமுனவில் சிலரை இணைத்துக் கொண்டும். சஜித் தரப்பில் இருந்தும் சிலரை இணைத்துக்கொண்டு ஜனாதிபதி தேர்தலுக்கு செல்ல திட்டமிடுகின்றார். அதற்காக தனது கட்சியை பலப்படுத்தி தேர்தலில் வெற்றிபெற முடியுமென்று எதிர்பார்க்கின்றார். இதற்காகவே வடக்கு, கிழக்கில் காணி அதிகாரங்கள் உள்ளிட்ட விடயங்கள் தொடர்பில் கதைக்கின்றார்.

மாகாண சபைகள் கலைக்கப்பட்டுள்ள நேரத்தில் அவர் எப்படி இதனை கதைக்க முடியும். அப்படியென்றால் அந்த அதிகாரங்களை ஆளுநர்களிடம் தான் வழங்க வேண்டும். இப்போது நீங்கள் தேவையில்லாத பிரச்னையையே ஏற்படுத்துகின்றீர்கள். பொலிஸ் மற்றும் காணி அதிகாரங்களை வழங்குவதற்கு நாங்கள் ஒரு போதும் இடமளிக்கப் போவதில்லை - என்றார். (ஐ)

# 13ஐ அமுலாக்கும் அதிகாரம் ஜனாதிபதிக்குக் கிடையாது!

## அபயதிஸ்ஸ தேரர் கூறுகிறார்

கொழும்பு, பெப். 11

'13' ஆவது திருத்தச்சட்டத்தை உள்ளடக்காத, பிரிவினைவாதம் அற்ற புதியதொரு அரசியலமைப்புக்கே 69 லட்சம் பேர் ஆணை வழங்கினர். அந்த ஆணையின்கீழ் ஜனாதிபதி பதவி வகிக்கும் ரணில் விக்கிரமசிங்கவுக்கு 13 தொடர்பில் செயற்படுவதற்கு எவ்வித உரிமையும் கிடையாது."

- இவ்வாறு பேராசிரியர் மெதகொட அபயதிஸ்ஸ தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில் -

ரணில் விக்கிரமசிங்க என்பவர் இந்நாட்டை பிரிப்பதற்கென்றே பிறந்தவர். 69 லட்சம் பேர் வழங்கிய மக்கள் ஆணையின்கீழ்தான் ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதி பதவியை வகிக்கின்றார்.

13 அற்ற, பிரிவினைவாதம் அல்லாத புதியதொரு அரசியலமைப்புக்கே அம்மக்கள் ஆணை வழங்கினர். மாறாக 13 ஐ அமுல்படுத்துவதற்கு அல்ல. நாட்டில் ஏற்பட்ட சிற்சில சம்பவங்களால் ஜனாதிபதி பதவி விலகினார். அந்த இடத்துக்கு வந்துள்ள ரணில் விக்கிரமசிங்கவுக்கு 13 தொடர்பில் நடவடிக்கை எடுப்பதற்கு எவ்வித உரிமையும் கிடையாது.

13 ஐ முழுமையாக அமுல்படுத்துவேன் என உறுதியளித்துவிட்டு ரணில் தேர்தலில் இறங்கவேண்டும். அப்போது அதற்கு மக்கள் எப்படி தீர்ப்பை வழங்குவார்கள் என்பதை பார்ப்பதற்கு நாம் தயாராகவே இருக்கின்றோம்.

13 விடயத்தில் மகாநாயக்கர்கள் மற்றும் மகாசங்கத்தினரின் கோரிக்கை ஏற்கப்படவேண்டும் - என்றார். (அ)

# 13ஆம் திருத்தத்தை அமுல்படுத்த ஜனாதிபதிக்கு தைரியம் இல்லை!

## ஹிருணிகா கூறுகின்றார்



கொழும்பு, பெப். 11

அரசமைப்பின் 13ஆவது திருத்தத்தை முழுமை யாக நடைமுறைப்படுத்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு தைரியம் கிடையாது.

நாட்டிலுள்ள பொருளாதார நெருக்கடிகளுடன் தொடர்புடைய பிரச்சினைகளை திசை திருப்புவதற்காகவே அவர் தற்போது இவ்விடயம் தொடர்பில் பேச ஆரம்பித்துள்ளதாக முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ஹிருணிகா பிரேமசந்திர தெரிவித்தார்.

கொழும்பிலுள்ள எதிர்க்கட்சி தலைவர் அலுவலகத்தில் நேற்று முன் தினம் அவர் நடத்திய செய்தியாளர் சந்திப்பிலேயே இதனைத் தெரிவித்தார்.

அரசமைப்பின் 13ஆவது திருத்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்துவதற்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்குத் தைரியம் கிடையாது. 13ஆவது திருத்தம் கொண்டு வரப்பட்ட போது நாட்டில் ஏற்பட்ட கலவரங்களின் போது அமைச்சராக காணப்பட்ட இவர் தற்போது இதனைப் பற்றி பேசுவது நகைப்பிற்குரியது.

நாட்டில் தற்போது நிலவும் உண்மையாக பொருளாதார நெருக்கடிகளை திசை திருப்புவதற்காகவே அவர் தற்போது 13 குறித்து பேசிக் கொண்டிருக்கின்றார்.

13இற்கு எதிராக வீதியில் இறங்கிப் போராடியதைப் போன்று நாட்டின் ஏனைய பிரச்னைகளுக்கு தீர்வு கோரியும் போராடுமாறு தலை வணங்கி பௌத்த தேரர்களிடம் கேட்டுக் கொள்கின்றோம். 13 என்பது ஒரு பிரிவை மாத்திரம் அடிப்படையாகக் கொண்ட பிரச்னையாகும். எனவே அனைத்து மக்களின் பிரச்னையாகக் காணப்படும் பொருளாதார நெருக்கடிகளுக்கு எதிராகப் போராடுவதற்கு அனைவரும் முன்வர வேண்டும்.

13ஆவது திருத்தம் புதிதாகக் கொண்டு வரப்பட்டதல்ல. அது ஏற்கனவே நடைமுறையிலுள்ள திருத்தமாகும். முதலில் இதிலுள்ள விடயங்களை நடைமுறைப்படுத்த வேண்டும். அதன் பின்னர் 13 பிளஸ் பற்றி கவனம் செலுத்தலாம் - என்றார். (ஐ)

# கஞ்சிப்பானை இம்ரான் ஓமானில் தலைமறைவு?

கொழும்பு, பெப். 11

நீதிமன்றம் பிணை வழங்கியிருந்த நிலையில், இலங்கையிலிருந்து தப்பியோடிய நிழல் உலக தாதா கஞ்சிப்பானை இம்ரான், ஓமான் எல்லையில் பதுங்கியிருப்பதாக வெளியாகியுள்ளன.

முக்கிய சில வட்டாரங்களை மேற்கோள்காட்டி சிங்கள நாளிதழொன்று இந்த தகவலை வெளியிட்டுள்ளது.

மன்னாரில் இருந்து கப்பல் மூலம் தமிழகம் சென்ற கஞ்சிப்பானை இம்ரான், இந்தியாவில் இருந்து போலி கடவுச்சீட்டு மூலம் நேபாளம் சென்றுள்ளார். அங்கு சிறிது காலம் தங்கியிருந்த பின்னர், ஓமானுக்குச் சென்றுள்ளார்.

கஞ்சிப்பானை இம்ரான் உட்பட மேலும் சில பாதாளக் குழு உறுப்பினர்கள் ஓமான் எல்லையில் பதுங்கியுள்ளனர் எனக் கூறப்படுகின்றது.

இலங்கையில் இடம்பெற்ற பல கொலைகள் மற்றும் போதைப்பொருள் கடத்தலுடன் தொடர்புபட்டவரே கஞ்சிப்பானை இம்ரான். (அ)

# ஆசிரியர் நியமனத்தை வேலையற்ற இளம் பட்டதாரிகளுக்கு வழங்குங்கள்!

## வேலையற்ற பட்டதாரிகள் சங்கம் கோரிக்கை

யாழ்ப்பாணம், பெப். 11

ஆசிரியர் நியமனத்தை வேலையற்ற பட்டதாரிகளான இளம் பட்டதாரிகளுக்கு வழங்கவேண்டும் என வேலையற்ற பட்டதாரிகள் சங்கப் பிரதிநிதிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இது குறித்து அவர்கள் மேலும் தெரிவிக்கையில்-

அரசாங்கம் பட்டதாரிகளுக்கான நியமனங்களை நிறுத்தியுள்ளது. தனியார் நிறுவனங்கள் பட்டதாரிகளை நிராகரித்து வருகின்றன.

சுயதொழிலை உருவாக்குவதற்கான முதலீடுகள் இல்லை. வங்கிகளில் வட்டிக்குப் பணம் பெற்று சுயதொழிலை உருவாக்கவும் முடியவில்லை.

இவ்வாறான சூழ்நிலையில் எமது சமுதாயத்தின் வரிப்பணத்தில் கல்வி கற்ற நாம் சமுதாய நலனுக்காக செயற்படாமல் இருப்பது எமக்கு குற்ற உணர்வினைத் தருவதோடு, பெற்றவர்களுக்கும், சகோதரர்களுக்கும் உரிய கடமைகளை நிறைவேற்ற முடியாமலும் எமது

எதிர்காலத்துக்கான சேமிப்பையோ வாழ்க்கையைத் தொடங்குவதற்கான திட்டமிடலையோ

உருவாக்கமுடியாத சூழலுக்குள் தள்ளப்பட்டுள்ளோம்.

எமது எதிர்காலம் தொடர்பில் கேள்வியையும் அதன் வழியே, விரக்தியையும் கொண்டிருப்பது பெரும் மனவேதனையைத் தருகின்றது.

ஆகவே, எமக்கான எதிர்காலம் மீட்சி பெறாதா எனும் கவலையோடு, அரசாங்கம் எதிர்கொண்டுள்ள பிரச்னைகளை அறிந்தும் அரசுக்கு அழுத்தம் கொடுக்கும் சூழ்நிலைக்கு வந்துள்ளோம்.

அரசாங்கத்தால் கொடுக்கப்படவிருக்கும் ஆசிரியர் நியமனத்துக்கு பட்டதாரிகள் தேர்வு இடம்பெற இருப்பதனை நன்கு அறிவோம்.

ஆகவே, இளம் பட்டதாரிகளாகிய எங்களின் மீது அக்கறை செலுத்தும் கடமையும் பொறுப்பும் உங்களுக்கு இருக்குமென்பதையும் நாம் உணர்கின்றோம்.

1. பொருத்தமான பட்டதாரிகளை பொருத்தமான ஆசிரியர் நியமனங்களுக்கு உள்வாங்கவேண்டும்.

2. 35 வயதுக்கு உட்பட்டவர்களை ஆசிரியர் நியமனத்திற்கு உள்வாங்கவேண்டும்.

3. ஓய்வூதியத்திற்கு உரிய வயதை அண்ணளவாக குறைத்தல் வேண்டும் .

4. தகுதி வாய்ந்த ஆசிரியர்களை சேவையில் இணைத்துக் கொண்டதன் பின்னர் பாடங்களுக்கான பற்றாக்குறை ஏற்படும் இடத்தில் தகுதி வாய்ந்த பட்டதாரிகளை பாட ரீதியாக வெளியிலிருந்து இணைத்துக்கொள்ள வேண்டும்.

5. யாழ்ப்பாணத்தில் திறக்கப்படவிருக்கும் இந்திய நிதி திட்டத்தில் உருவான கலாசார மண்டபத்துக்கான பணியாளர்களாக, தகுதியான பட்டதாரிகளையே உள்வாங்க வேண்டும்.

6. யாழ்ப்பாணத்தில் உருவாகும் நகரசபை மண்டபத்துக்கும் உரிய பட்டதாரிகளை உள் சேர்க்கவேண்டும்.

7. காங்கேசன் துறையில் உருவாகவிருக்கும் இந்திய இலங்கை கடல்வளி வர்த்தக மையத்தின் முக்கியமான பணிக்கு தகுதியான பட்டதாரிகளையே உள் சேர்க்கவேண்டும்.

மேற்கூறிய அனைத்தையும் நிவர்த்தி செய்வதினூடாக எமக்கான வேலைவாய்ப்பை உருவாக்கமுடியுமென எதிர்பார்க்கின்றோம்.

ஆகவே, எமது எதிர்காலத்தின் மேல் கரிசனை கொண்டு எமது கோரிக்கைகளை பரிசீலித்து ஒரு திடமான தீர்வை பெற்றுத்தருவீர்கள் என நம்புகின்றோம் - என்றனர். (அ)

# அதிகாரப் பகிர்வு கிட்டும்போது மலையக மக்களை கைவிடாதீர்!

## அமெரிக்காவிடம் வேண்டுகோள்

கொழும்பு, பெப். 11

**இலங்கை இனப்பிரச்னைக்கு தீர்வாக அரசியல் அதிகார பகிர்வு கொண்டு வரப்படும்போது மலையகத் தமிழ் மக்கள் ஒரு தரப்பாக ஏற்றுக் கொள்ளப்படுவதை அமெரிக்கா உறுதி செய்ய வேண்டும் என அமெரிக்க தூதுவர் ஜூலி சங் இடம் வலியுறுத்தியதாக மலையக அரசியல் அரங்கத்தின் தலைமை ஒருங்கிணைப்பாளர் மயில்வாகனம் திலகராஜா தெரிவித்துள்ளார்.**

அமெரிக்கத் தூதுவருடன், நேற்று முன் தினம் நுவரெலியாவில் இடம்பெற்ற சந்திப்பில் இந்த விடயங்களை எடுத்துரைத்ததாக, திலகராஜா விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன்போது, மலையக மக்களது பல்வேறு பிரச்னைகள் குறித்தும், அவற்றுக்கான தீர்வு திட்டம் தொடர்பிலும் அதற்கு அமெரிக்கா உதவி வழங்கும் வழிமுறைகள் குறித்தும் அமெரிக்கத் தூதுவரின் கவனத்தை ஈர்த்ததாக திலகராஜா தெரிவித்துள்ளார்.

இலங்கையில் தீர்க்கப்படாதிருக்கும் மலையக மக்களின் பிரச்னைகள் குறித்தும் அமெரிக்கா கவனம் செலுத்த வேண்டும்.

மலையக மக்களின் மிக முக்கிய பிரச்னையாக உள்ள அரசியல் அதிகாரப் பகிர்வு, நிர்வாக அதிகாரப் பகிர்வு ஆகிய இரண்டு விடயங்களிலும் கூடிய கவனத்தைச் செலுத்த வேண்டிய தேவை உள்ளதாகவும், அமெரிக்க தூதுவரின் கவனத்துக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளது.

அத்துடன், காணி, கல்வி, சுகாதார அபிவிருத்தி முதலான விடயங்களில் காட்டப்படும் பாரபட்சம் மற்றும் கட்டாய கருத்தடை முதலானவை குறித்தும் எடுத்துக் கூறப்பட்டதாக மலையக அரசியல் அரங்கத்தின் தலைமை ஒருங்கிணைப்பாளர் மயில்வாகனம் திலகராஜா தெரிவித்தார். (அ)

# தேசியவாதமே இங்கு இருக்கும் குற்றவாளிகளின் இறுதித்தளம்

## பாராளுமன்றில் கூறினார் ஹக்கீம்

கொழும்பு, பெப். 11

தேசியவாதமே குற்றவாளிகளின் இறுதித் தளம் என்று ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் ரவூப் ஹக்கீம் தெரிவித்துள்ளார்.



ஜனாதிபதியின் கொள்கை விளக்க உரை தொடர்பான ஒத்திவைப்பு விவாதத்தில் நேற்று பங்கேற்று உரையாற்றிய அவர், 13ஆவது அரசியலமைப்பு தொடர்பில் மேற்கொள்ளப்படும் எதிர்ப்புகளை விமர்சித்தார்.

உரிமைகளுக்காக ஆயுதம் ஏந்தி பின்னர், அதனை கைவிட்டு பாராளுமன்றத்துக்கு வந்துள்ள தர்மலிங்கம் சித்தார்த்தன் இன்று பாராளுமன்றில் தமிழில் உரையாற்றியபோது, அவருடைய உணர்வுகளை பாராளுமன்றில் உள்ள எத்தனை பேர் புரிந்துக்கொண்டார்கள் என்றும் ஹக்கீம் கேள்வி எழுப்பினார்.

அதேநேரம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் பிரிக்கப்படாத நாட்டில் அதிகாரப்பரவாலக்கத்தை கோருகிறது.

எனினும் தொடர்ந்தும் பழைய வரலாற்றையே கூறிக் கொண்டிருப்பதாக ரவூப் ஹக்கீம் சுட்டிக்காட்டினார்.

இதேவேளை தற்போதைய சூழ்நிலையில் இந்தியா, இலங்கைக்கு 4 பில்லியன் டொலர்கள் என்ற பாரிய உதவியை அளித்துள்ளது. அத்துடன் 1987 ஆண்டில் இலங்கையின் இறைமைக்காக இந்திய அமைதிப்படையினர் தமது உயிர்களை அர்ப்பணம் செய்தனர். எனினும் பலர் இன்று இந்தியாவை குற்றம் சுமத்திக்கொண்டிருக்கின்றனர்.

இந்த நிலையில் தேசியவாதமே குற்றவாளிகளின் இறுதி இடம் என்று முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் ரவூப் ஹக்கீம் கூறினார். (அ)

# சஜித் மீது கடும் அதிருப்தி; விலகினார் வடிவேல் சுரேஸ்

கொழும்பு, பெப். 11

ஐக்கிய மக்கள் சக்தியின் அனைத்துப் பதவிகளில் இருந்தும் விலகுவதாக, அதன் பாராளுமன்ற உறுப்பினர் வடிவேல் சுரேஸ் அறிவித்துள்ளார்.

பதுளை -மடுல்சீமையில் நேற்று முன் தினம் இடம்பெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் பங்கேற்பதாக முன்னதாக அறிவித்திருந்த எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ, சுகவீனம் காரணமாக அதில் பங்கேற்க முடியாது என பின்னர் அறிவிப்படுத்தி இருந்ததாக வடிவேல் சுரேஸ் தெரிவித்தார்.

எனினும், குறித்த சந்தர்ப்பத்தில், வெலிமடையில் இடம்பெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டத்தில், சஜித் பிரேமதாஸ பங்கேற்றுள்ளார்.

இந்த நிலையில், எதிர்க்கட்சித் தலைவரின் வருகைக்காக காத்திருந்த பொதுமக்கள் ஏமாற்றமடைந்துள்ளனர்.

எனவே, எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவின் இந்த செயற்பாடு தொடர்பில், அதிருப்தி ஏற்பட்டுள்ளமையால், ஐக்கிய மக்கள் சக்தியின் அனைத்துப் பதவிகளில் இருந்தும் விலகுவதாக பாராளுமன்ற உறுப்பினர் வடிவேல் குறிப்பிட்டார்.

இதன்படி, ஐக்கிய மக்கள் சக்தியின் பிரதி பொதுச் செயலாளர் மற்றும் பசறை தொகுதியின் பிரதம அமைப்பாளர் ஆகிய பதவிகளில் இருந்து விலகுவதாக வடிவேல் சுரேஸ் கூறினார். (அ)

# 59 இலங்கைப் பணிப்பெண்கள் ஓமானிலிருந்து நாடு திரும்புவர்



கொழும்பு, பெப். 11

ஓமானில் பாதுகாப்பு இல்லங்களில் தங்கவைக்கப்பட்டுள்ள 59 இலங்கை பெண்களை விரைவில் நாட்டுக்கு அழைத்து வரவுள்ளதாக வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சர் மனுஷ நாணயக்கார தெரிவித்துள்ளார்.

ஓமானுக்கு நான்கு நாட்கள் விஜயம் மேற்கொண்டுள்ள அமைச்சர் மனுஷ நாணயக்கார, அங்குள்ள பாதுகாப்பு இல்லங்களில் தங்கவைக்கப்பட்டுள்ள பெண்களைச் சந்தித்து கலந்துரையாடிய போதே இதனை குறிப்பிட்டார்.

அந்நாட்டு தொழில் வழங்குநர்களுக்கு செலுத்தவேண்டிய கட்டணங்களைச் செலுத்தி, குறித்த பெண்களை விரைவில் நாட்டுக்கு அழைத்துவர ஜனாதிபதி அனுமதி வழங்கியுள்ளதாகவும் அமைச்சர் கூறினார்.

சட்டச் சிக்கல்களை விரைவில் தீர்த்து, அவர்களை நாட்டுக்கு அழைத்துவர துரித நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் வெளிநாட்டு வேலை வாய்ப்பு அமைச்சர் மனுஷ நாணயக்கார குறிப்பிட்டார்.

# சிறீலங்கன் எயார்லைன்ஸ்க்கு 100 மில்லியன் டொலர்கள் கடன்!

கொழும்பு, பெப். 11

சிறிலங்கன் எயார்லைன்ஸ் 100 மில்லியன் அமெரிக்க டொலர்களுக்கும் அதிகமான கடனில் சிக்கித் தவிப்பதாகவும், இந்தக் கடனையும் வட்டியையும் செலுத்தும் போது நிறுவனத்திடம் எதுவும் இருக்காது எனவும் துறைமுகங்கள், கப்பல் போக்குவரத்து மற்றும் விமானப் போக்குவரத்து அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா நேற்று பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

அரசாங்கத்தின் கொள்கைப் பிரகடனம் மீதான ஒத்திவைப்பு விவாதத்தின்போதே அமைச்சர் இதனை கூறினார்.

இந்த பிரச்னைகளுக்கு தீர்வாக இந்த நிறுவனங்கள் மறுசீரமைக்கப்படவேண்டும் எனவும் அவர் குறிப்பிட்டார்.(அ)

# நெல்லுக்கு உத்தரவாத விலையை ஜனாதிபதி நிர்ணயிக்கவேண்டும்

## கிளிநொச்சியில் இருந்து கடிதம்

கிளிநொச்சி, பெப். 11

நெல்லுக்கான உத்தரவாத விலையை நிர்ணயிக்கவேண்டும் என கிளிநொச்சி மாவட்ட கமக்கார அமைப்புகளின் மாவட்ட சம்மேளனம், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு அனுப்பி வைத்துள்ள கடிதத்தில் கோரிக்கை விடுத்துள்ளது.

அக் கடிதத்தில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:

நாட்டில் ஏற்பட்ட பணவீக்கம், பொருளாதார நெருக்கடி, விவசாய உள்ளீடுகள் மீதான இறக்குமதிக்குத் தடை, உள்நாட்டு வர்த்தகர்களின் பதுக்கல் வியாபாரம், கட்டுப்பாடற்ற விலை நிர்ணயம் என்பவற்றால் மிக மோசமாக பாதிப்படைந்த நாம், தொடர்ந்து விவசாயச் செய்கையில் ஈடுபட முடியாத நிலையில் எமது வளமான நிலத்தையும் நீரையும் பயனற்றதாக்கி விடுவோமோ என்று அச்சம் அடைய வைக்கின்றது.

தற்போது மிகவும் பிரயாசப்பட்டு உற்பத்தி செய்த நெல், சராசரியாக ஒரு கிலோ கிராமுக்கு ரூபாய் 110.00 உற்பத்தி செலவாகின்றது. இந்த நெல்லை தற்போது தனியார் வர்த்தகர்கள் ஒரு கிலோ கிராமுக்கு 66.00 ரூபாய்க்குத்தான் கொள்வனவு செய்கின்றார்கள் (ஈர நெல்). இது எம்மை மிக மோசமாக பாதிக்கின்றது.

இவ்விடயத்தை நாம் துறைசார் திணைக்களங்களின் கவனத்துக்குக் கொண்டு வந்தும் எதுவித பயனும் கிடைக்கவில்லை. தயவு செய்து தாங்கள் விவசாயிகளாகிய எமது வாழ்வியலை கவனத்தில் கொண்டு, பின்வரும் விடயங்களை ஆராய்ந்து நடவடிக்கை எடுக்க வேண்டுகின்றோம்.

நெல்லிற்கு உத்தரவாத விலையை நிர்ணயித்தல், நெல் சந்தைப்படுத்தும் சபை நெல் கொள்வனவு செய்ய உடன் நடவடிக்கை மேற்கொள்ளல், தனியார் நெல் கொள்வனவாளர்களையும் உத்தரவாத விலைக்கு நெல் கொள்வனவு செய்ய நடவடிக்கை மேற்கொள்ளல். மேற்படி விடயங்களில் தாங்கள் நேரடியாக கவனம் கொண்டு, விவசாயிகளையும் நாட்டின் உணவு உற்பத்தியையும் பாதுகாக்க பணிவோடு வேண்டி நிற்கின்றோம் - என குறிப்பிடப்பட்டுள்ளது. (அ)

# நீதிபதிகளின் சம்பளத்தில் வரி அறவிட விதிக்கப்பட்ட இடைக்கால தடை நீடிப்பு

கொழும்பு, பெப். 11

அரசாங்கத்தின் புதிய வரியை நீதிபதிகளிடம் அறவிட வேண்டாம் என மேன்முறையீட்டு நீதிமன்றம் கடந்த 24 ஆம் திகதி வெளியிட்ட இடைக்கால தடையுத்தரவு மீண்டும் நீடிக்கப்பட்டுள்ளது.

மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் அது தொடர்பில் இடம்பெறும் மனு மீதான விசாரணை நிறைவடையும் வரை இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

ஒரு இலட்சம் ரூபாவிற்கு அதிக வருமானம் பெறும் அனைவரிடமிருந்தும் 6 வீதம் முதல் 36 வீதம் வரை வரி அறவிடுவதற்கு அண்மையில் அரசாங்கம் நடவடிக்கை எடுத்தது.

அந்த தீர்மானத்தை ஆட்சேபனைக்கு உட்படுத்தி, நீதிச் சேவை அதிகாரிகள் சங்கம் மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் தாக்கல் செய்த எழுத்தாணை மனு காரணமாக அந்த வரியை நீதிபதிகளிடமிருந்து அறவிடுவது இடைநிறுத்தப்பட்டது.

இந்த நிலையில், மனு மீதான விசாரணைகள் நிறைவடையும் வரை குறித்த இடைக்கால தடையுத்தரவை நீடிக்குமாறு நேற்று முன் தினம் மனு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோது மேன்முறையீட்டு நீதிமன்ற நீதிபதி சோபித ராஜகருணா இறைவரி திணைக்களத்துக்கு உத்தரவிட்டார்.

மனு மீதான விசாரணை எதிர்வரும் 21 ஆம் திகதி மீண்டும் இடம்பெறவுள்ளது. (அ)

# பெப்ரவரி 04: சுதந்திரம் எப்போதாவது பொருள் பொதிந்ததாக இருந்துள்ளதா?



பேராசிரியர்
ஹிரோஷன் ஹெட்டியாரச்சி

**பெப்ரவரி 04ஆம் திகதி நாங்கள் கொண்டாடும் நிகழ்வு பிரிட்டிஷ் ஆட்சியாளர்கள் தாமாகவே முன்வந்து இலங்கையிலிருந்து வெளியேறிச் சென்ற ஒரு நிகழ்வாகும். நாங்கள் உண்மையில் எந்தவொரு சுதந்திரத்தையும் போராடிப் பெற்றுக் கொண்டிருக்கவில்லை.**

ஒரு சிறுவன் என்ற முறையில் எனது நினை விலிருக்கும் முதலாவது சுதந்திரதினக் கொண்டாட்டம் 1984 இல் இடம்பெற்ற கொண்டாட்டமாகும். அதனை இன்னமும் நான் நினைவில் வைத்திருக்கிறேன் ஏனெனில், அக்கொண்டாட்டங்கள் எனது ஊரான களுத்துறையில் இடம்பெற்றன. அது முழு அளவிலான இராணுவ அணிவகுப்பு மரியாதையுடன் கட்டுகுருந்த ஓட்டப் போட்டி மைதானத்தில் அரை நாள் நிகழ்வாக கோலாகலமாக கொண்டாடப்பட்டது. களுத்துறை பிரதேசத்தை சூழவுள்ள அனைத்து பெரிய பாடசாலை களிலும் படிக்கும் வளர்ந்த மாணவர்கள் அணிவகுப்பில் பங்கேற்க வேண்டுமென கேட்டுக் கொள்ளப்பட்டிருந்தார்கள். எனது மூத்த சகோதரரும் அதில் அடக்கம். இதற்கான ஒத்திகைகள் பல நாட்கள் இடம்பெற்றன. ஆனால், எனது சகோதரரோ அல்லது அவருடைய நண்பர்களோ அது குறித்து அலுத்துக் கொண்டதை நான் பார்க்கவில்லை. நகரின் வழமையான நடவடிக்கைகளுக்கு இடையூறு ஏற்பட்டிருந்த போதி லும், எவரும் அது குறித்து புகார் சொல்லவில்லை. அத்தகைய பாரியளவிலான ஒரு கொண்டாட்டத்திற்கான தேவை குறித்தோ அல்லது அது தொடர்பாக பெருந்தொகைப் பணத் தைச் செலவிடுவதற்கான தேவை குறித்தோ எவரும் கேள்வியெழுப்பியதாகத் தெரியவில்லை. அந்த நாட்களில் வாழ்க்கை மிகவும் எளிமையாக இருந்து வந் தது. வேறு கேளிக்கைகள் எவை யும் இல்லாதிருந்த நிலையில் மக்கள் இத்தகைய அரிதான குறுக்கீடுகளை விரும்பியிருக்கக் கூட முடியும். இந்தப் பாரிய கொண்டாட்டம் காரணமாக உள்ளூர் பாதைகள் செப்பனிடப்பட்டதுடன், தேசிய செய் திப் பத்திரிகைகளில் களுத்துறை தொடர்பான செய்திகள் இடம்பெற்றன. அந்த நாட்களைப் பொறுத்த வரையில் அவை இரண்டும் அரிய நிகழ்வுகளா கும்.

இப்பொழுது கால இயந்தி ரத்தை முன்னோக்கித் தள்ளி 2002 - 2004 கால கட்டத்துக்கு வருவோம். மற்றொரு விசேட கொண்டாட்டம் குறித்த ஒரு சில செய்திகளை வாசித்தது எனக்கு நினைவிருக்கிறது. ஆனால், இந்தத் தடவை அது சுதந்திரம் குறித்த செய்திகளாக இருக்கவில்லை. உண்மையிலேயே அதற்கு நேர்மாறானதாக இருந்தது. போர்த்துக்கேயர்கள் இலங்கையைக் கைப்பற்றிய தமது 500ஆவது ஆண்டு நிறைவைக் கொண்டாடும் பொருட்டு போர்த்துக்கல் நாட் டுக்கு அழைப்பு விடுப்பது தொடர்பாக அரசாங்க மட்டத்தில் ஒரு சில பேச்சுவார்த்தைகள் அப்பொழுது இடம்பெற்று வந்தன. அச்சந்தர்ப்பத்தில் நான் மேற்படிப்புக்காக வெளிநாடு சென்றிருந்ததுடன், அது தொடர்பாக மேலும் தகவல் களை பெற்றுக் கொள்வதற்கு இணையத்தையே நம்ப வேண்டியிருந்தது. அது அவ்வளவு இலகுவானதாக இருக்கவில்லை. இது இரண்டு தசாப்தங்களுக்கு முன்னர் இடம்பெற்ற ஒரு சம்பவமாக இருந்து வந்ததுடன், டிஜிடல் ஊடகம் அப்பொழுது அதன் குழந்தைப் பருவத்தில் இருந்தது. அத்தகைய கொண்டாட்டமொன்றுக்கு இலங்கையின் முன்னைய காலனித்துவ எஜமான் நாடொன்றுக்கு அழைப்பு விடுக்கும் யோசனை தொடர்பாக பொதுமக்கள் மத் தியில் சிறிதளவுக்கு மட்டுமே எதிர்ப்பு நிலவி வந்ததையும் என்னால் உணர முடிந்தது. எனது நினைவிற்கு எட்டிய வரையில் அந்தத் திட்டம் ஒரு போதும் நிறைவேறவில்லை என்றே தெரிகிறது. அநேகமாக 2004ஆம் ஆண்டு இடம்பெற்ற அரசாங்க மாற்றம் இதற்கான காரணமாக இருந்திருக்க முடியும்.

காலச் சக்கரத்தை மேலும் வேகமாக இரு தசாப்தங்கள் நகர்த்தும் பொழுது நாங்கள் இன்றைய கால கட்டத்துக்கு வருகிறோம். இந்த ஆண்டு இலங்கை காலனித்துவ எஜமானர்களுக்கு பிரியாவிடை கொடுத்த 75ஆவது ஆண்டு நிறைவை கொண்டாடுகிறது. நாடு அநேகமாக வங்குரோத்து நிலையை அடைந்திருப்பதுடன், சம்பளங்களை செலுத்துவ தற்கோ, தேர்தல்களை நடத்து வதற்கோ, அத்தியாவசியப் பொருட்களை இறக்குமதி செய்வதற்கோ அரசாங்கத்திடம் போதியளவில் பணம் இல்லை. ஆனால், 75ஆவது சுதந்திர தினத்தை ஆடம்பரமான விதத்தில் பெரும் பணச் செலவில் கொண்டாடுகிறது. இந்தத் தடவை தென்படும் ஒரு குறிப்பிடத்தக்க வித்தியாசம் அது தொடர்பான பொதுமக்களின் எதிர்வினையாகும். இதற்கு முன்னர் நான் எடுத்து விளக்கிய இரண்டு சம்பவங்களைப் போலன்றி, காலத்துக்கு ஒவ்வாத அநாவசியமான செலவுகள் குறித்து மிகவும் வலுவான விதத்தில் இந்தத் தடவை பொதுமக்கள் கூக்குரல் எழுப்பி வருவதனை அவதானிக்க முடிகின்றது.

இறந்த காலத்திலிருந்தும், நிகழ் காலத்திலிருந்தும் எடுக்கப்பட்ட மேலே குறிப்பிடப் பட்ட மூன்று கதைகளும் ஒன்றுடன் ஒன்று தொடர்பற்றவையாகத் தென்பட்டாலும் கூட, ஒன்றை மற்றொன்றுடன் இணைக்கும் ஓர் இழை இருந்து வருவதனை என்னால் அவதானிக்க முடிகிறது. அந்த இழை இந்த மூன்று நிகழ்வுகளின் போதும் ஜனாதிபதி ரணில் விக் கிரமசிங்க வகித்து வந்திருக்கும் பாத்திரமாகும். 1984 இல் எனது சொந்த ஊரில் சுதந்திர தினம் கொண்டாடப்பட்ட பொழுது இளம் விக்கிரமசிங்க அந்த நிகழ்வுகளின் ஏற்பாட்டாளர்க ளில் ஒருவராக இருந்து வந்தார். அப்போதைய கல்வி அமைச்சர் என்ற முறையில் பாடசாலை பிள்ளைகளை ஒன்று திரட்டி, அணிவகுப்புக்கு எடுத்து வரும் பொறுப்பு அவருக்கு வழங்கப் பட்டிருந்ததுடன், அந்தப் பிரதேசத்தில் அடிக்கடி அவருடைய நடமாட்டமும் காணப்பட்டது. இலங்கையை கைப் பற்றிய தமது 500ஆவது ஆண்டு நிறைவைக் கொண்டாடுவதற் கென போர்த்துக்கேய அரசாங் கத்துக்கு அழைப்பு விடுப்பது தொடர்பான கருத்து சுமார் இரண்டு தசாப்தங்களுக்குப் பின்னர் முன்வைக்கப்பட்ட சந்தர்ப்பத்தில் அவர் நாட்டின் பிரதம மந்திரியாக இருந்தார். இறுதியாக, இப்பொழுது இலங்கையின் நிறைவேற்று ஜனாதிபதி என்ற முறையில் 75 ஆவது சுதந்திர தினத்தைக் கொண்டாடுகிறார். இந்தக் கால அட்டவணை இத்துடன் நின்று விடவில்லை. தனது வாழ்நாளில் பெருந்தொகையான சுதந்திர தினக் கொண்டாட்டங்களுடன் சம்பந்தப்பட்டிருந்த அந்த மனி தர் 100ஆவது சுதந்திர தினக் கொண்டாட்டம் தொடர்பாக வும் ஏற்கனவே ஆர்வம் காட் டத் தொடங்கியிருக்கின்றார். “நாங்கள் எமது 100 ஆவது சுதந்திர தினத்தை 2048ஆம் ஆண்டில் கொண்டாடும் பொழுது இலங்கை முழுமையாக அபிவிருத்தியடைந்த ஒரு நாடாக இருக்கும்” என ஒரு சில மாதங்களுக்கு முன்னர் நாடா ளுமன்றத்தில் உரை நிகழ்த்தும் பொழுது அவர் கூறியிருந்தார்.

ஜனாதிபதி விக்கிரமசிங்கவினால் தெரிவிக்கப்பட்ட இந்தக் கருத்து கேலிக்கூத்தானதா அல் லது ஒரு கிண்டலாக இருந்து வந்ததா என எனக்கு சரியாகத் தெரியாது. ஒரு வேளை அது இரண்டுமாக இருந்து வர முடியும். என்னைப் பொறுத்தவரையில் சுமார் அரை நூற்றாண்டு காலம் நாட்டில் அதிகாரமிக்க முக்கியமான பல அரசியல் பதவிகளை வகித்து வந்திருக்கும் ஒரு முன்னணி அரசியல்வாதி நாட்டை அபிவிருத்தி செய்வதற்கு இன்னும் 25 ஆண்டுகள் தேவை எனக் கூறுவது வேடிக்கையானதாகும். அரசியல் மேட் டுக்குடியினர் நாட்டு மக்களை கடந்த 75 வருட காலமும், அநேகமாக அடுத்து வரும் 25 வருட காலமும் படு முட்டாள்களாக வைத்திருப்பது அவரைப் பொறுத்தவரையில் நக்கலடிக் கும் ஒரு செயலாக இருந்து வர முடியும். சுதந்திர தின நாடகம் பல வருட காலம் அரசியல் மேட்டுக்குடியினரால் - அரசிஷயல் குடும்பங்களினால் எவ்வாறு துஷ்பிரயோகம் செய்யப்பட்டு வந்துள்ளது என்பதற்கு இந்தக் கூற்றே ஓர் உதாரணமாக இருக்கின்றது. மக்களை அழுத்திக் கொண்டிருக்கும் ஏனைய பிரச்சினைகளிலிருந்து கவனத்தைத் திசை திருப்புவதற்கான ஒரு வசதியான கேடயமாக ஒவ்வோர் ஆண்டும் சுதந்திர தினம் பயன்படுத்தப்பட்டு வந்துள் ளது. இந்தத் தடவை 100ஆவது சுதந்திர தினம் தொடர்பான அபிவிருத்திக் குறிக்கோள்களை அதனுடன் இணைத்து, மேலும் 25 வருட காலம் எமக்குத் தேவைப்படுகின்றது எனக் கூறுவதன் மூலம் ஜனாதிபதி அதனை அடுத்த மட்டத்திற்கு எடுத்துச் சென்றுள்ளார். எமது அரசியல் வாதிகளினால் இலங்கையின் எதிர்காலம் குறித்து முன்வைக்கப்படும் எந்த விதமான எதிர் கால திட்டங்களும் அவர்களுடைய கடந்த கால சாதனைக ளின் பின்னணியில் வைத்து மதிப்பிடப்படுதல் வேண்டும். பிரித்தானியர்கள் 1948 இல் நாட்டிலிருந்து வெளியேறிய பொழுது, இலங்கை ஆசியாவின் இரண்டாவது மிகப் பெரிய பொருளாதாரமாக இருந்தது. இப்பொழுது சுமார் ஐம்பது நாடுகளின் பட்டியலில் அது முப்பதாவது இடத்தில் இருக் கின்றது. தற்பொழுது ஆசியா வின் தலைசிறந்த பொருளாதாரமாக சிங்கப்பூர் இருந்து வருவதுடன், எமது மிகச் சிறிய அயல் நாடான மாலை தீவுகள் அந்தப் பட்டியலில் பதினைந்தாவது இடத்தில் இருக்கிறது. இந்த இரு தீவு நாடுகளும் இலங்கை யைப் போலவே பிரித்தானியா வின் காலனித்துவ நாடுகளாக இருந்து வந்தவையாகும். அவையிரண்டும் இலங்கைக்கு சுதந்தி ரம் கிடைத்து இரு தசாப்தங்க ளுக்குப் பின்னர் சுதந்திரம் பெற் றுக் கொண்ட நாடுகளாக இருந்து வருகின்றன. இலங்கை யைப் போலன்றி அந்நாடுகள் அளவில் மிகச் சிறியவையாக இருந்து வருவதுடன், தம்மைச் சூழவிருக்கும் கடலைத் தவிர வேறு இயற்கை வளங்கள் எவற் றையும் கொண்டிருக்கவில்லை. நாங்களும் அந்தக் கடல் வளத் தைக் கொண்டிருக்கின்றோம். அந்நாடுகள் அபிவிருத்தி ஏணி யில் ஏறிக் கொண்டிருந்த பொழுது நாங்கள் எதிர் திசை யில் சென்று கொண்டிருந்தோம். ஏன்? ஜனாதிபதி விக்கிரமசிங்கவும், அவர் பிரதிநிதித்து வம் செய்யும் அரசியல் கலாசார மும் அடுத்த இருபத்தைந்து வருடங்களுக்கான குறிக்கோள் களை உருவாக்கிக் கொள்வ தற்கு முன்னர் அவ்வாறு செய்வதற்கான நியாயப்படுத்தல்களை முன்வைக்க வேண்டும்.

இராணுவ அணிவகுப்புகள் மற்றும் துப்பாக்கி வேட்டுகள் தீர்த்து வைக்கப்படுவதுடன் இணைந்த விதத்தில் நடத்தப்படும் அணிவகுப்பு மரியாதைகள் என்பவற்றினால் ஒரு விதமான போலித் தேசியவாதம் அல்லது தேசபக்தி தூண்டப்பட்டு வருகின்றது. உண்மையான பிரச்சினைகளை மூடி மறைப்பதற்கான வசதியான கேடயங்களாக இவை இருந்து வருகின்றன. சுதந்திரம், ஜனநாயகம், நாட்டின் இறைமை போன்ற சொற்களில் போர்த்தப்பட்டு இந்த நிகழ்வு எம்முன் வைக்கப்படும் பொழுது, பலர் அதனை சரிவர புரிந்து கொள்வதில்லை. அதன் காரணமாக ஆடம்பரமான சுதந்திர தின கொண்டாட்டங்களுக்கான தேவை குறித்து கேள்வி எழுப்புவதற்கு எவரும் துணிவதில்லை. இறுதியில் இதற்கான செலவுத் தொகைகள் அனைத்தும் மக்களின் வரிப் பணத்தில் இருந்தே

(09ஆம் பக்கம் பார்க்க)

# துருக்கி நிலநடுக்கம்: "பேரழிவுக்கு நடுவே ஒரு நம்பிக்கை"

## 72 மணி நேரத்திற்கு பிறகு பெண் உயிருடன் மீட்பு

துருக்கி, சிரியாவில் நேரிட்ட பயங்கர நிலநடுக்கத்தில் பலியானோர் எண்ணிக்கை 15 ஆயிரத்தை தாண்டியுள்ளது. கட்டட இடிபாடுகளில் இருந்து 3 நாட்களுக்குப் பிறகு பெண் ஒருவர் உயிருடன் மீட்கப்பட்டிருப்பதால், காணாமல் போன மேலும் பலர் உயிருடன் இருக்கக் கூடும் என்ற நம்பிக்கை பிறந்துள்ளது.

துருக்கியின் தெற்குப் பகுதியில் உள்ள இஸ்கேண்டிருன் நகரத்தில் மீட்புப் பணியில் ஈடுபட்டிருந்த குழுவினர், அங்கே நிலநடுக்கத்தால் சரிந்து கிடந்த அடுக்குமாடி குடியிருப்பு ஒன்றின் இடிபாடுகளுக்கு அடியில் ஒருவர் உயிருடன் இருப்பதற்கான அறிகுறிகளை உணர்ந்தனர். இதையடுத்து, அங்கு சுற்றிலும் குழுமியிருந்த மக்களை அமைதி காக்குமாறு அறிவுறுத்திய அவர்கள், கிரேன் போன்ற தங்களது இயந்திரங்களின் இயக்கத்தையும் நிறுத்தினர்.

சில நிமிட அமைதிக்குப் பின்னர், அங்கு பெண் ஒருவர் உயிருடன் இருப்பதை கண்ட மீட்புக் குழுவினர், ஆம்புலன்சை வரவழைத்தனர்.

நிலநடுக்கம் தாக்கிய 3 நாட்களுக்குப் பிறகு பெண் உயிருடன் மீட்கப்பட்டதைக் கண்டதும் சுற்றிலும் கூடியிருந்த மக்கள் மகிழ்ச்சியை வெளிப்படுத்தினர்.

அதே கட்டடத்தில் வசித்த தனது உறவினர்களின் கதி என்னவென்று இன்னும் தெரியாத ஒரு பெண், அங்கிருந்த காரின் முன்பகுதியில் முகம் புதைத்து அழுததைக் காண முடிந்தது.

பெண் உயிருடன் மீட்கப்பட்டதை நேரில் பார்த்துக் கொண்டிருந்த நபர் பேசுகையில், திங்களன்று ஏற்பட்ட நிலநடுக்கத்தால் இந்த 6 மாடி கட்டடம் இடிந்து தரைமட்டமான பிறகு இப்போது தான் ஒருவர் உயிருடன் மீட்கப்பட்டிருப்பதாகக் கூறினார்.

'சுமார் 50 வயதான அந்த பெண், தனியாக வசித்து வந்தார். அவரை மீட்புக் குழுவினர் பத்திரமாக தூக்கிச் சென்றதை ஆம்புலன்ஸ் அருகே நின்றிருந்த அவரது மகன் பார்த்துக் கொண்டிருந்தார்" என்று உள்ளூர் மக்கள் கூறினர்.

அங்கிருந்த பலருக்கும், காணாமல் போன அவர்களது உறவினர்கள் உயிருடன் மீட்கப்படுவார்கள் என்ற நம்பிக்கையை இந்த மீட்புக் காட்சி கொடுத்துள்ளது. இதுபோன்ற அற்புதம் நிகழும் என்று பெண் ஒருவர் கூறினார்.

துருக்கியில் நிலநடுக்கத்தால் ஏற் பட்ட பேரழிவுக்கிடையே, இந்த பெண் உயிருடன் மீட்கப்பட்ட காட்சி நம்பிக்கையையும், மகிழ்ச்சியையும் தரக் கூடிய மிகவும் அரிதான ஒன்றாக அமைந்தது.

இடிபாடுகளுக்கு நடுவே வேறு யாரேனும் சிக்கியுள்ளார்களா என்பதை கண்டறியும் பணியை மீட்புப் பணியாளர்கள் வெறும் கைகளாலேயே மீண்டும் தொடங்க, பணி மெதுவாக நடந்ததால் அங்கே சுற்றிலும் கூடியிருந்தவர்களின் மனநிலை மீண்டும் அமைதியற்றதாக மாறிப் போனது.





உள்ளூர் மருத்துவர் மெஹ்மத் ரியாத், திங்கட்கிழமை முதல் மருத்துவ ஊழியர்கள் அதிகமாக உள்ளனர் என்று கூறினார்.

'இடிபாடுகளில் சிக்கி நசுங்கியவர்களுக்கு சிகிச்சை அளிக்கிறோம். எலும்பு முறிவு, உடைந்த கழுத்துகள், தலையில் காயங்களுடன் ஏராளமானோரை கண்டிருக்கிறோம். அதிக உயிரிழப்புகளையும் கண்டுள்ளோம்" என்று அவர் கூறினார்.

'மருத்துவர்களாக நாங்கள் எங்கள் வேலையைச் செய்ய வேண்டும். ஆனால் உதவிக் குழுக்கள் பொறுப்பேற்கும் போது, நாங்கள் சொந்த குடும்பங்களைப் பற்றி சிந்திக்கிறோம்." என்றார் அவர்.

இஸ்கேண்டிருன் நகரில் திரும்பும் இடமெல்லாம் பேரழிவின் கோரத்தை பார்க்க முடிகிறது. பரபரப்பான மருத்துவமனைகள் உட்பட பல கட்டடங்கள் இடிந்து கிடக்கின்றன.

### உறவுகளைத் தேடி நீண்ட பயணம்

இஸ்தான்புல் நகரில் விமானத்தைப் பிடிக்க காத்திருந்த சாமெட் இல்மாஸ் என்பவர், தனது செல்போனில் சகோதரரின் புகைப்படத்தைக் காட்டுகிறார். நில நடுக்கத்தால் இடிந்து போன வீட்டின் சிதைவுகளுக்குள் அவர் புதையுண்டிருப்பதாக அவர் கூறுகிறார்.

பஹ்ரைனில் வசிக்கும் சாமெட், நிலநடுக்கத்திற்குப் பிறகு உறவுகளைத் தேடி தெற்கு துருக்கி நோக்கி பயணிக்கும் ஏராளமான மக்கள் திரளில் ஒருவர். மற்றவர்களைப் போலவே அவரும், தானே நேரடியாக சென்று கட்டட இடிபாடுகளை அகற்றினால் சகோதரனை மீட்டுவிட முடியும் என்று நம்புகிறார்.

26 வயதான சகோதரர் இஸ்மாயில், ஹாதே மாகாணத்தில் உள்ள உறவினர்களுடன் தங்கி, அங்குள்ள சூப்பர் மார்க்கெட் ஒன்றில் காசாளராக பணிபுரிந்து வந்துள்ளார். அவரது மைத்துனர் உள்ளிட்ட மற்றவர்கள் மீட்கப்பட்டு விட்ட நிலையில், இஸ்மாயில் எங்கே என்று இன்னும் தெரியவில்லை என்கிறார் சாமெட்.

'அவன் இல்லாத வெறுமையை என்னால் உணர முடிகிறது. அவனைத் தேடவே நான் பஹ்ரைனில் இருந்து துருக்கிக்கு வந்துள்ளேன். அவன் என்னுடைய ஒரே சகோதரன்," என்று மிகவும் உருக்கத்துடன் அவர் கூறினார்.

சாமெட் மட்டும் அல்ல, காணாமல் அன்புக்குரியவர்களைத் தேடி நிலநடுக்கத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளுக்குச் செல்லும் துருக்கி மற்றும் வெளிநாடுகளைச் சேர்ந்த பலரிடம் பேசியுள்ளோம்.

அன்டாக்யா நகரில், செவ்வாய்க் கிழமையன்று நிலநடுக்கத்தால் இடிந்து கிடக்கும் கட்டடத்தின் இடிபாடுகளை அகற்றி, உள்ளே யாரும் உயிருடன் இருக்கிறார்களா என்று சிலர் தேடிக் கொண்டிருந்தனர். கட்டிடத்தில் வசிப்பவர்களின் குடும்ப உறுப்பினர்கள் என்றும், இஸ்தான்புல்லில் இருந்து தங்கள் உறவினர்களைத் தேடி வந்திருப்பதாகவும் அவர்கள் தெரிவித்தனர்.

நிலநடுக்க பாதிப்புகளை அரசு எதிர்கொண்ட விதம் குறித்து அதிருப்தி அதிகரித்துள்ள சூழலில், விமர்சனங்களுக்கு துருக்கி அதிபர் ரிசெப் தாயிப் எர்துவான் பதிலடி கொடுத்துள்ளார்.

'இவ்வளவு பெரிய பேரழிவை எதிர்கொள்ள தயாராக இருப்பது இயலாத காரியம்," என்று அவர் கூறியுள்ளார்.

# பெப்ரவரி 04....

(08ஆம் பக்கத் தொடர்ச்சி)

செலுத்தப்படுகின்றன. அநேகமாக முதல் தடவையாக சுதந்திரத்தின் பெயரில் மேற்கொள்ளப்படவிருக்கும் அநாவசிய செலவுகளுக்கெதிராக இந்தத் தடவை குரல்கள் எழுப்பப்படுவதனை என்னால் அவதானிக்க முடிகின்றது. தற்போது மக்கள் எதிர்கொண்டு வரும் சிரமங்கள் மற்றும் பொருளாதார முடக்கம் என்பவற்றின் அடிப்படையில் பிரதானமாக இந்த எதிர்ப்புக் குரல்கள் எழுப்பப்பட்டு வருகின்றன என்பதனை என்னால் புரிந்து கொள்ள முடிகின்றது. அதனை எதிர்ப்பதற்கான ஒரே ஒரு காரணமாக அது மட்டும் இருந்து வர வேண்டுமா? சுதந்திரம் என்பதன் பொருள் என்ன என்ற கேள்வியை நாங்கள் கேட்கக் கூடாதா? இறுதியாக, பெப்ரவரி 04 ஆம் திகதி சுதந்திரத்தை கொண்டாடுவதற்கு எம்மை நிர்ப்பந்திக்கும் ஒரு காரணம் இருந்து வருகின்றதா?

பெருந்தொகையான நாடுகள் ஒரு சில வரலாற்றுக் காரணங்களின் அடிப்படையில் ஒரு தேசிய தினத்தை அங்கீகரித்திருந்த போதிலும், அத்தினங்கள் அனைத்தும் சுதந்திர தினம் என அழைக்கப்படுவதில்லை. எம்மைப் போன்ற காலனித்துவ வரலாற்றைக் கொண்டிருக்கும் நாடுகளில் நிலவி வரும் ஒரு கருதுகோளாகவே சுதந்திர தினம் என்ற கருதுகோள் இருந்து வருகின்றது. இராணுவ நடவடிக்கைகளுக்கு ஊடாக அல்லது ஏனைய கடுமையான பிரயத்தனங்களுக்கு ஊடாக காலனித்துவ ஆட்சியாளர்களை விரட்டியடித்து விட்டு, சுதந்திரத்தைப் பெற்றுக் கொண்டிருக்கும் நாடுகளைப் பொறுத்த வரையில், தமது நாடு சுதந்திரமடைந்த நிகழ்வைக் கொண்டாடுவதற்கான வலுவான காரணங்கள் இருந்து வருகின்றன என்பதே எனது அபிப்பிராயமாகும். ஐக்கிய அமெரிக்கா, அல்ஜீரியா மற்றும் தென் அமெரிக்காவில் இருக்கும் பல நாடுகள் இதற்கான மிகச் சிறந்த உதாரணங்களாகும். ஏனைய பல முன்னைய காலனித்துவ நாடுகளின் நிலைமை வேறு. அதாவது, அந்நாடுகளை ஆட்சி செய்து வந்த காலனித்துவ ஆட்சியாளர்கள் அவற்றைப் பராமரித்து வருவதில் பிரச்சினைகளை எதிர்கொண்ட பொழுது (அல்லது கொள்ளையடிப்பதற்கு வேறு எதுவும் எஞ்சியிராத நிலையில்) அந்நாடுகளுக்கு சுதந்திரத்தை வழங்கினார்கள். ஒரு பாரிய சாம்ராஜ்ஜியத்தை வைத்திருப்பதில் பொருளாதார ஆதாயங்கள் எதுவும் கிடைக்கப் போவதில்லை என்ற விடயத்தை இரண்டாவது உலகப் போரின் பின்னர் பிரிட்டிஷ் பேரரசு உணர்ந்து கொண்ட பொழுது, அது அறுபது காலனித்துவ நாடுகளிலிருந்து வெளியேறுவதென தீர்மானித்தது. எமது நாடு அந்தப் பட்டியலில் ஐந்தாவது இடத்தில் இருந்தது. 1948 இல் இலங்கைக்கு சுதந்திரம் வழங்கப்பட்ட பொழுது அந்த ஏற்பாடும் கூட டொமினியன் அந்தஸ்து நிபந்தனையின் அடிப்படையிலேயே மேற்கொள்ளப்பட்டது. அதாவது, அரச தலைவர் தொடர்ந்தும் பிரிட்டிஷ் மகாராணியாக இருந்து வர வேண்டும் என்ற நிபந்தனையுடனேயே எமக்கு சுதந்திரம் வழங்கப்பட்டது. இலங்கை 1972 மே மாதம் 22ஆம் திகதி ஒரு குடியரசாக பிரகடனம் செய்யப்பட்ட சந்தர்ப்பத்திலேயே இந்நிலைமை மாற்றமடைந்தது. பெப்ரவரி 04ஆம் திகதி நாங்கள் கொண்டாடும் நிகழ்வு பிரிட்டிஷ் ஆட்சியாளர்கள் தாமாகவே முன்வந்து இலங்கையிலிருந்து வெளியேறிச் சென்ற ஒரு நிகழ்வாகும். நாங்கள் உண்மையில் எந்தவொரு சுதந்திரத்தையும் போராடிப் பெற்றுக் கொண்டிருக்கவில்லை. அர்த்தபூர்வமான ஒரு தேசிய தினம் எமக்குத் தேவையாக இருந்து வருவதாக நாம் கருதினால் மே 22ஆம் திகதி அதற்கு பொருத்தமானதாக இருந்து வரும்.

# தமிழ் இளையோரின் கருத்துகளையும் ஜனாதிபதி படித்து அறிய வேண்டும்!

## சித்தார்த்தன் எம்.பி.



கொழும்பு, பெப். 11

ரணில் விக்கிரமசிங்க சண்டே டைம்ஸை மட்டும் படித்து விட்டு கொள்கை விளக்க உரையாற்றக்கூடாது. தமிழ் மொழியில் வரும் பத்திரிகைகளை யும் படிக்க வேண்டும். தமிழ் இளைஞர், யுவதிகளின் கருத்துக்கள் அந்த பத்திரி கைகளில் வெளியாகும். அவற்றையும் அறிந்து கொள்ள வேண்டும் என்று தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் த. சித்தார்த்தன் தெரிவித்துள்ளார்.

நேற்று பாராளுமன்றத்தில் அவர் உரையாற்றியபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

கொள்கை பிரகடன உரையிலே ஜனாதிபதி பல விடயங்களை சுட்டிக் காட்டினார். இந்த நாடு வங்குரோத்து நிலையை அடைந்தது. இந்த நாட்டை மீண்டும் கட்டியெழுப்புவதற்கு தான் எடுக்கின்ற முயற்சிகள். அது மாத்திர மல்ல தமிழ் மக்களுடைய அரசியல் பிரச் னைக்கான தீர்வு சம்பந்தமாக வும் பல விடயங்களை எடுத்துக் கூறியிருந் தார்.

அத்துடன் அவர் ஒரு விட யத்தைக் கூறினார். பொது நலவாய நாடுகளின் செயலாளர் நாயகம் சில இளைஞர்களை சந்தித்து அவர்களுடன் உரையாடியாடினார் என்றும் இளைஞர்கள் அவருக்குக் கூறிய காரணம், நீண்டகாலமாக இடம் பெற்றுவந்த விடயங்கள் காரணமாக நாட்டின் எதிர் காலம் சம்பந்தமாக தாங்கள் நம்பிக்கை இழந்திழருப்ப தாகவும் கூறியிருந்தனர் என்று கூறி னார்.

அது மாத்திரமல்ல சண்டே ரைம்ஸ் பத்திரிகையிலே சில இளைஞர், யுவதிகள் அவர் களுடைய கருத்துக்களையும் வாசித்து அந்த இளைஞர் - யுவதிகள் தாங்கள் இந்த நாட்டை விட்டு செல்லா மல் இருப்பதற்கான காரணங்களை யும் அதாவது எப்படியும் இந்த நாட்டை மீண்டும் கட்டி யெழுப்ப வேண்டும் என்ற காரணங்களை கூறியிருப்பதை யும் கூறினார். அதைப் பார்த்து மகிழ்வுறுவ தாகவும் கூறினார்.

ஆனால், ஜனாதிபதி அவர் கள் சண்டே ரைம்ஸ்ஸை மாத்திரமல்ல அல்லது இங்கு இருக்கக்கூடிய ஆங்கில - சிங்கள் பத்திரிகைகளை மாத்திரமல்ல தமிழிலே வரக்கூடிய கருத்துகளையும் அவர் தன்னுடைய அதிகாரிகள் மூலம் கேட்டு, அறிந்துகொள்ள வேண்டியது அவசியம். ஏனென்றால், தமிழ் பத்திரி கைகளிலே வருகின்ற கருத்துக் கள் வடக்கு, கிழக்கு இளை ஞர்களின் கருத்து களாகும். அவர்களுடைய ஆதங்கங்க ளாகும். அவர்கள் ஏன் நாட்டை விட்டு ஓடுவதற்கு முயற்சிக் கிறார்கள் என்ற காரணங்களை மிகத் தெளிவாக தொடர்ந்து எழுதிக் கொண்டிருகின் றார்கள். இந்த நாட்டிலே இருக்கக்கூடிய இனப்பிரச்னை தமிழ் மக்கள் இரண்டாந் தரப் பிரஜைகளாக அந்த இளைஞர்க ளுக்கு எதிர்காலமற்று இந்த நாடு பொதுவாகவே பொரு ளாதாரப் பிரச் னையில் மாட் டுப்பட்டு அதிலே இந்த நாடு முழுக்க பிரச்னையில் இருந்தாலும், அதிலே வடக்கு - கிழக்கு - தெற்கு - மேற்கு என்று கிடையாது. அனை வருமே இந்தப் பொருளாதாரப் பிரச்னையிலே மிகப் பெரியள விலே பாதிக்கப்பட்டிருக்கின் றார்கள்.

தமிழ் மக்களைப் பொறுத்த மட்டில் தமிழ் இளைஞர், யுவதிகளுக்கு ஒரு வருங்காலம் இல்லாத தன்மையைத்தான் அவர்கள் பார்க்கின்றார்கள். அவர்க ளைப் பொறுத்தமட் டில் தங்களுடைய எதிர்காலம் இங்கு இல்லை. இரண்டாந் தரப் பிரஜைகளாக, இந்த நாட்டுப் பிரஜைகளாக கருதப் படுவதில்லை என்றே அவர்கள் கருதுகிறார்கள். அத னால்தான் அவர்கள் ஓடுவதற்கு தயாராக இருக்கின்றார்கள். இதை நிவர்த்தி செய்யவேண்டியது ஒரு கட்டாயமான தேவையா கும்.

எழுபது வருடங்களாக இந்த நாட் டிலே இருக்கக்கூடிய தமிழ் மக்கள் மிக வும் அரசியல் ரீதியாக மொழி ரீதியாக பாதிக்கப்பட்டு பின்னடை வைக் கண்டு கொண்டு இருக்கி றார்கள். அதற்கு நியாயமான தீர்வு ஒன்றைக் காணவேண் டியது கட்டாயமாகும்.

இதற்கு ஒரு தீர்வாக 13ஆவது திருத் தத்தை அவர் நேரடியாக 13ஆவது திருத்தம் என்று சொல்லாவிட்டாலும் அதற்கு முந்திய பல இடங்க ளிலே 13ஆவது திருத்தத்தைப் பற்றி மிகத் தெளிவாகக் கூறியிருக்கின்றார். சில வேளை களிலே 13ஆவது திருத்தத்தை முழுமையாக அமுல்படுத்துவ தாகக் கூறியிருக்கின்றார்.

பொலிஸ், காணி அதிகாரங் கள் உட்பட எல்லா விடயங்க ளும் அதிலே வரக்கூடிய அனைத்தையும் அமுல்படுத் துவதாகவும் கூறியிருக்கின்றார். ஆனால், கொள்கை பிரகடன உரையில் பொலிஸ் அதிகாரம் இல்லை என்பதை மிகத் தெளி வாகக் கூறியிருக்கின்றார். அது மாத்திரமல்ல ஒற்றையாட்சிக்கு கீழ்தான் தீர்வு என்பதையும் கூறியிருக்கின்றார்.

தமிழ் மக்களைப் பொறுத்த மட்டில் கடந்த எழுபது வருடங்களாக ஒரு சமஷ்டி ஆட்சிதான் எங்களுடைய பிரச்னைக்கு ஒரு நியாயமான தீர்வு.

தென்னிலங்கையிலே இருக்கின்ற அரசியல்வாதிகள் நன்றாக உணரவேண் டும். இந்த பொருளாதாரப் பின்னடை வுக்கு கடந்த காலத்திலே நடந்த இந்த யுத்தம் ஒரு மிக முக்கிய காரணம் என்பதை இவர்கள் மறந்துவிடுகிறார்கள். இந்த யுத்தத்தின் காரணம் என்ன என்ப தையும் இவர்கள் மறந்து விடுகிறார்கள் - என்றார்.

(ஐ)

கல்வி tv CHANNEL-1

**11.02.2023**
**சனிக்கிழமை**

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 05.15 | தரம்-06 | தமிழ் |
| 06.00 | தரம்-07 | விஞ்ஞானம் |
| 06.45 | தரம்-08 | கணிதம் |
| 07.30 | தரம்-09 | தமிழ் |
| 08.15 | தரம்-10 | வரலாறு |
| 09.00 | மாணவர்களுக்கானது | ஆலோசனை |
| 09.15 | க.பொ.த.உயர்தரம் | வரலாறு |
| 10.15 | க.பொ.த.உயர்தரம் | தகவல் தொடர்பாடலும் தொழில்நுட்பமும் |
| 11.15 | க.பொ.த.உயர்தரம் | விவசாய விஞ்ஞானம் |
| 12.15 | General knowledge | General knowledge |
| 12.30 | 06 TO சாதாரணதரம் | English |
| 01.15 | க.பொ.த. சா.தரம் | மனைப்பொருளியல் |
| 02.00 | க.பொ.த. சா.தரம் | வர்த்தகம் |
| 02.45 | க.பொ.த. சா.தரம் | கணிதம் |
| 03.30 | க.பொ.த சா.தரம் | சித்திரம் |
| 04.15 | க.பொ.த. சா.தரம் | புவியியல் |
| 05.00 | A/Lவினாத்தாள் | Live Telecast கலைப்பிரிவு |
| 06.00 | தரம்-05 | புலமைப்பரிசில் |
| 07.00 | A/Lவினாத்தாள் | மறுஒளிபரப்பு |
| 08.00 | தரம்-05 | புலமைப்பரிசில் மறு ஒளிபரப்பு |
| 09.00 | க.பொ.த.உயர்தரம் | வரலாறு |
| 10.00 | க.பொ.த.உயர்தரம் | தகவல் தொடர்பாடலும் தொழில்நுட்பமும் |
| 11.00 | க.பொ.த.உயர்தரம் | விவசாய விஞ்ஞானம் |
| 12.00 | 06 TO Learning English | English |
| 12.45 | க.பொ.தா சா.தரம் | மனைப்பொருளியல் |
| 01.30 | க.பொ.தா சா.தரம் | வர்த்தகம் |
| 02.15 | க.பொ.தா சா.தரம் | கணிதம் |
| 03.00 | க.பொ.தா சா.தரம் | சித்திரம் |
| 03.45 | க.பொ.தா சா.தரம் | புவியியல் |
| 04.30 | தரம்-10 | வரலாறு |

கல்வி tv CHANNEL - 2

**11.02.2023**
**சனிக்கிழமை**

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 06.00 | பஞ்சபுராணம் | பஞ்சபுராணம் |
| 06.15 | நற்கருணை | நற்கருணை |
| 06.30 | திருக்குறள் பொருள் | நாள் ஒரு திருக்குறள் |
| 06.45 | PLAY GROUP | கதை |
| 07.30 | முன்பள்ளி | பாட்டு |
| 08.15 | தரம்-01 | அழகியல் |
| 09.00 | தரம்-02 | English |
| 09.45 | தரம்-03 | அழகியல் |
| 10.30 | தரம்-03 | கணிதம் |
| 11.15 | தரம்-04 | English |
| 12.30 | தரம்-04 | கணிதம் |
| 01.15 | தரம்-05 | Singalam |
| 02.00 | தரம்-05 | கணிதம் |
| 02.45 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 03.30 | PLAY GROUP | கதை |
| 04.15 | முன்பள்ளி | பாட்டு |
| 05.00 | தரம்-01 | English Cartoom |
| 05.15 | தரம்-02 | English |
| 06.00 | தரம்-03 | அழகியல் |
| 06.45 | தரம்-03 | கணிதம் |
| 07.30 | தரம்-04 | English |
| 08.15 | தரம்-04 | கணிதம் |
| 09.00 | தரம்-05 | Singalam |
| 09.45 | தரம்-05 | கணிதம் |
| 10.30 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 11.15 | தரம்-03 | அழகியல் |
| 12.30 | தரம்-03 | கணிதம் |
| 01.15 | தரம்-04 | English |
| 02.00 | தரம்-04 | கணிதம் |
| 02.45 | தரம்-05 | Singalam |
| 03.30 | தரம்-05 | கணிதம் |
| 04.15 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 05.00 | English | CARTOON |
| 05.30 | English | பாட்டு |

# வளர்ப்புத் தந்தையினால் தாக்கப்பட்ட சிறுவன் பலி!

## நாவற்குடா கிழக்கில் துயரம்

மட்டக்களப்பு, பெப். 11

காத்தான்குடி பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட நாவற்குடா கிழக்கு பிர்தெளஸ் நகரைச் சேர்ந்த 11 வயதான சிறுவனை, வளர்ப்புத் தந்தை கடுமையாக தாக்கியதில் படுகாயங்களுக்கு உள்ளான சிறுவன் மட்டக்களப்பு போதான வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் மரணமடைந்துள்ளான்.

சிறுவனின் வளர்ப்புத் தந்தை காத்தான்குடி பொலிஸாரினால் கைது செய்யப்பட்டார் என காத்தான்குடி பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த சிறுவனின் தாய் தனது கணவரை விவாகரத்து செய்த பின்னர் மாத்தளையைச் சேர்ந்த ஒருவரை திருமணம் செய்திருந்தார். இவர் திருமணம் செய்து ஒரு வருடமாகின்றது.

இந்த தாய்க்கு முதல் திருமணத்தில் மூன்று பிள்ளைகள் உள்ளனர். தனது புதிய கணவரிடம் தனது மூன்று பிள்ளைகளில் 11 வயதுடைய ஒரு மகனை கொடுத்துவிட்டு வெளிநாடு சென் றுள்ளார்.

ஏனைய இரண்டு பிள்கைளில் ஒரு பெண் பிள்ளை விடுதியில் அனுமதிக்கப்பட்டுள்ளதுடன் மற்றுமொரு மகனை முன்னாள் கணவரும் அவரது குடும்பமும் பொறுப்பேற்று வளர்த்து வருகின்றனர்.

இந்த நிலையில் புதிய கணவர் வளர்ப்பு மகனை கர்பலாவிலுள்ள வாடகை வீடொன்றில் வைத்து மிக கடுமையாக தாக்கியுள்ளார்.

படுகாயங்களுக்குள்ளான சிறுவன் மயக்கமடைந்த நிலையில் கடந்த திங்கட்கிழமை மாலை காத்தான்குடி ஆதார வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டான்.

சிறுவன் விபத்தில் விழுந்ததாக கூறி வைத்தியசாலையில் அனுமதித்ததுடன் போலியான முகவரியொன்றையும் கொடுத்துள்ளார்.

சிறுவன் மேலதிக சிகிச்சைக்காக காத்தான்குடி ஆதார வைத்தியசாலையிலிருந்து மட்டக்களப்பு போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டு அங்கு அதி தீவிர சிகிச்சை பிரிவில் அனுமதிக்கப்பட்டார்.

சிறுவனின் உடம்பில் தாக்கப்பட்ட பலத்த காயங்கள் காணப்பட்டதையடுத்து சந்தேகமுற்ற வைத்தியசாலை வைத்தியர் சிறுவர் பிரிவு உத்தியோகத்தர்களுக்கு அறிவித்ததையடுத்து அங்கு விரைந்த சிறுவர் பிரிவு அதிகாரிகள் சிறுவனின் தந்தை மற்றும் குடும்பத்தினருக்கு தெரியப்படுத்தியதுடன் வைத்தியசாலை பொலிஸாருக்கும் இந்த விடயம் தெரிய வந்தது.

இதையடுத்து காத்தான்குடி பொலிஸ் நிலையத்தில் சிறுவனின் தந்தையினால் செய்யப்பட்ட முறைப்பாட்டை அடுத்து வளர்ப்பு தந்தை கைது செய்யப்பட்டார்.

சிறுவனை தாக்கியதை வளர்ப்பு தந்தை ஒப்புக் கொண்டார் என பொலிஸார் தெரிவித்தனர்.

சந்தேக நபரான குறித்த வளர்ப்பு தந்தையை மட்டக்களப்பு நீதிவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் காத்தான்குடி பொலிஸார் குறிப்பிட்டனர்.

(அ)

# மாஞ்சோலை கிராமத்தில் தாய்சேய் நிலைய கட்டடம்



மட்டக்களப்பு, பெப். 11

மட்டக்களப்பு- ஓட்டமாவடி சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் மாஞ்சோலை கிராமத்தில் சிகிச்சை நிலைய கட்டட திறப்பு விழா நேற்று முன்தினம் வியாழக்கிழமை இடம் பெற்றது.

ஓட்டமாவடி சுகாதார வைத்திய அதிகாரி எம்.எச்.எம்.தாரிக் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் பிரதம அதிதியாக கிழக்கு மாகாண சுகாதார அமைச்சின் செயலாளர் திருமதி ஜே.ஜே. முரளீதரன் கலந்துகொண்டதுடன் அதிதிகளாக கிழக்கு மாகாண சுகாதார அமைச்சின் திட்டப் பணிப்பாளர் ஆர்.இரா நெடுஞ்செழியன், மட்டக்களப்பு மாவட்ட பிரதி பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் டாக்டர் ஆர்.நவலோஜிதன், ஓட்டமாவடி பிரதேச செயலாளர் வீ.தவராஜா, ஐ.எஸ்.ஆர்.சி. சிறிலங்கா அமைப்பின் திட்ட பணிப்பாளர் அஷ்ஷெய்க் ஏ.எல்.ஜூனைட் நளீமி உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

குவைத் நாட்டின் பைதல் சக்காத் நிறுவனத்தின் பத்து மில்லியன் நிதியளிப்பில் ஐ.எஸ்.ஆர்.சி .சிறிலங்கா அமைப்பின் அனுசரனையில் சிகிச்சை நிலையம், சிறுவர் பூங்கா, சிகிச்சை நிலையத்திற்கான தளபாடங்கள், நிலையத்திற்கான உபகரணங்கள் என்பன வழங்கப்பட்டுள்ளதாக ஐ.எஸ்.ஆர்.சி.சிறிலங்கா அமைப்பின் திட்டப் பணிப்பாளர் அஷ்ஷெய்க் ஏ.எல்.ஜூனைட் நளீமி தெரிவித்தார். (அ)



# 3 செளபாக்கியா வீடுகள் ஏறாவூரில் திறந்துவைப்பு

மட்டக்களப்பு, பெப். 11

செளபாக்கியா திட்டத்தின் கீழ் ஏறாவூர் நகர் பிரதேச செயலகத்திற்குட்பட்ட மீராக்கேணி கிராமத்தில் 03 சமுர்த்தி பயனாளிகளுக்கான வீடுகள் அமைக்கப்பட்டு உரியவர்களிடம் கையளிக்கப்பட்டன.

சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களத்தின் ஊடாக சமுர்த்தி பயனுகரிகளுக்கு வருடாந்தம் வீடுகள் அமைத்துக் கொடுக்கப்படுகின்றன.

இதற்கமைவாக சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களத்தின் ஊடாக சமுர்த்தி செளபாக்கியா பத்து லட்சம் ரூபாய் பெறுமதியான வீடுகள் அமைத்துக் கொள்வதற்காக சமுர்த்தி அபிவிருத்தித் திணைக்களம் 6 லட்சத்து 50ஆயிரம் ரூபாவை நன்கொடையாக வழங்க மீதித் தொகையை சமுர்த்திப் பயனாளி இடுவதன் மூலம் இவ்வீட்டை அமைத்துக் கொள்ள முடியும்.

ஏறாவூர் நகர் பிரதேச செயலகத்திற்குட்பட்ட மீராக்கேணி கிராமத்தில் 03 சமுர்த்தி பயனாளிகளுக்கான வீடுகள் கையளிக்கப்பட்டன.

இந்த நிகழ்வு ஏறாவூர் நகர் பிரதேச செயலாளர் நிகாரா மஃவூத் தலைமையில் நேற்று முன்தினம் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் பிரதம அதிதியாக கலந்து கொண்ட மட்டக்களப்பு மாவட்ட சமுர்த்திப் பணிப்பாளர் எஸ்.புவனேந்திரன் பயனாளிகளுக்கான வீடுகளைக் கையளித்தார்.

இந்நிகழ்வில் மட்டக்களப்பு மாவட்ட சமுர்த்தி கணக்காளர் எம்.எஸ்.பஸீர், ஏறாவூர் நகர் உதவிப்பிரதேச செயலாளர் அகமட் அப்ஹார், சமுர்த்தி தலைமையக முகாமையாளர் கே. கணே சமூர்த்தி, சமுர்த்தி முகாமைத்துவப் பணிப்பாளர் எம். ருமைஸ், சமுர்த்தி வங்கி முகாமையாளர்கள், சமுர்த்தி சமூக அபிவிருத்தி உத்தியேகத்தர், சமுர்த்தி உத்தியோகத்தர்கள் மற்றும் சமுர்த்தி சமுதாய அடிப்படை அமைப்புக்களின் அங்கத்தவர்கள் என பலரும் கலந்து கொண்டனர். (அ)

# பல்கலை. மாணவன் உட்பட இருவர் ரூ.5,000 போலி தாள்களுடன் கைது!

மட்டக்களப்பு, பெப். 11

அக்கரைப்பற்றில் அப்பிள் கடை ஒன்றில் ஐயாயிரம் ரூபாய் போலி நாணையத்தாளை வழங்கி அப்பில் வாங்க முயற்சித்த அட்டாளைச்சேனையைச் பிரதேசத்தைச் சேர்ந்த பல்கலைக் கழக மாணவன் ஒருவர் உட்பட இருவர் நேற்று முன்தினம் வியாழக்கிழமை கைது செய்யப்பட்டதுடன் ஐயாயிரம் ரூபா போலி நானையத்தாள்கள் மூன்றை மீட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

பல்கலைக்கழகம் ஒன்றில் கல்வி கற்றுவரும் அட்டாளைச் சேனை பிரதேசத்தைச் சேர்ந்த 24 வயதுடைய மாணவன், அவரது நண்பனுடன் சம்பவதினமான நேற்று முன்தினம் பகல் அக்கரைப்பற்று கல்முனை வீதியிலுள்ள ஜூம்மா பள்ளிவாசலுக்கு அருகாமையிலுள்ள அப்பிள் கடைக்கு சென்று அப்பிளை வாங்கிவிட்டு 5 ஆயிரம் ரூபாய் தாள் ஒன்றை கொடுத்துள்ளார்.

கடை உரிமையாளர் இது போலியான தாள் என்பதையறிந்து உடனடியாக பல்கலைக் கழக மாணவனை மடக்கிப்பிடித்து பொலிஸாரிடம் ஒப்படைத்தார். அவருடன் வந்த நண்பன் அங்கிருந்து தப்பியோடிய நிலையில் அவரை பொலிஸார் கைது செய்தனர் இதில், கைது செய்யப்பட்ட பல்கலைக் கழக மாணவனிடம் இருந்து மேலும் இரு 5 ஆயிரம் ரூபாய் போலித்தாள்கள் மீட்கப்பட்டன.

விசாரணையின் பின்னர் இவர்களை நீதிமன்றில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

(அ)

# முன்பள்ளி மாணவர்களுக்கு காலை உணவு வழங்குவது குறித்து அதிகாரிகள் ஆராய்வு





மட்டக்களப்பு, பெப். 11

யுனிசெப் நிறுவனத்தின் நிதி உதவியின் கீழ் முன்பள்ளி மாணவர்களுக்கு காலை உணவு வழங்கல் தொடர்பான கலந்துரையாடல் மட்டக்களப்பு மாவட்ட திட்டமிடல் பணிப்பாளர் திருமதி சசிகலா புண்ணியமூர்த்தி தலைமையில் மாவட்ட செயலக மாநாட்டு மண்டப்பதில் கடந்த 8ஆம் திகதி இடம் பெற்றது.

மட்டக்களப்பு மாவட்டத்தில் 209 முன்பள்ளி பாடசாலைகளின் சிறார்களுக்கு போசாக்கு மட்டத்தை அதிகரிப்பதற்காக யுனிசெப் நிறுவனத்தின் அனுசரணையில் காலை உணவு வழங்கப்பட்டு வருகின்றது.

இதன்போது முன்பள்ளி சிறார்களுக்கு உணவு வழங்கலின் போது எற்படும் சவால்கள் மற்றும் உணவின் தரம் தொடர்பாக கலந்துரையாடப்பட்டது.

இந்த நிகழ்வில் மாவட்ட பிரதி திட்டமிடல் பணிப்பாளர் திருமதி.ஜே கணேஷமூர்த்தி, யுனிசெப் நிறுவனத்தின் கல்வி அதிகாரி சசிகலா, பிரதம வெளிக்கள உத்தியோகத்தர் நிபாள் அலாவுதீன், பிரதேச செயலாளர்கள், உதவி பிரதேச செயலாளர்கள், துறை சார் நிபுணர்கள் , மற்றும் உயரதிகாரிகள் என பலரும் கலந்து கொண்டனர்.

(அ)



## காப்பாற்றிய மீட்பு படையுடன் விளையாடி மகிழ்ந்த சிறுவன்!

அங்காரா, பெப். 11

துருக்கி மற்றும் சிரியாவில் ஏற்பட்ட நிலநடுக்கத்தில் இடிபாடுகளில் சிக்கியவர்களை மீட்கும் பணியின் போது மீட்கப்பட்ட ஒரு சிறுவன் அங்கிருந்த மீட்பு படையினரை பார்த்து சிரித்தும் அடித்தும் விளையாடி மகிழ்ந்தான்.

துருக்கி நாட்டில் கடந்த சில நாட்களுக்கு முன்பு கடுமையான நிலநடுக்கம் ஏற்பட்டது. பலர் தூங்கிக் கொண்டிருந்த போது இந்த நிலநடுக்கம் ஏற்பட்டதால் பலரால் அதிலிருந்து தப்ப முடியவில்லை. துருக்கி மட்டுமில்லாமல் சிரியாவிலும் சக்தி வாய்ந்த நிலநடுக்கம் ஏற்பட்டது.

தினந்தோறும் ஆயிரக்கணக்கானோர் மீட்பு பணிகளில் ஈடுபட்டு வருகிறார்கள். ஆங்காங்கே அழுகுரல்கள், முனகல் சப்தங்கள் கேட்கின்றன.

இந்த நிலையில் இடுபாடுகளில் இருந்து 2 வயதுச் சிறுவன் மீட்கப்பட்டான். அவன் உயிருடன் மீட்கப்பட்டதில் அங்கிருந்த மீட்புப் படையினர் மகிழ்ச்சியாக இருந்தனர். அப்போது அந்த சிறுவன் அழுவான் என நினைத்தனர். ஆனால் லேசான சிரித்த முகத்துடன் இருந்த சிறுவன் நன்றாக சிரித்தவாறும் மீட்புப் படையினரை அடித்தவாறும் விளையாடிக் கொண்டிருந்தான்.

சிறுவனுக்கு முத்தம் கொடுத்தனர். சிரியாவின் அர்மனாஸ் பகுதியில் அந்த சிறுவன் மீட்கப்பட்டான். பேரிடர் குறித்தும் தனது தாய், தந்தையர் உயிருடன் இருக்கிறார்களா என்பது குறித்தும் அறியாத அந்த சிறுவன் சிரித்தது அங்கிருந்த மீட்பு படையினருக்கு உற்சாகத்தை கொடுத்தது.

(அ)

# போர் விமானங்கள், ஆயுதங்களை தாராளமாக எமக்குத் தாருங்கள்

## ஐரோப்பிய தலைவர்களுக்கு உக்ரைன் ஜனாதிபதி அழைப்பு

பிரஸ்ஸல்ஸ், பெப். 11

ரஷ்யாவுக்கு எதிரான போருக்கு போர் விமானங்கள் மற்றும் ஆயுதங்களை வழங்குமாறு உக்ரைன் ஜனாதிபதி வோலோடிமிர் ஸெலென்ஸ்கி, ஐரோப்பிய ஒன்றிய தலைவர்களுக்கு அழைப்பு விடுத்துள்ளார்.

போர் தொடங்கிய பின்னர் தனது இரண்டாவது வெளிநாட்டு பயணத்தில் அவர் இந்த அழைப்பை விடுத்தார்.

'எங்கள் ஒத்துழைப்பின் இயக்கவியலை நாம் மேம்படுத்த வேண்டும், ஆக்கிரமிப்பாளரைக் காட்டிலும் வேகமாக அதைச் செய்யவேண்டும்' என்று உக்ரைன் ஜனாதிபதி கூறினார்.

முன்னதாக பிரஸ்ஸல்ஸில் உள்ள ஐரோப்பிய பாராளுமன்றத்தில் அவருக்கு கைத்தட்டல் வழங்கப்பட்டது.

பல ஐரோப்பிய ஒன்றியத் தலைவர்கள் ஏற்கனவே போர் விமானங்கள் பற்றிய முடிவு ஒரு கூட்டு நடவடிக்கையாக இருக்கும் என்று வலியுறுத்தியுள்ளனர்.

இதனிடையே, மோதலில் நேரடி மற்றும் மறைமுக மேற்கத்திய ஈடுபாட்டுக்கு இடையிலான கோடு மறைந்து வருவதாக ரஷ்யா எச்சரித்தது.

நீண்ட காலத்திற்கு ஜெட் விமானங்களை வழங்குவது



குறித்து இன்னும் எந்த முடிவும் எடுக்கப்படவில்லை. ஆனால் உக்ரைன் விமானிகளுக்கு ஏற்கனவே உள்ள விமானங்களில் பயிற்சி அளிக்கப்படும் என்று பிரித்தானியா கூறியது.

போலந்தின் பிரதமர் மேட்யூஸ் மொராவிக்கி, தனது நாடு நேட்டோவின் முழு அமைப்பிற்குள் மட்டுமே செயற்பட முடியும் என்று கூறினார்.

அதே நேரத்தில் நெதர்லாந்து பிரதமர் மார்க் ரூட்டே இந்த பிரச்னையை மூடிய கதவுகளுக்குப் பின்னால் விவாதிக்க வேண்டும் என்று கூறினார்.

ஜெட் விமானங்களுக்கான உக்ரைனின் கோரிக்கையை விரைவாக பரிசீலிக்க ஐரோப்பிய ஒன்றிய நாடுகளுக்கு ஐரோப்பிய பாராளுமன்றத் தலைவர் ரொபர்ட்டா மெட்சோலா அழைப்பு விடுத்தார்.

(அ)

## ஜனாதிபதியின் விமானத்தில் சென்ற 16 குழந்தைகள்!



அங்காரா, பெப். 11

துருக்கியில் பூகம்பத்தால் உறவினர்களை இழந்து தனிமைப்படுத்தப்பட்ட 16 குழந்தைகள் ஜனாதிபதி ரிசப் தையிப் எர்துவானின் விமானத்தில் தலைநகர் அங்காராவுக்கு பாதுகாப்பாக எடுத்துச் செல்லப்பட்டுள்ளன.

இதில் இரு குழந்தைகள் இடிபாடுகளில் இருந்து மீட்கப்பட்டிருக்கும் நிலையில் இன்னும் அடையாளம் காணப்படவில்லை. மேலும் 14 குழந்தைகள் கஹ்ரமன்ராஸ் மருத்துவமனையில் உறவினர்கள் யாரும் இன்றி இருந்துள்ளன.

இந்தக் குழந்தைகள் குடும்பம் மற்றும் சமூக சேவை அமைச்சின் கீழ் இயங்கும் சிறுவர் பராமரிப்பு அமைப்பிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

துருக்கி ஜனாதிபதியின் விமானம் மருத்துவக் குழுக்களை அழைத்துச் செல்வது, உதவிப் பொருட்களை எடுத்துச் செல்வது போன்ற பூகம்பத்துடன் தொடர்புபட்ட செயற்பாடுகளுக்கு பயன்படுத்தப்பட்டு வருகிறது. (அ)

### துருக்கி, சிரியாவை உலுக்கிய நிலநடுக்கம்:

# உயிரிழப்பு எண்ணிக்கை 21 ஆயிரத்தைக் கடந்தது!

அங்காரா, பெப். 11

கடந்த திங்களன்று தென்மேற்கு துருக்கி, வடக்கு சிரியாவை உலுக்கிய பேரழிவுகரமான நிலநடுக்கங்கள் மற்றும் தொடர் அதிர்வுகளில் சிக்கி உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 21,000 ஐ கடந்துள்ளது. இந்த எண்ணிக்கை மேலும் கணிசமாக அதிகரிக்கும்.

நிலநடுக்கம் ஏற்பட்டு கிட்டத்தட்ட நான்கு நாட்களுக்குப் பிறகும், இடிந்து விழுந்த கட்டடங்களுக்கு அடியில் இருந்து ஏராளமான சடலங்கள் மீட்கப்பட்டுக் கொண்டேயிருக்கிறது.

இதேவேளை, உயிருடனும் பலர் மீட்கப்படுகின்றார்கள்.

தென்மேற்கு துருக்கியில் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 17,674 ஆக உயர்ந்துள்ளது. காயமடைந்தவர்களின் எண்ணிக்கை 72,879 ஆக உயர்ந்துள்ளது என்று துணை ஜனாதிபதி புவாட் ஒக்டே கூறினார்.

அண்டை நாடான சிரியாவில் குறைந்தது 3,377 பேர் உயிரிழந்தனர்.

இருநாடுகளிலும் உயிரிழந்தவர்களின் மொத்த எண்ணிக்கையை 21,051 ஆக உயர்ந்துள்ளது. "நூற்றாண்டின் பேரழிவு" என்று துருக்கியின் ஜனாதிபதி ரெசெப் தையிப் எர்டோகன் விபரித்தார்.

அத்துடன், அழிக்கப்பட்ட வீடுகளை ஓராண்டுக்குள் மீண்டும் கட்டுவதாக வாக்குறுதி அளித்துள்ளார்.

இதேவேளை, துருக்கிக்கு 1.78 பில்லியன் டொலர் நிவாரணம் மற்றும் மீட்பு நிதி உதவியை வழங்குவதாக உலக வங்கி கூறியுள்ளது.

780 மில்லியன் டொலர்கள் உடனடியாக கிடைக்கும் என்று உலக வங்கி ஒரு அறிக்கையில் கூறியது. ஏற்கனவே துருக்கிக்கு உள்ள இரண்டு உலக வங்கி கடன் திட்டங்களிலிருந்து நிதி திருப்பி விடப்படும்.

துருக்கியின் மீட்பு மற்றும் புனரமைப்புக்கான மற்றொரு 1 பில்லியன் டொலர் உதவியும் தயாராகி வருகிறது, ஆனால் ஏற்பாடு செய்ய அதிக நேரம் எடுக்கும் என்று உலக வங்கியின் செய்தித் தொடர்பாளர் தெரிவித்தார்.

சிரியா, துருக்கிக்கு 85 மில்லியன் டொலர் மனிதாபிமான உதவியை அமெரிக்கா வழங்கவுள்ளது. (அ)

## இந்தோனேசியாவிலும் வியாழனன்று நில அதிர்வு

### இடிபாடுகளில் சிக்கி நால்வர் உயிரிழப்பு



ஜகார்த்தார், பெப். 11

இந்தோனேசியாவின் கிழக்கு பிராந்தியமான பப்புவ வில் நேற்று முன் தினம் இரவு சக்தி வாய்ந்த நிலநடுக்கம் ஏற்பட்டது.

ஜெயபுரா நகருக்கு தென் மேற்கே கடலுக்கடியில் 22 கிலோ மீற்றர் ஆழத்தில் மையம் கொண்டிருந்த இந்த நிலநடுக் கம் ரிச்டர் அளவில் 5.2 ஆக பதிவாகியிருந்தது.

இந்த நிலநடுக்கம் காரணமாக, கடற்கரையை ஒட்டி இருந்த ஹோட்டல் ஒன்று இடிந்து கடலில் விழுந்ததில் இடிபாடுகளில் சிக்கி 4 பேர் உயிரிழந்தனர். சிலர் காயமடைந்தனர்.

மேலும் சில கட்டடங்களும் சேதமடைந்துள்ள நிலையில், மீட்பு பணிகள் நடைபெற்று வருகின்றன. (அ)

# ஆஸிக்கு எதிரான டெஸ்ட் போட்டி; 144 ஓட்டங்கள் இந்தியா முன்னிலை!



நாக்பூர், பெப். 11

அவுஸ்திரேலிய அணிக்கு எதிரான முதல் டெஸ்ட் போட்டியின் முதல் இனிங்ஸில் இந்திய அணி 144 ஓட்டங்கள் முன்னிலை பெற்றுள்ளது.

இந்தியா சென்றுள்ள அவுஸ்திரேலிய அணி போர்டர் - கவாஸ்கர் கிண்ணத்துக்காக 4 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் விளையாடி வருகின்றது.

நேற்று முன்தினம் தொடங்கிய போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய அவுஸ்திரேலிய அணி முதல் இனிங்ஸில் 177 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்களையும் இழந்தது.

முதல் நாள் ஆட்டம் முடிவடைந்தபோது இந்திய அணி ஒரு விக்கெட் இழப்புக்கு 77 ஓட்டங்களை எடுத்திருந்தது.

நேற்று இரண்டாம் நாள் ஆட்டத்தை அஸ்வின் மற்றும் ரோஹித் சர்மா தொடங்கினர். இருவரும் 42 ஓட்டங்களுக்கு இணைப்பாட்டம் அமைத்தனர்.

அஸ்வின் 62 பந்துகளை எதிர்கொண்டு 23 ஓட்டங்கள் எடுத்து ஆட்டமிழந்தார். பின்னர் வந்த புஜாரா, கோலி மற்றும் சூர்யகுமார் யாதவ் ஆகியோர் விரைவாக தங்கள் விக்கெட்டை இழந்து வெளியேறினர். மறுமுனையில் ரோஹித் நிலைத்து நின்று ஆடினார்.

7ஆவது துடுப்பாட்ட வீரராகக் களம் கண்ட ஜடேஜாவுடன் கூட்டணி அமைத்தார் ரோஹித். இருவரும் 61 ஓட்டங்களை இணைப்பாட்டமாகப் பெற்றனர். டெஸ்ட் கிரிக்கெட்டில் தனது 9ஆவது சதத்தை பதிவு செய்தார் ரோஹித். 212 பந்துகளில் 120 ஓட்டங்கள் எடுத்து அவர் ஆட்டமிழந்தார்.

ரவீந்திர ஜடேஜா சிறப்பான அக்சர் பட்டேலுடன் இணைந்து சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தியிருந்தார்.

நேற்றைய தினம் ஆட்டம் நிறைவடைந்தபோது 7 விக்கெட்கள் இழப்புக்கு 321 ஓட்டங்களை இந்திய அணி எடுத்திருந்தது. ரவீந்திர ஜடேஜா 66 ஓட்டங்கள், அக்சர் பட்டேல் 52 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்காமல் இருந்தனர்.

அவுஸ்திரேலியாவின் பந்துவீச்சில் ரொட் முர்பி 5 விக்கெட்கள், பட் கம்மின்ஸ் 1, நதன் லயன் 1 விக்கெட்களை வீழ்த்தினர்.

இன்று போட்டியின் மூன்றாவது நாள் ஆட்டமாகும். (ஐ)



# ஆஸிக்கு எதிராக சதம் ரோஹித் புதிய சாதனை!

நாக்பூர், பெப். 11

அவுஸ்திரேலியா அணிக்கு எதிரான போட்டியில் இந்திய அணியின் தலைவரும் தொடக்க வீரருமான ரோஹித் சர்மா சதம் விளாசி சாதனை படைத்துள்ளார்.

போர்டர் - கவாஸ்கர் கிண்ண டெஸ்ட் தொடர் இந்தியாவில் நடக்கிறது. இதில், முதல் போட்டியில் இரண்டாவது நாளான நேற்று ரோஹித் சர்மா சதம் அடித்தார். அவர், 212 பந்துகளில் 15 பௌண்ட்ரிகள், 2 சிக்ஸர்கள் அடங்கலாக இந்த சதம் அடித்தார்.

இந்த சதத்தின் மூலம் ரோஹித் சர்மா புதிய சாதனை படைத்துள்ளார். அதாவது அணித் தலைவராக டெஸ்ட், ஒரு நாள், இருபது -20 என அனைத்து போட்டிகளிலும் சதம் விளாசிய முதல் இந்திய வீரர் என்ற சாதனையை ரோஹித் சர்மா படைத்திருக்கிறார்.

மேலும், சர்வதேச அளவில் அனைத்து விதமான கிரிக்கெட் போட்டிகளிலும் சதம் விளாசிய நான்காவது அணித்தலைவர் என்ற பெருமையை அவர் படைத்திருக்கிறார்.

மூன்று வடிவ கிரிக்கெட்டிலும் அணித் தலைவர்களாக சதம் அடித்த வீரர்கள் வரிசையில், டில்ஷான் (இலங்கை), பப் டு பிளெசிஸ் (தென்னாபிரிக்கா), பாபர் அஸாம் (பாகிஸ்தான்), ரோஹித் சர்மா (இந்தியா). (ஐ)



# உலகக் கிண்ண வலைபந்து இலங்கை அணியில் தர்ஜினி!

கொழும்பு, பெப். 11

உலகக் கிண்ண வலைபந்தாட்ட தொடருக்கான இலங்கை மகளிர் உத்தேச அணி அறிவிக்கப்பட்டுள்ளது. இதில், முன்னாள் அணித் தலைவியும் நட்சத்திர மற்றும் சர்வதேச அரங்கில் அதிக கோல் இட்ட சாதனை வீராங்கனையுமான தர்ஜினி சிவலிங்கமும் இடம்பெறுகிறார்.

இலங்கை வலைபந்தாட்ட சம்மேளனம் விடுத்த கோரிக்கையை ஏற்று இலங்கை அணியில் இணைய அவுஸ்திரேலியாவில் தற்போது வாழ்ந்துவரும் தர்ஜினி சிவலிங்கம் இணங்கியுள்ளார்.

யாழ்ப்பாணத்தை சேர்ந்தவரான தர்ஜினி சிவலிங்கம் 2018, 2022 ஆகிய இரண்டு ஆசிய கிண்ண வலைபந்தாட்டப் போட்டிகளில் இலங்கை சம்பியனாக விளங்கியவர். இங்கிலாந்தின் லிவர்பூலில் 2019இல் நடைபெற்ற உலகக் கிண்ணப் போட்டியில் இலங்கை சார்பாக தர்ஜினி சிவலிங்கம் 348 கோல்களை போட்டு சாதனை படைத்திருந்தார்.

**அணி விவரம்:**

தர்ஜினி சிவலிங்கம், செமனி அல்விஸ், கயனி திசாநாயக்க, திசலா அல்கம, சத்துராங்கி ஜயசூரிய, கயஞ்சலி அமரவன்ச, துலங்கி வன்னித்திலக்க, ஷானிக்கா பெரேரா, ஹன்சிமா திசாநாயக்க, இமாஷா பெரேரா, ரஷ்மி பெரேரா, ருக்ஷலா ஹப்புஆராச்சி, பாரமி கொடிதுவக்கு, சமுதி விக்ரமரட்ன, மல்மி ஹெட்டி ஆராச்சி, தருஷி நவோத்யா, துலஞ்சலி சுரவீர, காயத்ரி கௌஷல்யா, இஷானி மதுஷிக்கா, பாஷினி யோஷித்தா.

16 நாடுகள் பங்குபற்றும் 16ஆவது உலகக் கிண்ண வலைப்பந்தாட்ட போட்டி தென்னாபிரிக்காவின் கேப்டவுனில் ஜூலை 28ஆம் திகதியிலிருந்து ஓகஸ்ட் 6ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது. இதில், இலங்கை சி குழுவில் இடம்பெற்றுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

## எஸ். ஏ. இருபது - 20 தொடர்

# பிரிட்டோரியா, பெர்ல் இறுதியாட்டத்துக்கு தகுதி!

கேப்டவுன், பெப். 11

தென்னாபிரிக்காவில் எஸ். ஏ. 20 கிரிக்கெட் தொடர் நடைபெற்று வருகிறது. இந்தத் தொடர் தற்போது இறுதிக் கட்டத்தை எட்டியுள்ளது. இந்த தொடரில் நேற்றுமுன்தினம் நடந்த முதல் அரையிறுதியில் பிரிட்டோரியா கப்பிட்டல்ஸ், பெர்ல் றோயல்ஸ் அணிகள் மோதின.

நாணயச் சுழற்சியில் வென்ற பெர்ல் றோயல்ஸ் பந்துவீச்சை தேர்வு செய்தது. இதன்படி, முதலில் ஆடிய பிரிட்டோரியா கப்பிட்டல்ஸ் அணி 20 ஓவரில் 8 விக்கெட்கள் இழப்புக்கு 153 ஓட்டங்கள் எடுத்தது.

அதிகபட்சமாக ரூசோவ் 56 ஓட்டங்கள் குவித்தார். அடுத்து ஆடிய பெர்ல் றோயல்ஸ் அணி 124 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்களையும் இழந்தது.

இதன்மூலம் 29 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வென்ற பிரிட்டோரியா கப்பிட்டல்ஸ் அணி இறுதிப் போட்டிக்குள் நுழைந்தது.

இரண்டாவது அரையிறுதியில், ஜோபர் சுப்பர் கிங்ஸ், சன்ரைசர்ஸ் ஈஸ்டர்ன் கேப் அணிகள் மோதின. நாணயச் சுழற்சியில் வென்ற ஜோபர்க் அணி முதலில் பந்து வீச்சை தெரிவு செய்தது. இதன்படி, முதலில் ஆடிய சன்ரைசர்ஸ் அணி நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவரில் 5 விக்கெட்டுக்கு 213 ஓட்டங்கள் குவித்தது. கப்டன் மார்கிராம் அதிரடியாக ஆடி சதமடித்து ஆட்டமிழந்தார்.

தொடர்ந்து ஆடிய ஜோபர்க் அணி 20 ஓவரில் 6 விக்கெட்டுக்கு 199 ஓட்டங்கள் மட்டுமே எடுத்தது. அந்த அணியின் ஹென்ரிக்ஸ் 96 ஓட்டங்கள் எடுத்தார். இதன்மூலம் 14 ஓட்டங்கள் வித்தியாசத்தில் சன்ரைசர்ஸ் அணி இறுதிப்போட்டிக்கு முன்னேறியது.

இன்று நடைபெறும் இறுதிப்போட்டியில் பிரிட்டோரியா, சன்ரைசர்ஸ் அணிகள் மோதுகின்றன. (ஐ)




# 503 கோல்கள் அடித்து றொனால்டோ சாதனை



ரியாத், பெப். 11

கழகங்களுக்கு இடையிலான போட்டியில் மொத்தமாக 503 கோல்களை அடித்து சாதனை படைத்துள்ளார் கிறிஸ்ரியானோ றொனால்டோ.

சவூதி ப்ரோ லீக் போட்டியில் அல் நாசர் அணிக்காக றொனால்டோ தற்போது விளையாடி வருகிறார். நேற்று முன்தினம் நடந்த போட்டியில் அல் நாசர் - அல் வெஹ்தா அணிகள் மோதின.

இந்த போட்டியில் றொனால்டோ ஆட்டத்தின் 21ஆவது நிமிடத்தில் கோல் அடித்து அசத்தினார். தொடர்ந்து 40, 53ஆவது நிமிடங்களில் கோல் போட்டு ஹட்ரிக் கோல் அடித்து அசத்தினார். தொடர்ந்து 61ஆவது நிமிடத்தில் கோல் அடித்து றொனால்டோ, அல் நாசர் அணியை 4- 0 என்ற கோல் கணக்கில் வெற்றி அடைய வைத்தார். இந்தப் போட்டியில் றொனால்டோ அடித்த முதல் கோல் கழக போட்டிகளில் அவரின் 500ஆவது கோல் ஆகும்.

றொனால்டோ இதுவரை கழக போட்டிகளில் ரியல் மட்ரிட் அணிக்காக 311 கோல்களும், மன்செஸ்டர் யுனைற்றெட் அணிக்காக 103 கோல்களும், ஜூவென்டஸ் அணிக்காக 81 கோல்களுமம, தற்போது அல் நாசர் அணிக்காக 5 கோல்களும் அடித்து , மொத்தமாக 503 கோல்களை அடித்து சாதனை படைத்துள்ளார். (ஐ)

# பிக்குகள் எரித்தது '13'ஐ அல்ல ஒட்டுமொத்த இலங்கையையே!

## கோவிந்தன் கருணாகரம் எம்.பி. சுட்டிக்காட்டு



**கொழும்பு, பெப். 11**

**பௌத்த பிக்குகள் எரித்தது 13ஆவது திருத்தத்தை அல்ல, அவர்கள் ஒட்டுமொத்த நாட்டையே எரிக்கின்றார்கள் என்பதை அனைவரும் உணர்ந்துகொள்ள வேண்டும் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினரும், தமிழ் ஈழ விடுதலை இயக்கத்தின் செயலாளர நாயகமுமான கோவிந்தன் கருணாகரம் ஜனா தெரிவித்தார்.**

நேற்று முன் தினம் பாராளுமன்ற அமர்வில் ஜனாதிபதியின் அக்கிராசன உரை மீதான விவாதத்தில் உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்- இனப்பிரச்னைக்கு ஒரு தீர்வைக் காண வேண்டும் என்ற அடிப்படையில் ஜனாதிபதி உரையாற்றி இருந்தாலும், பொலிஸ் அதிகாரமற்ற அதிகாரப் பரவலாக்கல், ஒற்றையாட்சிக்குள்ளே அதிகாரப் பரவலாக்கல் என்பதை எங்களால் எள்ளளவும் ஏற்றுக்கொள்ள முடியாது.

1987ஆம் ஆண்டு இலங்கை-இந்திய ஒப்பந்தம் எற்பட்டது. இலங்கை-இந்திய ஒப்பந்தம் ஏற்படாவிட்டால் நாங்கள் தனி ஈழம் பெற்றிருப்போம், தனி நாடு மலர்ந்திருக்கும் என்று இன்றும் தமிழர்கள் கூறுகின்றார்கள்.

இலங்கை-இந்திய ஒப்பந்தம் மூலமாக ஏற்பட்ட 13ஆவது திருத்தச் சட்டம் அரசியலமைப்பில் ஒரு அங்கமாக இருக்கும் போது அந்த அரசியலமைப்பை மாறி மாறி ஆட்சி செய்த அரசாங்கங்கள் நிறைவேற்றாமல் இருப்பதென்பது அரசாங்கமே அரசியலமைப்பை மீறுவதாகவே அமையும்.

எனக்கு முன் உரையாற்றிய உதய கம்மன்பில 13ஆவது திருத்தத்தின் பின்னர் இந்த நாட்டை 7 ஜனாதிபதிகள் ஆட்சி செய்திருந்தார்கள். யாருமே பொலிஸ் அதிகாரத்தை அமுலாக்கவில்லை என்று தெரிவித்திருந்தார். இதிலிருந்து நீங்களே அரசியலமைப்பை மீறிக் கொண்டிருக்கின்றீர்கள் என்பதே தெளிவாகின்றது.

முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன உரையாற்றும்போது இந்த நாடு பௌத்த நாடு பௌத்த பிக்குகளை எதிர்த்துக் கொண்டு எதனையும் செய்ய முடியாது, அவர்களைப் பகைத்துக் கொண்டு இந்த நாட்டில் ஒரு தீர்வைத் தர முடியாது என்ற கோணத்திலே உரையாற்றியிருந்தார்.

நான் அவருக்கு ஒன்றை மட்டும் கூறிக்கொள்ள விரும்புகின்றேன் 2015 இல் அவரை ஜனாதிபதியாக்கியது சிறுபான்மை மக்கள். ஆனால் இன்று அந்த மக்களது கருத்தைக்கூட கருத்தில் கொள்ளாமல் அவர் இந்த உரையை ஆற்றியிருப்பதையிட்டு அவர் குறித்தும், அவருக்காக வடக்கு-கிழக்கு தமிழ் மக்களிடம் வாக்குக் கேட்டேன் என்ற அடிப்படையிலும் நான் வெட்கப்படுகின்றேன்.

ஆயுதப் போராட்டம் ஏற்பட்டதன் காரணமாகவே 13 ஆவது திருத்தச் சட்டம் உருவானது 13ஆவது திருத்தம் என்பது தமிழ் மக்களுடைய ஒரு அரசியற் தீர்வல்ல. தமிழ் மக்களின் அரசியற் தீர்வுக்கு இதனை ஒரு ஆரம்பப் புள்ளியாகவே கருதுகின்றோம். எனவே எங்களுக்குத் தேவை மீளப்பெறமுடியாத ஒரு சமஷ்டி என்பதை நாங்கள் மீண்டும் வலியுறுத்துகிறோம். ஏனெனில் 13ஆவது திருத்தத்தின் மூலம் வழங்கப்பட்ட அதிகாரங்களையே மீளப்பெற்ற வரலாறுகளே உள்ளன.

நேற்றைய தினம் பௌத்த பிக்குகள் 13ஆவது திருத்தத்தை எரிக்கின்றார்கள். நீங்கள் எரித்தது 13ஆவது திருத்தத்தை அல்ல, ஒட்டுமொத்த நாட்டையே எரிக்கின்றீர்கள் என்பதை உணர்ந்துகொள்ள வேண்டும். பண்டா-செல்வா ஒப்பந்தம் ஏற்பட்டபோது கொழும்பில் இருந்து கண்டிக்கு யாத்திரை சென்றது எதற்காக? அந்த ஒப்பந்தம் நிறைவேற்றப்பட்டிருக்கும் என்றால் இந்த நாடு அழிவுப் பாதைக்குச் சென்றிருக்காது என்பதை நீங்கள் அனைவரும் உணர்ந்து கொள்ள வேண்டும்- என்றார்.

(அ-6)

# கிழக்கு பட்டதாரிகளுக்கும் உரிய வாய்ப்பு வழங்குங்கள்!

## இம்ரான் மஹ்ரூப் கோரிக்கை

கொழும்பு, பெப். 11

தற்போது விண்ணப்பம் கோரப்பட்டுள்ள பட்டதாரி ஆசிரியர் நியமனத்தில் கிழக்கு மாகாணப் பட்டதாரிகளும் வழிகாட்டல் ஆலோசனை ஆசிரியர் பதவிக்கு விண்ணப்பிக்கும் வாய்ப்பை வழங்குங்கள் என திருகோணமலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் இம்ரான் மஹ்ரூப் கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்தவிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-கிழக்கு மாகாணத்தில் 200க்கும் மேல் வழிகாட்டல் ஆலோசனை ஆசிரியர் பற்றாக்குறை காணப்படுகின்றது எனினும், தற்போது பட்டதாரிகளிடம் இருந்து கோரப்பட்டுள்ள ஆசிரியர் பதவிக்கான விண்ணப்பத்தில் கிழக்கு மாகாண பட்டதாரிகள் வழிகாட்டல் ஆலோசனை ஆசிரியர் பதவியை தெரிவு செய்ய முடியாத நிலை இணையத்தளத்தில் காணப்படுகின்றது.

இதனால் பல பட்டதாரிகள் பாதிக்கப்படுவதோடு கிழக்கு மாகாணத்தில் உள்ள வழிகாட்டல் ஆலோசனை ஆசிரியர் பற்றாக்குறையையும் நிவர்த்திக்க முடியாத நிலை காணப்படுகின்றது.

எனவே, கிழக்கு மாகாணப் பட்டதாரிகளும் வழிகாட்டல் ஆலோசனை ஆசிரியர் பதவிக்கு விண்ணப்பிக்கும் வாய்ப்பை ஏற்படுத்துங்கள்-என்றார்.

(அ)

# தேர்தல் திணைக்களத்தின் அதிகாரிகள் கொழும்புக்கு

கொழும்பு, பெப். 11

மாவட்ட பிரதித் தேர்தல் ஆணையாளர்கள் மற்றும் உதவி தேர்தல் ஆணையாளர்கள் இன்று சனிக்கிழமை தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கு அழைக்கப் பட்டுள்ளனர்.

உள்ளூராட்சி மன்றத் தேர்தல் தொடர்பான விழிப்புணர்வு நிகழ்ச்சிக்காக இந்த அழைப்பு விடுக்கப்பட்டுள்ளதாக தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் நிமல் ஜி.புஞ்சிஹேவா தெரிவித்தார்.

எதிர்வரும் உள்ளூராட்சி சபைத் தேர்தலை நடத்துவதற்கு தேவையான அடிப்படை செயற்பாடுகள் குறித்து இங்கு விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட உள்ளது. (அ)

# 40,000 தபால் மூல வாக்களிப்பு விண்ணப்பங்கள் நிராகரிப்பு

கொழும்பு, பெப். 11

இவ்வருடம் உள்ளூராட்சி மன்றத் தேர்தல் தொடர்பில் பெறப்பட்ட தபால் மூல வாக்களிப்பு விண்ணப்பங்களில் 40,000 விண்ணப்பங்கள் நிராகரிக்கப் பட்டுள்ளன.

பூர்த்தி செய்வதில் குறைபாடுகள் இருந்ததால் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்பட்டுள்ளன.

உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் தபால் மூல வாக்களிப்பதற்காக 676,873 விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டதாக தேர்தல் ஆணை யாளர் நாயகம் சமன் சிறி ரத்நாயக்க தெரிவித்தார்.

குருநாகல் மாவட்டத்தில் தபால்மூல வாக்களிப்பதற்கு அதிகளவாக 75,579 பேர் தகுதி பெற்றுள்ள னர். அனுராதபுரம் மாவட்டத்தில் 55,750 பேரும், கண்டி மாவட்டத்தில் 54,012 பேரும் தபால் மூலம் வாக்களிக்க தகுதி பெற்றுள்ளனர். முல்லைத்தீவு மாவட்டத்தில் தபால் மூல வாக்காளர்கள் குறைவாக உள்ளனர், அந்த எண்ணிக்கை 3,187 ஆகும்.

கடந்த 2020 பாராளுமன்றத் தேர்தலில் நிராக ரிக்கப்பட்ட தபால் மூல வாக்களிப்பு விண்ணப்பங்களின் எண்ணிக்கை 47,430 ஆகும். அந்தத் தேர்தலில், தபால் மூலம் வாக்களிக்க 753, 037 விண்ணப்பங்கள் பெறப்பட்டன, ஏற்றுக்கொள்ளப்பட்ட விண்ணப்பங்களின் எண்ணிக்கை 705,085 ஆகும்.

(அ)

# மனித பாவனைக்கு தகுதியற்ற தேங்காய் எண்ணெய் இறக்குமதி

கொழும்பு, பெப். 11

வெளிநாடுகளால் நிராகரிக்கப்பட்ட மனித பாவனைக்கு தகுதியற்ற கழிவுகளுடன் கூடிய அதிகளவிலான தேங்காய் எண்ணெய் இலங்கைக்கு இறக்குமதி செய்யப்பட்டு களஞ்சியப்படுத்தப்பட்டுள்ளதாக தேங்காய் எண்ணெய் உற்பத்தியாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் குறித்த சங்கத்தின் தலைவர் புத்திக டி சில்வா தெரிவிக்கையில்- கடத்தல்காரர்களிடம் இருந்து பணத்தைப் பெற்றுக் கொண்ட அதிகாரிகள் இதை கருத்திற் கொள்ளாது செயற்படுகின்றனர்.

அத்துடன் தேங்காய் எண்ணெய் இந்தியா மற்றும் பிற அண்டை நாடுகளில் இருந்து மிகக் குறைந்த விலையில் இறக்குமதி செய்யப்படுகின்றது-என்றார்.

(அ)

# ஊழல் குற்றச்சாட்டுகளுக்கு உள்ளான உள்ளூராட்சி தலைவர்கள் பதவிநீக்கம்?

கொழும்பு, பெப். 11

இலஞ்சம் மற்றும் ஊழல் குற்றச்சாட்டுகளுக்கு உள்ளான உள்ளூராட்சி சபைகளின் தலைவர்களின் பதவிகளை இடைநிறுத்துவதற்கு புதிய சட்ட ஏற்பாடுகளை கொண்டுவர அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

இது தொடர்பான சட்ட ஏற்பாடுகள் விரைவில் பாராளுமன்றத்துக்கு கொண்டு வரப்படும் என உள்ளூாராட்சி இராஜாங்க அமைச்சர் ஜனக வக்கம்புர தெரிவித்துள்ளார்.

தற்போதுள்ள சட்டத்தின் கீழ் இலஞ்ச குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டாலும், அது நிரூபிக்கப்படும் வரை மேயர்கள் மற்றும் உள்ளூராட்சி சபைத் தலைவர்கள் பதவியில் இருக்க அனுமதிக்கப்படுவதாகவும் இராஜாங்க அமைச்சர் குறிப்பிட்டார்.

# குடிவரவு திணைக்களத்துக்கு மேலதிக பொலிஸ் பாதுகாப்பு

கொழும்பு, பெப். 11

பத்தரமுல்லை - சுஹுருபாய வில் அமைந்துள்ள குடிவரவு குடியகல்வு திணைக்களத்தின் கடவுச்சீட்டு வழங்கும் நிலையத்துக்கு மேலதிக பொலிஸ் பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளது.

குடிவரவு மற்றும் குடியகல்வு கட்டுப்பாட்டாளர் ஜெனரல் ஹர்ஷ இலுக்பிட்டிய விடுத்த கோரிக்கைக்கு அமையவே இவ்வாறு மேலதிக பொலிஸ் பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளது.

பிரதான பொலிஸ் பரிசோதகர் தலைமையிலான குழுவொன்றும் கூடுதலாக இணைக்கப்பட்டுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

குடிவரவு குடியகல்வு திணைக்களத்தின் கடவுச்சீட்டு வழங்கும் பிரிவில் பல்வேறு முறைகேடுகள் நடப்பதாக முறைப் பாடுகள் கிடைத்துள்ள நிலையிலேயே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

ஒரு நாள் சேவையின் கீழ் கடவுச்சீட்டுகளை பெற்றுக் கொள்வதற்காக இந்த நாட்களில் பெருமளவானவர்கள் வருகை தருவதாகவும் குடிவரவு மற்றும் குடியகல்வு கட்டுப்பாட்டாளர் ஜெனரல் ஹர்ஷ இலுக்பிட்டிய தெரிவித்தார். (அ)

## பருத்தித்துறை...

பருத்தித்துறை முனையான சக்கோட்டை பகுதிக்கு வருகை தந்திருந் தார். முன்ன தாக அவர் நெல்லியடி மத்திய கல்லூ ரியில் இந்திய உதவித் திட்டத்தில் அமைக்கப்படும் கட்டடத் தையும் நேரில் சென்று பார்வையிட்டார் என்பது குறிப்பிடத்தக்கது.

இதேசமயம், கடந்த 2021 டிசெம்பர் மாதம் இலங்கைக்கான சீனத் தூதுவர் கி சென்ஹொங் யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்திருந்தார். இதன்போது, அவர் பருத்தித்துறை முனையையும் சென்று பார்வையிட்டதுடன், இங்கி ருந்து இந்தியா எவ்வளவு தூரம் என்று கேள்வி எழுப்பியிருந்தார். இந்த விடயம் இராஜதந்திர ரீதியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது.

இந்த நிலையில், நேற்றைய தினம் இந்திய அமைச்சர் தலைமையிலான குழு வினர் பருத்தித்துறை முனையை சென்று பார்வையிட்டுள்ளார். இவரின் வருகை சீனாவுக்கான இராஜதந்திர பதிலடியா கவும் கருதப்படுகின்றது. (ஐ-02)

## ஜனாதிபதியின்...

படாத நிலையிலும் பொருளாதார பின்னடைவு நேரத்தில் சுதந்திர தின விழா கொண் டாட்டம் இரண்டாவது தடவையாக தேவையில்லை எனக் கூறி யுமே யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் இந்தப் போராட்டத்துக்கு அழைப்பு விடுத்துள்ளது.

இதேசமயம், சுதந்திர தினக் கொண் டாட்டத்துக்கு எதிர்ப்பு தெரிவிப்பதற் காக இன்று பிற்பகல் 3 மணியளவில் யாழ். மத்திய பேருந்து நிலையம் முன் பாக ஒன்றுகூடுமாறு தமிழ்த் தேசிய மக் கள் முன்னணியின் பேச்சாளர் க. சுகாஷ் அழைப்பு விடுத்துள்ளார். (ஐ)

## யாழ்.கலாசார...

அகில இலங்கை கம்பன் கழகம் நடத் தும் யாழ். கம்பன் விழா நேற்று நல்லூர் துர்க்கா மணி மண்டபத்தில் நடைபெற் றது. யாழ்ப்பாணத்துக்கு நேற்றுமுன் தினம் வருகை தந்த பாரதிய ஜனதா கட்சி யின் தலைவர் கே. அண்ணா மலை நேற்று இந்த நிகழ்வில் பங்கேற்றார். மக்கள் நிறைந்திருந்த இந்த அரங்கின் மேடை யிலேயே ஆறு. திருமுருகன் இந்தக் பகிரங்கக் கோரிக்கையை முன்வைத்தார்.

அவர் தனது உரையில் மேலும் தெரி வித்தவை வருமாறு,

“சொல்லொணா துன்பங்களை அனுப வித்த தமிழினம் தன் மொழியை - பண் பாட்டை - அடையாளங்களை தொலைத்து விடாமல் இவ்வாறான தமிழ் சார்ந்த விழாக்களை தொடர்ந்தும் நடத்தி வருகிறது.

அப்படியான விழாக்களில் ஒன்றான கம்பன் விழாவில் இந்தியாவின் இளம் தமிழ் அரசியல்வாதியான அண்ணா மலை திடீரென கலந்து கொண்டமை எமக்கு மகிழ்ச்சியை ஏற்படுத்தியிருக் கிறது.

“இந்த சந்தர்ப்பத்தில் அண்ணாமலை யிடம் ஒரு வேண்டுகோளை முன்வைக்கி றேன். தமிழர்களின் மண்ணில் தமிழர்க ளுக்காக இந்திய அரசால் கட்டிக் கொடுக்கப்பட்ட கலாச்சார மண்ட பத்தை தமிழர்களிடம் கையளிக்க வேண் டும் அதற்கு நீங்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதே எமது எதிர்பார்ப் பாகும் - என்று கூறினார்.

இதேசமயம், யாழ்ப்பாணம் கலாசார மையம் யாழ். மாநகர சபையின் நிர்வா கத்தின் கீழேயே கையளிக்கப்படும் என்று முன்னர் கூறப்பட்டது. ஆனால், மத்திய அரசாங்கம் அதனை மாநகர சபையிடம் வழங்காதிருக்க பல முயற்சி களை எடுத்துள்ளது. இதனிடையே, இன்றைய நிகழ்விலகூட யாழ். மாநகர சபை புறக்கணிக்கப்பட்டுள்ளதாக குற்றச்சாட்டுகள் வெளியாகியுள்ளன. இந்த நிலையிலேயே ஆறு. திருமுருகன் மேற்படி கோரிக்கையை முன்வைத் துள்ளார். (ஐ)

(தொடர்புடைய செய்தி பக்கம் 2இல்)

## இன்றைய...

பங்கேற்கிறார். இந்த நிகழ்வுக்கு எதிர்ப் புத் தெரிவித்து போராட்டம் நடத்த தமிழ் தேசிய மக்கள் முன்னணி அழைப்பு விடுத்திருந்தது. இந்த நிலையில், இந்த போராட்டத்துக்கு தடை உத்தரவு கோரி யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றில் பொலிஸார் விண்ணப்பம் செய்தனர்.

பாராளுமன்ற உறுப்பினர்கள் கஜேந் திரகுமார் பொன்னம்பலம், செல்வராஜா கஜேந்திரன் மற்றும் சட்டத்தரணி க. சுகாஷ் உள்ளிட்ட 8 பேருக்கு எதிராக இந்த தடை உத்தரவு கோரப்பட்டது. யாழ்ப்பாணம் நீதிமன்ற பதில் நீதிவான் பொலிஸாரின் விண்ணப்பத்தை முகத் தோற்றளவில் ஏற்று தடை கட்டளையை வழங்கினார். (ஐ)

## இன்று...

தமிழகத் தலைவர் அண்ணாமலையும் பங்கேற்கவுள்ளனர்.

இந்தியாவின் நிதியுதவில் - சுமார் 120 கோடி ரூபா செலவில் 12 மாடிக ளுடன் கொண்டதாக இந்த மண்டபம் அமைக் கப்பட்டுள்ளது. இந்தக் கலாசார நிலை யத்தில் 600 பேரை உள்ளடக்கக் கூடிய தான திரையரங்கப் பாங்கிலான திட்ட ஏற்பாட்டுடனான மண்டபம், இணைய தள ஆராய்ச்சி வசதிகளுடன் கூடிய பல்நோக்கு அமைப்பிலான நூல கம், கண்காட்சி மற்றும் கலைக்காட்சி வெளி யிடம், அருங்காட்சியகம், நிறுவன அலகுகள், சங்கீத மற்றும் அதனுடன் இணைந்த இசைக்கருவிகள், நடனங்கள், மொழிகள் உள்ளிட்ட வகுப்புக்களை நடத்துவதற்கான வசதிகளும் உள்ளன.

இதேவேளை, இந்நிகழ்வு முடிந்த பின்னர் மாலை 5 மணிக்கு இலங்கை யின் சுதந்திர தின நிகழ்வுகள் இந்த மண்டபத்தில் நடைபெறும். இதில் 5 மாவட்டங்களையும் பிரதிநிதித்துவப் படுத்தும் சுதந்திர நாள் ஊர்தி பவனி நடைபெறும். இரவு 7 மணிக்கு முற்ற வெளி மைத்தானத்தில் இசை நிகழ்ச்சி நடைபெறவுள்ளது என்பதும் குறிப் பிடத்தக்கது. (ஐ)

## இந்திய...

யாழ்ப்பாணம் துர்க்காமணி மண்டபத் தில் நேற்று செய்தியாளர்களை சந்தித்த போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

இந்துக்களின் புனித தலமான திருக் கோணேஸ்வரம் இன்னும் கடற்படை யின் கட்டுப்பாட்டுக்குள்ளும் தொல்லி யல் திணைக்களத்தின் கட்டுப்பாட்டி லும் இருக்கிறது. இதனால், திருக் கோணேஸ்வரம் ஆலயத்தை சுதந்திர மாகப் பரிபாலனம் செய்ய முடியாத நிலையுள்ளது. திருக்கேதீஸ்வர ஆலய திருப்பணியை இந்திய அரசாங்கம் பொறுப்பேற்று செய்ததுபோல திருக் கோணேஸ்வர ஆலய திருப்பணியையும் பொறுப்பேற்று செய்ய வேண்டும்.

இது தொடர்பாக நாங்கள் பல தடவைகள் கோரிக்கை விடுத்துள்ளோம் இந்திய உயர்ஸ்தானிகர் திருக்கோணேஸ் வரம் சென்று எல்லாவற்றையும் பார்வை யிட்டு சென்றார். ஆலயத்துக்கு சமீபமாக தற்போது முறையற்ற வகையில தென்னி லங்கையில் இருந்து கொண்டு வரப்பட் டவர்களால் ஆக்கிரமிக்கப்படு கின்றது. நீண்ட வரலாறு கொண்ட இந்த ஆல யத்தை பாதுகாக்க அனைவரும் முன் வரவேண்டும். குறிப்பாக இந்திய அரசாங் கம் துரித நடவடிக்கை எடுக்கவேண்டும்.

கிழக்கு மாகாணத்தில் இந்தியத் துணைத்தூதரகம் அமைக்கப்பட வேண் டும் என பல கோரிக்கைகள் முன் வைக் கப்பட்டு வரும் நிலையில் இது வரை அமைக்கப்படவில்லை. கிழக்கு மாகா ணத்தை சேர்ந்த மக்கள் இந்தியா வுக்கு தலயாத்திரை, மருத்துவம் அல்லது உயர்கல்விக்காக இந்தியா செல்வதென் றால் பயணி அனுமதி பெற கொழும்பு செல்ல வேண்டியுள்ளது. இதனால் பல கஷ்டங்களை அப்பகுதி மக்கள் அனுப வித்து வருகின்றார்கள். எனவே, இந்திய துணைத் தூதரகம் கிழக்கு மாகாணத் தில் அமைக்கவேண்டும் - என்றும் சொன்னார். (ஐ)

# அறிவித்தபடி தேர்தல் நடக்கும் நீதிமன்ற தீர்ப்பால் நம்பிக்கை!

### ஜீ. எல். பீரிஸ் சொல்கிறார்

கொழும்பு,பெப். 11

திட்டமிட்ட தினத்தில் தேர்தலை நடத்துமாறு நீதிமன்றம் அளித்துள்ள தீர்ப்பு பிரஜைகளின் வாக்களிக்கும் உரிமையை உறுதிப்படுத்தியுள்ளது. தேர்தல் இடம்பெறுமா இல்லையா என்ற வாத பிரதிவாதங்கள் நிறைவுக்கு வந்துள்ளதாக பாராளுமன்ற உறுப்பினர் பேராசிரியர் ஜீ. எல். பீரிஸ் தெரிவித்தார்.

தேர்தலை திட்டமிட்டவாறு நடத்து மாறு நேற்று வெள்ளிக்கிழமை உயர் நீதிமன்றம் தீர்ப்பளித்ததையடுத்து ஊடகங்களுக்கு கருத்து வெளியிடும் போது இதனைத் தெரிவித்த அவர் மேலும் குறிப்பிடுகையில் ,

பிரஜைகளுக்கு காணப்படும் வாக்களிக்கும் உரிமை இந்த நீதிமன்றத் தீர்ப்பின் ஊடாக உறுதிப்படுத்தப்பட் டுள்ளது. நாம் தேர்தலுக்கு தயாராகிக் கொண்டிருப்பதைப் போன்று மக்களும் தேர்தலுக்கு தயாராக வேண்டும். மார்ச் 9ஆம் திகதி தேர்தல் நடைபெறும் என்பதில் எவ்வித சந்தேகமும் இல்லை. - என்றார். (ஐ)

## 10ஆண்டுகளில்...

நாங்கள் மீண்டெழ வேண்டும் என்றால் பத்து வருடத்துக்கான அபிவிருத்தித் திட்டம் அவசியமானதாகும். நாங்கள் இதுவரை பெற்ற கடன்களை மீளச் செலுத்த வேண்டியிருக்கிறது. இந்த வருடமும், இனி வரும் சில வருடங்க ளும் கடன்களைப் பெற வேண்டியும் இருக்கிறது. இருக்கிற கடனையும் இனிப் பெறப்போகும் கடனையும் அடைக்க வேண்டிய தேவை இருக்கிறது என்றும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணத்தில் நேற்று மாலை நடைபெற்ற கலந்துரையாடலிலேயே அவர் மேற்படி தெரிவித்தார்.

மேலும், நாங்கள் குறுகிய காலத்துக் குள் முடிக்க வேண்டிய பிரச்னைகள் பற்றிப் பேசிக் கொண்டிருக்கிறோம். அவை தொடர்பில் நிதிப்பற்றாக்குறை இருக்கிறது. எதிர்காலத்தில் அவை பற்றிப் பேசித் தீர்மானம் எடுப்போம். இன்று நாட்டில் நிலவுகின்ற பொருளா தார நிலையில் இருந்து நாங்கள் மீண் டெழ வேண்டுமென்றால் பத்து வருடத்துக்கான அபிவிருத்தித் திட்டம் அவசியமானதாகும். நாங்கள் இது வரை பெற்ற கடன்களை மீளச் செலுத்த வேண்டியிருக்கிறது. இந்த வருடமும், இனி வரும் சில வருடங்களும் கடன் களைப் பெற வேண்டியிருக்கிறது. இந் தக் கடனையும், இனிப் பெறப்போகும் கடனையும் அடைக்க வேண்டிய தேவை இருக்கிறது. அதேநேரத்தில் அந்நியச் செலவாணிக் கையிருப்பையும்பேண வேண்டிய அவசியம் இருக்கிறது. எனவே ஒரு ஏற்றுமதி சார்ந்த பொரு ளாதாரத்தை உருவாக்குவது பற்றி நாங் கள் சிந்திக்கிறோம். மிகவும் போட்டித் தன்மை மிக்க ஒரு பொருளாதாரத்தைக் கட்டியெழுப்ப வேண்டிய தேவை இருக்கிறது.

நாங்கள் இதற்கென சில மாகாணங் களைத் தேர்ந்தெடுத்திருக்கிறோம். அந்த மாகாணங்களில் வடக்கு மாகாணமும் ஒன்று. இந்த விடயங்களை நாம் முன் னெடுத்து வரும் போது வடக்கின் பொருளாதாரம் மிகவும் உயர்ந்த நிலையை அடையும். வடக்கு, வட மத்தி மற்றும் கிழக்கு மாகாணங்களிலேயே நாங்கள் அபிவிருத்தி சார்ந்து மிக முக்கிய கவனம் செலுத்துகிறோம்.

விவசாயத்தை முன்னேற்றுவது எமது திட்டத்தின் முக்கிய அம்சமாகும். கிளி நொச்சியிலிருந்து குமண வரை நெல் உற்பத்தியைப் பெருக்குவதற்கான திட்டங்களை முன்னெடுத்து வருகின் றோம். ஓர் ஏக்கரில் இருந்து ஏழு மெற்றிக் தொன் அறுவடையைப் பெற் றுக் கொள்வது எங்களுடைய இலக்கா கும். இதற்காக நவீன தொழில்நுட் பத்தை உள்வாங்க வேண்டிய தேவை உள்ளது. வடக்கில் நெல் உற்பத்தியை மேற்கொண்டால் ஏனைய பகுதிகளில் ஏற்றுமதி சார் பயிர்ச் செய்கைகளை மேற்கொள்ளக் கூடியதாக இருக்கும்.

யாழ்ப்பாணத்தை பொறுத்த மட்டில் அடுத்து வரும் 10 ஆண்டுக்குள் உயர் தொழில் நுட்பத்தைப் பயன்படுத்தி விவசாயத்தையும் கடற்றொழிலையும் மேம்படுத்த நாங்கள் திட்டமிட்டுள் ளோம் . இந்திய மீனவர்களால் பெரும் அச்சுறுத்தலுக்கு உள்ளாகியிருக்கும் இழுவை மடிப் படகுப் பிரச்னைக்கும் அமைச்சர்களுடன் கலந்துரையாடி விரை வில் தீர்வைப் பெற்றுத் தர இருக்கிறோம்.

வடக்கு மாகாணத்துக்கான நீர் விநியோகம் தொடர்பில் மல்வத்து ஓயாவில் இருந்து நீரைக் கொண்டு வருவதற்கான திட்டமொன்றையும் நாங்கள் வைத்திருக்கிறோம். அத்துடன், ஆனையிறவு களப்புப் பகுதியில் உவர் நீரில்லாமல் நன்னீரைத் தேக்கி வைப்ப தற்கான திட்டம் ஒன்றும், பூநகரி குளத் தையும் அபிவிருத்தி செய்யவுள்ளோம்.

மேலும், திருகோணமலையில் இருந்து மன்னார் வரை சுற்றுலாத் துறையை அபிவிருத்தி செய்வதற்கும், வடக்கிலுள்ள இந்து ஆலயங்களுக்கு இந்தியாவிலிருந்தும், மலேசியாவிலிருந் தும் சுற்றுலாப் பயணிகளை அழைத்து வருவதற்கும் புதிய ஹோட்டல்களை அமைப்பதற்கும் திட்டமிட்டுள்ளோம்.

மாற்று வலு மின் உற்பத்தித் திட்டங் களும் இருக்கின்றன. அத்துடன் கடற் பகுதியில் காற்றாலை மின்னுற்பத்தி மற்றும் உயிர்வாயு உற்பத்தி பற்றியும் ஆராய்ந்து வருகிறோம். இதன் மூலம் நாட்டிலுள்ள பசுமை சக்தி உற்பத்தித் தேவைக்கு வடக்கு மாகாணம் பங்களிக் கும் - என்றார். (ஐ)

## திட்டமிட்ட...

ஆர். விஜயசுந்தர இந்தத் தேர்தலை இடைநிறுத்த உத்தரவிடுமாறு கோரி எழுத்தாணை மனுவை தாக்கல் செய் தார்.

“நாட்டில் பெரும் பொருளாதார நெருக்கடி நிலவும் நிலையில், உள்ளூ ராட்சி மன்ற தேர்தலை நடத்துவதால் நாட்டுக்கோ, பொதுமக்களுக்கோ எந் தப் பயனும் ஏற்படாது” எனக் கூறிய அவர், தேர்தலை தடுக்க தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கு உத்தரவிடுமாறு கோரிக்கை விடுத்திருந்தார்.

அத்துடன் உள்ளூராட்சி மன்றத் தேர்தலை தாமதிக்காது நடத்துவதற்கு தேர்தல் ஆணைக்குழுவுக்கு உத்தரவிட கோரி, ஐக்கிய மக்கள் சக்தி உள்ளிட்ட எதிர்க்கட்சிகளை சேர்ந்த பாராளுமன்ற உறுப்பினர்கள் குழு தாக்கல் செய்த மனுக்களும், உச்ச நீதிமன்றத்தில் நேற்று விசாரிக்கப்பட்டன.

ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச் செயலாளர் ரஞ்சித் மத்துமபண்டார மற்றும் பேராசிரியர் ஜீ. எல். பீரிஸ் ஆகியோரால் ஒரு மனுவும், சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளர் தயாசிறி ஜயசேகர, லக்ஷ்மன் கிரியெல்ல, அனுர பிரியதர்ஷன யாப்பா மற்றும் எம்.ஏ. சுமந்திரன் ஆகியோரால் மற்றைய மனு வும் தாக்கல் செய்யப்பட்டன என்பது குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, இந்த வழக்குடன் தொடர்புடைய மற்றொரு வழக்கை எதிர்வரும் 23ஆம் திகதிக்கு நீதிமன்றம் ஒத்திவைத்துள்ளது என்பதும் குறிப்பி டத்தக்கது. (ஐ)

ஈழநாடு
Eelanadu

# தமிழர்களுக்கு '13' அல்ல சமவுரிமையே அவசியம்

## கூறுகிறார் அநுரகுமார திஸாநாயக்க



கொழும்பு, பெப். 11

**"அரசியலமைப்பின் 13 ஆவது திருத்தச்சட்டம் பிரச்னைக்கான தீர்வு அல்ல. அனைத்து இன மக்களினதும் உரிமைகளை பாதுகாக்கக்கூடிய புதியதொரு அரசமைப்பே நாட்டுக்கு தேவை. எமது ஆட்சியில் இதனை செய்வோம். மாறாக ரணிலின் '13' விளையாட்டில் சிக்குவதற்கு நாம் தயாரில்லை." - என்று தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்தார்.**

இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு ,

தமக்கான உரிமைகள் மற்றும் 13 ஆவது திருத்தச்சட்டம் என்பன தமிழர்களுக்கு முக்கிய விடயங்களாக உள்ளன. இவை அவர்களுக்கு வலியை ஏற்படுத்தக்கூடிய பிரச்னைகளாக உள்ளன. ஆனால் மக்களின் இந்த வலியை விளையாட்டு பொருளாகவே ரணில் உணர்வார். ஒரு உதைப்பந்தாட்டம் போலவே கருது வார்.

அதுமட்டுமல்ல அரசியல் களத்திலே தனது அரசியல் விளையாட்டை முன்னெடுப்பதற்காக அந்த பந்தை அவர் தற்போது பயன்படுத்துகின்றார். ரணிலின் இந்த களத்தில் நாம் இறங்கவேண்டுமா? கோல் கீப்பராக செயற்படவேண்டுமா? அதற்கு நாம் தயாரில்லை.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, பிரதமர் தினேஷ் குணவர்தன, மொட்டு கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ஷ ஆகியோர் ஒன்றாக அரசில் உள்ளனர். இவர்கள் ஒன்றாக கையொப்பமிட்டு 13 குறித்த உறுதிமொழியை வழங்கட்டும். அவர்கள் அவ்வாறு செய்யமாட்டார்கள். தற்போது என்ன நடக்கின்றது? வழங்குவேன் என்கிறார் ரணில். மகிந்த அணி வேண்டாம் என்கிறது. தினேஷ் குணவர்தனவின் பிக்குகள் வீதியில் இறங்குகின்றனர். இப்படியான சண்டையை அவர்கள் எதிர்பார்க்கின்றனர். இதில் நாம் ஈடுபடவேண்டுமா?

எமது நிலைப்பாடு என்ன? மாகாணசபை முறைமையோ, 13 பிரச்னைகளுக்கு தீர்வு அல்ல. அனைத்து இன மக்களினதும் உரிமைகளை பாதுகாக்ககூடிய புதியதொரு அரசமைப்பு, மக்கள் கருத்து கணிப்புடன் நிறைவேற்றப்பட வேண்டும் - என்றார். (அ)

# மின்வெட்டுக்கு எதிரான மனு நேற்று நிராகரிப்பு!

கொழும்பு, பெப். 11

தடையில்லா மின்சாரம் வழங்குவது தொடர்பாக இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு தாக்கல் செய்த மனுவை மேன்முறையீட்டு நீதிமன்றம் நிராகரித்துள்ளது.

தற்போது நடைபெற்று வரும் க.பொ.த உயர்தரப் பரீட்சைகளின்போது தடையில்லா மின்சாரம் வழங்குவதற்கு இலங்கை மின்சார சபைக்கு ரிட் உத்தரவை பிறப்பிக்குமாறு கோரி பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவால் நீதிமன்றில் மனு தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

அது நேற்று விசாரணைக்கு அழைக்கப்பட்டபோது, பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு தாக்கல் செய்த மனுவை மேன்முறையீட்டு நீதிமன்றம் பரிசீலிக்காமல் நிராகரித்தது.

2023 பெப்ரவரி 17 ஆம் திகதி பரீட்சைகள் முடியும் வரை தடையில்லா மின்சாரம் வழங்குமாறு பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு, மின்சாரசபையை வற்புறுத்தி வருகிறது.

இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவில் பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு மற்றும் மின்சார சபை உட்பட மின்சாரத்துறையின் பல பங்குதாரர்களுடனான கலந்துரையாடலின்போது தடையில்லா மின்சாரம் வழங்குவதற்கு உடன்பாடு எட்டப்பட்டது.

எவ்வாறாயினும், தற்போதைய சூழ்நிலையில் தடையற்ற மின்சாரத்தை வழங்க முடியாது எனக் கூறி, சில நாட்களுக்குப் பிறகு, மின்சாரசபை அதன் தினசரி திட்டமிடப்பட்ட மின்வெட்டுகளைத் தொடர்ந்தது. (அ)

# அநுரகுமார திஸாநாயக்கவுக்கு சவால் விடுத்தார் நிமல் லான்சா



கொழும்பு, பெப். 11

நாட்டின் பொருளாதார நிலைவரம் தொடர்பில் தன்னுடன் விவாதம் நடத்துவதற்கு வருமாறு ஜே.வி.பியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்கவுக்கு பாராளுமன்ற உறுப்பினர் நிமல் லான்சா சவால் விடுத்துள்ளார்.

ஏதேனும் காரணத்தைக்கூறி நழுவாமல் தனது சவாலை அநுர ஏற்கவேண்டும் எனவும் லான்சா கூறினார்.

ஜனாதிபதியின் கொள்கை விளக்கஉரை தொடர்பில் பாராளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இந்த சவாலை விடுத்தார். (அ)

# ஈழத் தமிழரின் பிரச்னைகளை மோடிக்கு தெளிவுபடுத்துங்கள்!

## யாழ். வந்துள்ள இந்திய பிரதிநிதிகளிடம் இலங்கை இந்து மாமன்றம் வேண்டுகோள்

யாழ்ப்பாணம், பெப். 11

யாழ்ப்பாணம் வந்துள்ள இந்திய இணை அமைச்சர் முருகன் மற்றும் இந்திய காங்கிரஸின் தமிழகத் தலைவர் அண்ணாமலை ஆகியோர் விடுவிக்கப்படாத காணிகள், தீர்க்கப்படாத தமிழர்களின் பிரச்னைகளை இந்திய பிரதமருக்கு தெளிவுபடுத்தவேண்டும் என அகில இலங்கை இந்து மாமன்றம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

யாழ்ப்பாணத்தில் நேற்று காலை இடம்பெற்ற ஊடக சந்திப்பில் அகில இலங்கை இந்து மாமன்ற உபதலைவர் ஆறுதிருமுருகன் இந்த வேண்டுகோளை விடுத்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

நீண்டகாலமாக தீர்க்கப்படாத தமிழர் பிரச்னைக்கு முற்றுப்புள்ளி வைக்க இந்தியா துரிதமாக செயற்படவேண்டும்.

இருநூறு வருடங்கள் இலங்கை பொருளாதாரத்துக்கு உழைத்த மலையக மக்களுக்கு ஒரு துண்டு காணியில்லை. அவர்கள் தற்போதும் அடிமை வாழ்க்கையையே வாழ்ந்து வருகின்றனர்.

இந்துக்களின் புனித ஆலயமான திருக்கோணேச்சரம் இலங்கைக் கடற்படை, தொல்லியல் திணைக்களம் ஆகியவற்றின் கட்டுப்பாட்டின் கீழ் காணப்படுகிறது. நீண்டகாலமாக செய்யப்படாத திருக்கோணேச்சரத்தின் திருப்பணியை இந்தியா செய்யவேண்டும்.

ஆலயம் அருகே பெட்டிக்கடை போட்டு நிரந்தர கட்டடம் அமைக்க முயற்சிக்கப்படுகிறது. இலங்கை ஜனாதிபதி, இந்திய பிரதமர் ஆகியோருக்கு கடிதம் அனுப்பிய போதும் நிரந்தர தீர்வு எட்டப்படவில்லை - என்றார். (அ-03)

# இரத்தினபுரியில் விபத்து; 12 பேர் வைத்தியசாலையில்

கொழும்பு, பெப்.11

பலாபத்தல பகுதியிலிருந்து இரத்தினபுரி நோக்கி பயணித்த இ.போ.சபையின் இரத்தினபுரி டிப்போவுக்கு சொந்தமான பஸ்ஸொன்று இந்துருவ பிரதேசத்தில் வீதியை விட்டு விலகி 30 அடி பள்ளத்தில் கவிழ்ந்து விபத்துக்குள்ளானதில் 12 பேர் காயமடைந்துள்ளனர் என பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்று பிற்பகல் 01.00 மணியளவில் இடம்பெற்ற குறித்த விபத்தில் காயமடைந்த அனைவரும் கிளிமலே வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

விபத்து இடம்பெற்ற போது பஸ்ஸில் சுமார் 45 பேர் பயணித்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

காயமடைந்தவர்களின் நிலைமை கவலைக்கிடமாக இல்லை எனவும் இந்த பஸ் குருவிட்ட- எரட்ன சிறிபா பாதையில் சேவையில் ஈடுபடும் பஸ் எனவும் பொலிஸார் கூறினர்.

சிவனொளிபாதமலை யாத்திரிகர்களின் வசதிக்காக இந்த நாட்களில் விசேட சேவையாக இது ஈடுபடுத்தப்படுகிறது.

இந்துருவ பகுதியில் உள்ள வளைவில் பஸ் சுமார் 30 அடி சாய்வில் கவிழ்ந்து பஸ் விபத்துக்குள்ளானது. பஸ்ஸில் பயணித்தவர்களில் சிவனொளிபாதமலைக்கு சென்றவர்களும்இருக்கலாம் என சந்தேகிக்கப்படுவதாக பொலிஸார் குறிப்பிட்டனர். (அ)

# நெல்லுக்கு உத்தரவாத விலை அரசு உடன் வழங்கவேண்டும்!

## வவுனியா விவசாயிகள் ஆர்ப்பாட்டம்

வவுனியா, பெப். 11

நெல்லுக்கான உத்தரவாத விலையை வழங்குமாறு கோரி வவுனியா, ஓமந்தை விவசாயிகள் ஆர்ப்பாட்டப் பேரணி ஒன்றை நேற்று முன்னெடுத்தனர்.

வவுனியா, தாண்டிகுளம் விவசாய கல்லூரிக்கு முன்பாக ஆரம்பித்த ஆர்ப்பாட்டப் பேரணி ஏ-9 வீதி ஊடாக வவுனியா மாவட்ட செயலகம் வரை இடம்பெற்றது.

இதன்போது ஆர்ப்பாட்டப் பேரணியில் ஈடுபட்ட விவசாயிகள் "பயிர் அழிவுக்கான நட்டஈட்டை வழங்கு, விவசாயிகளின் நாளைய எதிர்காலத்துக்கு வழியை ஏற்படுத்துங்கள், நெல்லுக்கான உத்தரவாத விலையை வழங்கு என எழுதப்பட்ட பதாதைகளையும் தாங்கியிருந்தனர்.

மாவட்ட செயலக வாயிலை அடைந்த விவசாயிகள் சார்பாக ஒரு குழுவினர் மாவட்ட அரசாங்க அதிபர் பீ.ஏ.சரத் சந்திரவிடம் மகஜர் ஒன்றை கையளித்ததுடன், தமது கோரிக்கை தொடர்பிலும் தெரியப்படுத்தினர்.



இதனையடுத்து மாவட்ட அரச அதிபர் பீ.ஏ.சரத் சந்திர இது குறித்து ஜனாதிபதியின் கவனத்திற்கு கொண்டு சென்றார் எனவும், ஒரு கிலோவுக்கு 100 ரூபாய்க்கு குறையாத வகையில் உத்தரவாத விலையை அரசாங்கம் உடனடியாக வர்த்தமானி மூலம் வெளியிடவுள்ளதாக தெரிவிக்கப்பட்டதாகவும் அரசாங்க அதிபர் விவசாயிகளிடம் இதன்போது உறுதியளித்துள்ளார். (அ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 11.02.2023 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.